பக்கங்கள் : பதினாறு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 20 வள்ளுவர் ஆண்டு 2036 மாசி 20 வெள்ளிக்கிழமை (04.03.2005) UTHAYAN-A Lively National Tamil Dailyகதிர் :98

## நகருக்குள் சட்டவிரோதமாக சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்த இரவோடு இரவாக ஜே.வி.பி. சதி நடவடிக்கை

# திருமலையில் நேற்றுப் பதற்றம்!

திருகோணமலை.மார்ச்4

**திருகோணமலை நகரத்தில், பஸ்நிலையம், மணிக்கூண்டுக்கோபுரம், மீன்சந்தை ஆகியவற்றுக்குப் பக்கத்தில் கடற்கரையோரமாக உள்ள - நகரசபைக்குச் சொந்தமான - கரையோரக் காணிகளில் சட்டவிரோதமாகச் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு நேற்றுமுன்தினம் இரவோடு இரவாக எடுக்கப்பட்ட முயற்சிகளை அடுத்து, நேற்று நகரில் பெரும் பதற்றம் ஏற்பட்டுள்ளது. எந்த நேரத்திலும் ஏதும் நிகழலாம் என்ற அச்சம் மாலை வரை தொடர்ந்தது. பின்னர் நிலைமை வழமைக்குத் திரும்பியது.**

**ஜே.வி.பி. ஆதரவோடு மேற்கொள்ளப்படும் இந்தத் திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்ற முயற்சிகளைத் தடுத்து நிறுத்தாமல் பொலீஸார் வேடிக்கை பார்த்தது தமிழர்களைக் கடுஞ்சீற்றத்துடன் கொதித்தெழ வைத்திருக்கின்றது.**

இதனால், நகரத்தின் பல்வேறு இடங்களிலும் தமிழ் மக்களால் வீதிகள் மறிக்கப்பட்டு போக்குவரத்து முடக்கப்பட்டன. எனினும், நேற்று மாலை தடைகள் அகற்றப்பட்டு பொலீஸ் பாதுகாப்புடன் போக்குவரத்து இடம்பெற்றது.

இந்தத் திட்டமிட்ட - சட்டவிரோத சிங்களக் குடியேற்றத்தைக் கைவிட்டுவிட்டதாக அரசு அறிவிக்கும் வரை திருகோணமலை நகரையே ஸ்தம்பிக்கச்செய்யும் விதத்தில் பூரண கதவடைப்புச் செய்யுமாறு திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவை நேற்று அழைப்பு விடுத்திருந்தது.



சிங்களக் குடியேற்றத்தை எதிர்த்து திருமலையில் தமிழ் இளைஞர்கள் வீதிகளை மறித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டபோது...

திருகோணமலை நகரத்தில் மணிக்கூண்டுக் கோபுரத்துக்கும் கோணேசர் கோவில் அமைந்துள்ள பிரட்ரிக்கோட்டையின் முன்புறத்துக்கும் இடையிலுள்ள கடற்கரையோரப் பகுதியிலேயே இப்போது திட்டமிடப்பட்ட சிங்களக் குடியேற்றத்துக்கு முஸ்தீபு செய்யப்பட்டிருக்கின்றது.

திருகோணமலை நகரசபைக்குச் சொந்தமான இக்கடற்கரையோரப் பிரதேசம் திருகோணமலை காளி கோயில் தீர்த்தப் பகுதியுமாகும்.

இந்திய அமைதிப்படை வெளியேறிய பின்னர் 1990களின் பிற்பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள் - சட்டவிரோதமான முறையில் - இங்கு மேற்கொள்ளப்பட்டன. நகரில் பல்வேறு கலவரங்களுக்குக் காரணமானவர்கள் இங்கிருந்துதான் ஒன்றுதிரண்டு வருவதால் திருகோணமலை நகரத் தமிழர்கள் இப்பகுதியை 'கொரியா' என்று பெயரிட்டு அழைத்து வந்தனர்.

ஆழிப்பேரலை வந்து இப்பகுதிக் குடிசை

(16ஆம் பக்கம் பார்க்க)

## 'கொரியா'வில் இறக்கப்பட்ட பொருள்கள் அகற்றப்பட்டன

திருகோணமலை.மார்ச்4

திருகோணமலை நகரில் கடற்கரையோரத்தில் சட்டவிரோதமாக - திட்டமிடப்பட்ட - சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்காக 'கொரியா' பகுதியில் சிங்களப் பெரும்பான்மையினரால் லொறிகளில் கொண்டுவந்து இறக்கப்பட்ட கட்டப் பொருள்கள் நேற்று அங்கிருந்து பொலீஸாரால் அகற்றப்பட ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இந்தத் திட்டமிட்ட சட்டவிரோதக் குடியேற்றத்தை உடனடியாகத் தடுத்து, திருகோணமலை நகரசபை நீதிமன்றத்தில் அவசரமாக மனு ஒன்றைத் தாக்கல் செய்தது. நீதிபதி கணேசராஜா அதனை உடனடியாக விசாரணைக்கு எடுத்தார்.

பின்னர், சட்டவிரோதக் குடியேற்றத்தை தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு பொலீஸாருக்கு உத்தரவிட்டார் நீதிபதி. அத்துடன்,

(16ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு மாநகரசபை முன்னாள் உறுப்பினர் நேற்றுச் சுட்டுக்கொலை!

கொழும்பு, மார்ச் 4

கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஏர்னஸ்ட் பெரேரா இனந்தெரியாத ஆயுததாரி ஒருவரால் நேற்றுச் சுட்டுக்கொல்லப்பட்டார். பட்டப்பகலில் பலர் பார்த்திருக்க இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. ஓட்டோவில் வந்தவர்களே இவர் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச்சென்றனர் எனச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

நேற்றுக்காலை 10.15 மணியளவில் கொம்பனித்தெரு ரியோ தியேட்டருக்கு அண்மித்த மலே வீதியிலுள்ள தனது வீட்டுக்கு முன்பாக கொழும்பு மாநகரசபையின் முன்னாள் உறுப்பினர் ஏர்னஸ்ட் பெரேரா நின்றுகொண்டிருந்தார். அப்போது அவ்விடத்துக்கு ஓட்டோ ஒன்றில் வந்த இரண்டு நபர்களில் ஒருவர், ஏர்னஸ்ட் பெரேராவை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்தார் எனக் கூறப்படுகிறது. பின்னர் அவர்கள் இருவரும் தப்பிச்சென்று விட்டனர்.

பலத்த காயத்துக்குள்ளான ஏர்னஸ்ட் பெரேரா அந்த இடத்திலேயே உயிரிழந்தார். (எ-க-13)

# தமிழர் - சிங்களவர் குழுக்கள் திருமலையில் நேற்று முறுகல்!

திருகோணமலை.மார்ச்4

திட்டமிட்ட - சட்டவிரோத - சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும் முயற்சி, இரவிரவாக - அவசர அவசரமாக - மேற்கொள்ளப்பட்டதை அடுத்து திருகோணமலை நகரில் தமிழர் - சிங்களவர் இடையே முறுகல் உச்சக்கட்டத்தை அடைந்தது.

நகரம் நேற்றுச் செயழிழந்துபோனது.

நகரின் பிரதான வீதிகள் யாவும் மறிக்கப்பட்டுக் கடைகள், வர்த்தக நிலையங்கள் பூட்டப்பட்டுப் பெரும் எதிர்ப்பு முன்னெடுக்கப்பட்டது.

திருகோணமலை கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு முன்பாக இளைஞர்களின் ஆவேசப் போராட்டத்தைப் பொலீஸாரினாலும் கட்டுப்படுத்த முடியாமற்போனது.

தமிழ் இளைஞர்கள் ஒரு குழுவாகவும், பஸ் நிலையம் முன்பாக சிங்கள இளைஞர்கள் ஒரு குழுவாகவும் நேருக்கு நேர் நிற்கப் பெரும் முறுகல்நிலை உருவாகியது. நடுவில் பொலீஸார் எதற்கும் தயார் நிலையில் நின்றிருந்தனர்.

அதேவேளை, தாக்குதல் சம்பவமும் இடம்பெற்றுள்ளது. விக்னேஸ்வரா தமிழ் வித்தியாலயத்திற்கு முன்பாக வைத்துச் சிங்கள இளை

(16ஆம் பக்கம் பார்க்க)

## இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச அரசு உடன்படாது

கொழும்பு.மார்ச்4

புலிகள் முன்வைத்த இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் பேச்சை ஆரம்பிக்க அரசு ஒருபோதும் உடன்படாது.

- இவ்வாறு - அரச தகவல்த்திணைக்களம் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

விடுதலைப் புலிகளுடனான பேச்சை கடந்த வருடம் அரசு மீண்டும் ஆரம்பிக்காததற்கான - அந்த விடயத்தில் அரசு தோல்வியுற்றதற்கான - காரணங்கள் தொடர்பாக குழப்பங்கள் சில இருந்துவருகின்றன.

கடந்த டிசெம்பரில் ஆழிப்பேரலையால் நாடு பாதிக்கப்படுவதற்கு முன் இருந்த நிலையில் பேச்சை ஆரம்பிப்பதற்கான நிகழ்ச்சி நிரலை, வரைவதற்கான அரசின் முயற்சிகளுடன் தொடர்புபடுத்தி, இந்தக் குழப்பங்களைத் தெரியப்

(16ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் பிரச்சினையில் தலையிடக் கோருவது இந்தியாவைச் சிக்கலில் மாட்டிவிடும் ஒரு பொறி

கிளிநொச்சி.மார்ச்4

இலங்கை விவகாரத்தில் இந்தியா தலையிட வேண்டும் என்று அமைச்சர் கதிர்காமர் புதுடில்லியில் தெரிவித்திருப்பது இந்தியாவை மேலும் சிக்கலில் மாட்டிவிடும் இலங்கை அரசின் பொறி என்று கூறியுள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

பி.பி.ஸி. தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்

அதில் மேலும் தெரிவித்ததாவது:-

உள்ளூர் வளங்களையும், புலம்பெயர்வாழ் தமிழர்களின் உதவிகளையும் மற்றும் ஓரளவு சர்வதேச உதவி நிறுவனங்களின் உதவிகளையும் வைத்துக்கொண்டே நாம் எமது பகுதிகளில் ஆழிப்பேரலை நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

(16ஆம் பக்கம் பார்க்க)

## தலைவரின் 50 ஆவது அகவையை ஒட்டி நிறுவிய வகுப்பறைக் கட்டடம் கையளிப்பு

### கிளிநொச்சியில் நேற்று வைபவரீதியான நிகழ்வு

கிளிநொச்சி,மார்ச்4

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரனின் 50 ஆவது அகவையை ஒட்டி கிளிநொச்சி பாரதி வித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் வித்தியாலய அதிபரிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

வித்தியாலயத்தில் நேற்று முற்பகல் நடந்த விசேட நிகழ்வில் தமிழீழ நிதித்துறைப் பொறுப்பாளர் செ.தமிழேந்தி புதிய கட்டடத்தை அதிபர் க.இராசேந்திரத்திடம் கையளித்தார்.

தேசியத் தலைவரின் அகவையை ஒட்டி 25 லட்சம் ரூபா செலவில் விடுதலைப் புலிகளினால் அமைக்கப்பட்ட இக்கட்டடத்தை உத்தியோகபூர்வமாகக் கையளிப்பதற்காக இந்த

(16ஆம் பக்கம் பார்க்க)

## இனி ஒருபோதும் அரசுக்கு ஆதரவு தரமாட்டோம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு.மார்ச்4

ஜனாதிபதியையோ அவரது வாக்குறுதியையோ நம்பமுடியாது. இந்த நிலையில் அரசிலிருந்து ஜே.வி.பி வெளியேறினால், அரசுக்குத் தமது கட்சி முட்டுக்கொடுக்கமாட்டாது என்று தெரிவித்துள்ளது ஐக்கிய தேசியக் கட்சி.

"ஓட்டை வீழ்ந்த கப்பலில் தொற்றிக்கொள்ள நாம் ஒன்றும் விவேகம் இல்லாதவர்கள் அல்லர்" - என்றார் ஐ.தே.கட்சியின் பிரதிப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை அடிப்படையில் புலிகளுடன் பேச அரசு முன்வருமானால், அரசிலிருந்து ஜே.வி.பி.வெளியேறினாலும் இந்த அரசுக்கு ஆதரவு கொடுப்போம் என்று இது நாள் வரை கூறிவந்தது ஐ.தே.க. இப்போது, திடீரென ஜனாதிபதியை நம்பி ஒருபோதும் இந்த அரசுக்கு ஆதரவு கொடுக்க மாட்டாது என்று அக்கட்சி கூறியுள்ளது.

(16ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி ஆணைக்குழுக்களால் தமிழர்களுக்கு நியாயம் கிடைக்கும் என்பது வெறும் கானல் நீர்

## ஈழவேந்தன் எம்.பி. காட்டமான அறிக்கை

யாழ்ப்பாணம்,மார்ச்4

ஜனாதிபதி அமைக்கும் ஆணைக்குழுக்களால் தமிழ்மக்களுக்கு நியாயம் கிடைப்பது என்பது கண்துடைப்பு மட்டுமல்ல வெறும் கானல் நீர் போன்றது.

- இவ்வாறு அறிக்கை ஒன்றில் தெரிவித்திருக்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் மா.க. ஈழவேந்தன்

கிழக்கில் விடுதலைப் புலிகளின் தலைவர்கள் மீது நடத்தப்பட்டுவரும் தாக்குதல்கள் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிக்க ஜனாதிபதி நியமித்திருக்கும் ஆணைக்குழு தொடர்பாகவே ஈழவேந்தன் இந்த அறிக்கையை விடுத்திருக்கின்றார்.

அதில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெரிவித்ததற்கமைய "ஜனாதிபதி ஆணைக்குழு வெறும் கண்துடைப்பே". ஆனால், எம்மைப் பொறுத்தவரையில் ஜனாதிபதி அமைத்துள்ள ஆணைக குழு, கண்துடைப்பு மட்டுமல்ல வெறும் கானல நீராகவும் விளங்குகின்றது.

ஈழத்தமிழ் மக்களுக்கு அரசினால் அநியாயங்கள் நடைபெறுகின்றதை எதிர்த்து, நாம் குரலெழுப்புகின்ற போது காலப்போக்கில் அப்பிரச்சினையை நாம் மறக்கச் செய்கின்ற முறையில் அரசு ஆணைக்குழுக்களை அமைப்பது வழக்கம்.

செல்வி கிருஷாந்தி குமாரசாமியை பாலியல் வல்லுறவுக்கு ஆளாக்கிய வெறிகொண்ட சிங்கள இராணுவம் அவளையும், அவளின் தாயையும், தம்பியையும், துணைக்கு வந்த பக்கத்து வீட்டு இளைஞனையும் சாகடித்த போது, தமிழ் மக்களிடம் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்குவதற்கு சந்திரிகா கையாண்ட தந்திரம் ஆணைக குழு அமைத்ததேயாகும். ஆண்டுகள் உருண்டோடிய நிலையிலும் கிருஷாந்திக்கு ஏற்பட்ட கொடிய நிகழ்வையொட்டியும் அவளும் அவள் சார்ந்த உறவினரும் சாகடிக்கப்பட்ட நிலையிலும் நியமிக்கப்பட்ட ஆணைக்குழு என்ன முடிவை எடுத்தது? நீதிமன்றம் என்ன தீர்ப்பினை வழங்கியது?

1974 இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராட்சி மாநாட்டில் ஒன்பது தமிழ் உயிர்கள் மாய்க கப்பட்டன. மக்களிடையே கிளர்ச்சி எழுந்த போது ஆட்சியில் இருந்த சந்திரிகாவின் தாயார் சிறிமாவும், சன்சோனி விசாரணைக் குழுவை நியமித்தார். ஆனால், நடந்தது என்ன?

நியமிக்கப்பட்ட ஆணைக்குழுக்கள் அனைத்தும் உருப்படியாக எத்தகைய ஆய்வையும் நடத்தவில்லை. மாறாக தூங்கி வழிந்தன. இதை (Committecs don't sit over the issues. But sleep over the issucs ) என்று பொதுமக்கள் சுமத்தும் குற்றச்சாட்டுக்கள் மெய்பிக்கப்பட்ட வரலாற்றினை நாம் கண்டுள்ளோம்.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக, எத்தகைய ஆக்க பூர்வமான தீர்ப்பினை ஆணைக் குழுக்கள் வழங்கியுள்ளன? இன்று போர் நிறுத்த ஆணைக்குழுவும் விழப்போடு எதனையும் செய்யமுடியாது தத்தளிக்கின்ற காட்சியை நாம் காண்கின்றோம். எனவே, தான் கிழக்கு மாகாண அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசலயன் மற்றும் அவரோடு செயற்பட்ட போராளிகளையும் சாகடிப்பதற்கு காரணமாய் இருந்த சந்திரிகா அரசு, இப்பொழுது மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் குவேனியையும் மற்றும் அவரோடு இணைத்து அகநிலா, சசிமதி ஆகியோரையும் துப்பாக்கிச் சூட்டினால் சாகடிக்க முனைந்து, தோல்வி கண்ட நிலையில் தமிழ் மக்களிடம் ஏற்பட்டுள்ள கொந்தளிப்பைத் திசை திருப்புகின்ற முறையில், ஆணைக்குழு அமைக கப்போவதாக குடியரசுத் தலைவர் கூறும் கூற்று அவரின் குதர்க்க வாதத்தை எடுத்துக் காட்டுகின்றது.

சிங்கள அரசு குள்ளநரிக் கூட்டமாக விளங்கி எமை ஏமாற்ற முயலலாம். ஆனால், தொடர்நது ஏமாற்றுவதற்கு நாம் கருங்காகங்களுமல்ல, ஏமாளிக் கூட்டமுமல்ல. - இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# 'பி' நெக்கட்டிவ் இரத்தம் தேவை

யாழ். போதனா வைத்தியசாலை இரத்த வங்கியில் 'பி'நெக்கட்டிவ் (B-) இரத்தத்திற்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்த வகை இரத்தம் தேவையான அவசர ஆபத்தான நோயாளார்களின் உயிர்காக்க இந்த இரத்த வகையைச் சேர்ந்தவர்களை இரத்தவங்கிக்கு வருகைதந்து இரத்ததானம் செய்யுமாறு இரத்த வங்கி அதிகாரிகளால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-15)

# சு.க. அமைப்பாளர்களுடன் ஜனாதிபதி இன்று பேச்சு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரையும் அக்கட்சியின் தலைவியும், ஜனாதிபதியுமான சந்திரிகா குமாரதுங்க இன்று வெள்ளிக்கிழமை சந்தித்துக் கலந்துரையாடவுள்ளார். ஜனாதிபதி மாளிகையில் இன்று நண்பகல் 12 மணிக்கு நடைபெறும் கூட்டத்தில் கட்சியின் அனைத்து அமைப்பாளர்களும் தவறாது கலந்துகொள்ளவேண்டுமென செயலாளர் மைத்திரிபால சிறிசேன அறிவித்துள்ளார்.

எதிர்வரும் வாரம் நடைபெறவுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாடு குறித்து இந்தக் கூட்டத்தில் முக்கியமாக ஆராயப்படுமென்று எதிர்பார்க்கப்படுகின்றது. (எ-க)

# புற்றுநோய் குறித்து ஆலோசனை பெற சுகாதாரப் பணிமனை விசேட ஏற்பாடு

புற்றுநோய் சம்பந்தமான வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள விரும்பும் நோயாளர்கள் எதிர்வரும் 07ஆம் திகதி திங்கட்கிழமை தொடக்கம் புற்றுநோய் சிகிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி தி.ஜெயக்குமாரிடம் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். பிரதி மாகாண சுகதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆறுமுகம் கேதீஸ்வரன் அறிவித்துள்ளார்.

தெல்லிப்பளை மாவட்ட வைத்தியசாலையில் எதிர்வரும் 7ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணி தொடக்கமும் -

அன்றைய தினம் பிற்பகல் 2 மணி தொடக்கம் சாவகச்சேரி மாவட்ட வைத்தியசாலையிலும் -

9ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணி தொடக்கம் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையிலும் புற்றுநோயாளர்களை அவர் பார்வையிடவுள்ளார்.

புற்றுநோய் சம்பந்தமான வைத்திய ஆலோசனைகள் மற்றும் கிசிச்சைகளைப் பெற்றுக் கொள்ள விரும்பும் புற்றுநோயாளர்கள் பிரதி திங்கள், புதன் ஆகிய கிழமைகளில் மேற்கூறப்பட்ட நேரங்களில் முன் குறிப்பிடப்பட்ட வைத்திய சாலைகளில் புற்றுநோய் கிசிச்சை நிபுணர் வைத்திய கலாநிதி தி.ஜெயக்குமாரிடம் வைத்திய ஆலோசனைகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ. கேதீஸ்வரன் அறிவித்துள்ளார். (எ-51)

# முகாமைத்துவ பீட மாணவன் தாக்கப்பட்டுப் படுகாயம்

பலத்த உட்காயங்களுடன் சுயநினை விழந்த நிலையில் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் யாழ்.மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருக்கிறார். யாழ். பல்கலைக்கழக முகாமைத்துவ பீடத்தைச் சேர்ந்த மூன்றாம் வருட மாணவனான இ.திலீப்குமார் என்பவரே இவ்வாறு அனுமதிக்கப்பட்டவராவார்.

நேற்று வழமைபோல விரிவுரைகளுக்குச் சென்ற பிரஸ்தாப மாணவன் பின்னர் சுயநினை விழந்து காணப்பட்டார் என்றும் -

சக மாணவர் ஒருவர் அவரை ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காகக் சேர்த்தார் என்றும் கூறபபடுகிறது.

அதே பீடத்தைச் சேர்ந்த சிரேஷ்ட மாணவர்களால் இந்த மாணவன் மோசமாகத் தாக்கப்பட்டிருக்கின்றார் என்று தெரியவந்திருக்கிறது.

சிரேஷ்ட மாணவர்கள் சுமார் 40 பேர் தன்னைச் சூழ்ந்துகொண்டு தாக்கினர் என்று காயமடைந்த மாணவன் தெரிவித்திருக்கிறார்.

இந்த மாணவனுக்கு உடலில் உட்காயங்கள் காணப்படுவதாக மருத்துவ வட்டாரங்கள் தெரிவித்தன. அவர் அணிந்திருந்த சேர்ட் கிழிந்து காணப்பட்டது.

இந்தச் சம்பவம் தொடர்பாக பல்கலைக் கழக மாணவர் ஒழுக்காற்றுப் பிரிவிடம் முறைபபாடு செய்யப்பட்டிருக்கிறது. (ஐ-7-13)

# சுனாமியில் காயமடைந்த தாளையடி வாசி 66 நாள்களின் பின்னர் புதனன்று மரணம்

சுனாமிக் கடலலையால் அடிபட்டு படுகாயமடைந்த நிலையில் கடந்த டிசம்பர் 26 ஆம் திகதி யாழ். போதனா வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டவர் சிகிச்சைக்குட்படுத்தி 66 நாள்களின் பின் நேற்றுமுன்தினம் அங்கு உயிரிழந்தார்.

தாளையடியில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்தவரான எம்.இரத்தின சிங்கம் (வயது 52) என்பவரே மரணமான வராவார்.

இவருடன் இச்சம்பவத்தால் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டவர்களில் இறந்தோரின் எண்ணிக்கை எட்டாக அதிகரித்துள்ளது.

சடலம் நேற்று உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. (எ-15)

# கரம்பன் சமுர்த்தி அலுவலர் படுகொலை: சந்தேகநபர் பிணையில் செல்ல அனுமதி

யாழ்ப்பாணம்,மார்ச்4

ஊர்காவற்றுறையில் கொலைசெய்யப்பட்ட கரம்பன் மேற்கு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரின் கொலை தொடர்பாகக் கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர் நேற்றுப் பிணையில செல்ல அனுமதிக்கப்பட்டார்.

2003 ஆம் ஆண்டு மே மாதம் 2ஆம் திகதி ஊர்காவற்றுறையில் வைத்து கொலைசெய்யப்பட்ட கரம்பொன் மேற்கைச் சேர்ந்தவரான சமுர்த்தி உத்தியோகத்தரான திலகராஜா ஜகத்ஜனனி என்பவரின் கொலை தொடர்பாகக கைதுசெய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நெடுந்தீவைச் சேர்ந்த திருஞானம் பிள்ளை சிவகுமார் என்பவரின் பிணை மனு மீதான விசாரணைகள் நேற்று யாழ்ப்பாணம் மேல் நீதிமன்ற நீதிபதி கே.பி.எஸ்.வரதராஜா முன்னிலையில் நடைபெற்றன.

விசாரணையின் முடிவில் நீதிபதி சந்தேக நபரை 50ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், தலா ஒருலட்சம் ரூபா ஆள்பிணையிலும் செல்ல அனுமதியளித்தார்.

ஆள்பிணையில் நிற்கும் இருவரும் ஊர்காவற்றுறை நீதிமன்ற வலயத்தை நிரந்தர வதிவிடமாகக் கொண்டவர்களாகவும் -

இருவரில் ஒருவர் எழுதுநர் தரத்திற்கு குறையாத அரச உத்தியோகத்தராக இருத்தல் அவசியம் எனவும் - தெரிவிக்கப்பட்டது. (எ-12-13)

# நல்லூர் இளங்கலைஞர் மன்ற வருடாந்த கலைவிழா ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்4

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் வருடாந்த இசைவிழா நேற்று ஆரம்பமாகியது. தொடர்ந்து 5 தினங்கள் இடம்பெறவுள்ள இந்த விழாவில், இன்று வெள்ளிக்கிழமை இரண்டாம் நாள் நிகழ்வுகள் மாலை 4.30 மணிக்கு மங்கள இசையுடன் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து மாலை 5.30 மணிக்கு இளங் கலைஞர் மன்ற மாணவர்களின் குழுப்பாடல் இடம்பெறும். மாலை 5.45 மணிக்கு வயலின் இசை இடம்பெறும்.

இதில் - வயலின் - மதுரா வரதராஜசர்மா, கிருஷ்ணஐயர் அசோகன், துரைசிங்கம் ரமேஸ, மிருதங்கம் - கே. அனந்தகோபன்.

மாலை 6.15 மணிக்கு எம்.தர்மினியின் புல்லாங்குழல் இசை இடம்பெறும். எம்.கிருஷ்ணவேணி - வயலின், வி.ரமணன் - மிருதங்கம்.

மாலை 6.45 மணிக்கு சங்கீதபூஷணம், கலாபூஷணம் வி.பரமசாமி மங்கள விளக்கினை ஏற்றிவைப்பார்.

தொடர்ந்து நிகழ்விற்கு செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன் தலைமை வகிப்பார். மாலை 7.15 மணிக்கு - தாரணி ரஞ்சனின் பாட்டு இடம் பெறும் இதில் பாக்கியலட்சுமி நடராசா - வயலின, எஸ். மகேந்திரன் - மிருதங்கம்.

மாலை 7.45 மணிக்கு ஸ்ரீரந்தாமனின் பாட்டு இடம் பெறும். இதில் ஏ.ஜெயராமன் - வயலின், கே.அனந்தகோபன் - மிருதங்கம், ரி.கோகுலராஜன் - கடம். மாலை 8.15 மணிக்கு வயலின் இசை நிகழ்வு இடம்பெறும். இந்நிகழ்வில் ஆர்.இராதா கிருஷ்ணன், எஸ்கோபிதாஸ் ஆகியோர் - வயலின வாசிப்பர். இதில் கே.கண்ணதாசன் - மிருதஙகம், கே.ஆனந்தகோபன் - கெஞ்சிரா, என்.மாதவன் கடம், என்.சதீஸ்குமார் - முகர்சிங்.

மாலை 9.15 மணிக்கு பொன்னாலை சந்திர பரத கலாலயம் வழங்கும் நாட்டியாஞ்சலி இடம் பெறும். இதில் நட்டு வாங்கம் - திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன், மிருதங்கம் - எஸ்.மகேந்திரன், பாட்டு - மங்கயற்செல்வி முகுந்தன், வயலின்-ஏ.ஜெயராமன். (எ-12)

# நெல் அடிக்கும் இயந்திரம் பூநகரியில் நேற்று அறிமுகம்

வன்னிப் பகுதி விவசாயிகளின் நலன்கருதி நெல் சூடுமிதிக்கும் இயந்திரம் ஒன்றினை வன்னி வேளான் தொழில் நுட்பநிறுவனம் இந்தியாவிலிருந்து தருவித்திருக்கிறது.

இந்த இயந்திரம் நேற்று பூநகரி மட்டுவில் நாடு மேற்கு கோ.அரியநாயகம் கிராமத்தில் அறிமுகம் செய்துவைக்கப்பட்டது.

பூநகரி பிரதேச செயலர் மா.ஸ்ரீஸ்கந்தகுமார் நெற்கதிரை இயந்திரத்தில் போட்டு ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் வன்னி வேளான் தொழில் நுட்ப நிறுவனப் பணிப்பாளர் வே.குலம், பொது முகாமையாளர் சி.புவனேஸ்வரன், சேரன் வாணிவப் பணிப்பாளர் பாபு மற்றும் வன்னி வேளான் நிறுவனத்தின் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

ஒரு ஏக்கர் நெல்லை ஒன்றரை மணித்தியாலத்தில் இந்த இயந்திரத்தின் மூலம் சூடடிக்க முடியும். வன்னிப் பிரதேசத்தில் சூடு மிதிக்கும் தொழிலாளர்களுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியதால் விவசாயிகள் தமது நெல்லை சூடடிப்பதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர் என்றும் -

இந்த இயந்திரம் விவசாயிகளுக்குப் பெரும் வரப்பிரசாதமாக அமைந்திருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. (த-352)



குடாநாட்டின் பல்வேறு பகுதிகளில் திருடப்பட்ட மூன்று லட்சம் ரூபா பெறுமதியான பொருள்களை யாழ். பொலீஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினர் மீட்டுள்ளனர். மீட்கப்பட்ட பொருள்களுடன் குற்றத் தடுப்புப் பொலீஸ் பிரிவு பொறுப்பதிகாரி விதானகே தலைமையிலான குழுவினர் படத்தில் காணப்படுகின்றனர். (படம்: பிரபா)

# கைதடியில் நாளை பிற்பகல் பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் பெண்கள் அபிவிருத்தித் திட்டம் பாதிக்கப்பட்ட பெண்களின் பொருளாதார மேம்பாட்டினை நோக்கமாகக் கொண்டு தயாரித்துள்ள தே.தேவானந்தின நெறியாள்கையில் உருவான 'பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள்' எனும் நாடக ஆற்றுகை நாளை சனிக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கைதடி நவீல்ட் பாடசாலையில் மேடையேற்றப்படவுள்ளது.

இந்நாடகம் மூலம் திரட்டப்படும் நிதி பெண்கள் நலத்திட்டங்களுக்கு வழங்கப்படவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# ஏவுகணைப் பரிசோதனைகளை வடகொரியா மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக அச்சுறுத்தல்

பெய்ஜிங்,மார்ச்4

நீண்டதூர வீச்சுக்கொண்ட ஏவுகணைப் பரிசோதனைகளை மீண்டும் ஆரம்பிக்கப்போவதாக வடகொரிய அரசு மீண்டும் அச்சுறுத்தல் அறிவித்தலை விடுத்திருக்கின்றது. இந்த அறிவிப்பால் வடகொரிய அணு ஆயுத விவகாரம் தொடர்பாக ஆறுதரப்பு பேச்சுக்களை நடத்தி வரும் நாடுகள் பெரும் அதிர்ச்சிக்குள்ளாகியுள்ளன.

இந்த நீண்டதூர வீச்சுக்கொண்ட ஏவுகணைப் பரிசோதனைகளை ஆரம்பிக்கப்போகிறோம் என்ற விடயம் அடங்கிய அறிக்கையொன்றை வடகொரிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ளது.

'தமது நாட்டை அராஜகத்தின் எல்லை' என்று அமெரிக்கா வர்ணித்திருந்தது. இதற்காக எங்களிடம் அமெரிக்கா பகிரங்கமாக மன்னிப்பு கேட்கவேண்டும் என்றும் வடகொரிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டிருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கின்றது.

1999ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்ரன் தலைமையிலான அமெரிக்க நிர்வாகத்துடன் வடகொரிய அரசு ஏவுகணைப் பரிசோதனைகள் தொடர்பான உடன்படிக்கையொன்றைச் செய்துகொண்டது. தற்போது அந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டிய அவசியம் கிடையாது. அந்த உடன்படிக்கை காலாவதியாகிவிட்டது என்றும் அந்த அறிக்கையின் மூலம் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

அமெரிக்காவுடன் எமது அணு ஆயுத விவகாரம் தொடர்பாக நடத்திய பேச்சுக்கள் முறிவடைந்துள்ளதாகவும் அந்த அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்புத் தொடர்பாக நேற்று மாலை வரை அமெரிக்கா எந்த மறுப்பறிக்கையினையும் வெளியிடவில்லை.

(ஐ-க)

உலக அரங்கில்

## டைனமட் வெடித்ததில் சீனாவில் 20 பேர் பலி!

பீஜிங்,மார்ச்4

சீனாவின் வடக்கு சான்ஹி மாகாணத்தில் பாடசாலையொன்றுக்கு அருகில் டைனமட் வெடித்ததில் 20 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்களுள் அதிகமானோர் பாடசாலை மாணவர்கள் என அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

சான்ஷி மாகாணத்தில் கெசேங் நகருக்கு அருகில் உள்ள பாடசாலைக்கு அருகில் வீடொன்றுக்குள் வைத்திருந்த டைனமட் நேற்று திடீரென வெடித்துள்ளது. இதனால் பாடசாலை இடிந்து விழுந்து மாணவர்களும், ஆசிரியர்களும் இடிபாடுகளுககுள் சிக்கி உயிரிழந்தனர்.

டைனமட்டை வீட்டில் வைத்திருந்த நபரும் இந்த திடீர் விபத்தில் உயிரிழந்துள்ளார் எனவும் அதிகாரிகள் கூறினர்.

சீனாவில் இருவகையான நிலக்கரிச் சுரங்கங்கள் உள்ளன. அரசினால் நடத்தப்படும் நிலக்கரிச் சுரங்கங்கள் பாதுகாப்பானவை. தனியாரால் நடத்தப்படும் நிலக்கரிச் சுரங்கங்களால் இவ்வாறான விபத்துக்கள் ஏற்படுகின்றன எனவும இவ்விபத்தக்கள் மிகவும் அபாயகரமானவை எனவும் அதிகாரிகள் கூறினர். (த-க)

## ஈராக்கில் குண்டுவெடிப்பு: ஐந்து பொலீஸார் பலி!

பக்தாத்,மார்ச்4

ஈராக் தலைநகர் பக்தாத்தில் உள்துறை அமைச்சின் செயலகத்திற்கு முன் நேற்று இடம்பெற்ற கார்க்குண்டுவெடிப்பில் 5 பொலீஸார் உயிரிழந்தனர்; பலர் காயமடைந்தனர் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பக்தாத்தின் மத்திய பகுதியில் பலத்த பாதுகாப்புகளுடன் அமைந்துள்ள உள்துறை அமைச்சு அலுவலகத்திற்கு முன்னாலேயே இந்தக் கார்க் குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

கடந்த ஜனவரிமாதம் இடம்பெற்ற தேர்தலின் பின்னர் இன்னும் சில வாரங்களில் புதிய அமைச்சு அமைவதை எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் நிலையில், அங்கு தினமும் இடம்பெற்று வரும் இவ்வாறான குண்டுவெடிப்புகள் மக்களிடையே பெரும் பீதியை ஏற்படுத்தியுள்ளன.

## ஜமா அத் இஸ்லாமியாவின் தலைவருக்கு இரண்டரை வருடச் சிறைத்தண்டனை

### பாலி தீவு குண்டுவெடிப்புச் சம்பவம் தொடர்பாக

ஜகார்த்தா,மார்ச்4

இந்தோனேஷியாவில் செயற்படும் 'ஜமா அத் இஸ்லாமியா'வின் கடும்போக்குடைய ஆன்மீகத் தலைவர் அபூபக்கர் பஷீருக்கு இரண்டரை வருடச் சிறைத்தண்டனை வழங்கி அந்நாட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

இந்தோனேஷியாவின் கடும்போக்கு ஆன்மீகத் தலைவரான அபூபக்கர் பஷீர் பாலிதீவுக் குண்டுத்தாக்குதலில் சம்பந்தப்பட்டிருப்பது சந்தேகமின்றி நிருபணமாகியிருப்பதாக நீதிமன்றம் அறிவித்துள்ளது.

2002 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 2,002 பேரைப் பலி கொண்ட குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய அபூபக்கர் பஷீருக்கு இரண்டரை வருட சிறைத்தண்டனை வழங்குமாறு நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

இக்குண்டுத்தாக்குதலுடன் தொடர்புடைய பல்வேறு கிளர்ச்சிவாத கிரிமினல் - குற்றவியல் - குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் பஷீருக்கு 8 வருட கால சிறைத்தண்டனை வழங்குமாறு மனுதாரர்கள் கோரிக்கை விடுத்திருந்தார்கள்.

மேற்குலக அரசுகள் ஜமாஅத் இஸ்லாமியாவின் ஆன்மீகத் தலைவராக பஷீரைக் கருதுகின்றன. இது அல் - குவைதா கிளர்ச்சிவாத அமைப்பின் தென்கிழக்காசியாவின் வலையமைப்பு என நம்பப்படுகிறது.

(க-த)

## செய்தி வெளியீட்டுக்கு நேபாளத்தில் தடை!

காத்மண்டு,மார்ச்4

நேபாளத்தில் மாவோயிஸ்ட் கிளர்ச்சிவாதிகள் குறித்துச் சுதந்திரமாகச் செய்திகள் வெளியிடுவதை அரசு தடைசெய்துள்ளது.

அரசின் பாதுகாப்பு அதிகாரிகள் கொடுக்கும் அறிக்கைகளை மட்டுமே வெளியிடும்படி பத்திரிகையாளர்களுக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த நடவடிக்கை தணிக்கையல்ல என்றும் - ஆனால், ஊடகங்கள் பொறுப்பாகச் செயற்பட்டால் மட்டுமே கிளர்ச்சிவாதத்தை முறையாகக் கையாளமுடியும் என்றும் - தகவல் துறை அமைச்சு தெரிவித்துள்ளது.

# ஈரான் மீது அமெரிக்கா குற்றச்சாட்டு!

வாஷிங்ரன்,மார்ச்4

ஈரான் அணுவாயுதங்களை எப்படியாது தயாரிக்க வேண்டும் என்ற அதன் முயற்சியில் உலகை ஏமாற்றி வருவதாக அமெரிக்கா குற்றஞ்சாட்டியிருக்கிறது.

ஈரானின் அணுவாயுதத் திட்டம் பற்றி விடை கிடைக்காத கேள்வி தாம் கவலை கொண்டுள்ளதாக ஐ.நா.சபையின் அணுசக்தி நிறுவனத்தில் இருக்கும் அமெரிக்க பிரதிநிதி ஜேக்கி சேண்டர்ஸ் தெரிவித்தார்.

அணுவாயுத உற்பத்தி தொடர்பான ஈரானின நடவடிக்கைகள் குறித்து ஐ.நா.சபை வெளியிட்டுள்ள அறிக்கைபற்றி அவர் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

ஈரான் இவ்விடயத்தில் எடுத்துவரும் நடவடிககைகளை மறைக்கமுயல்வது மற்றும் அணுவாயுதக் கண்காணிப்பாளர்களை திசைதிருப்ப முயல்வது ஆகியவைகளைப் பட்டியலிடும் வகையில் இந்த ஐ.நா.வின் அறிக்கை உள்ளது.

ஈரான் விவகாரத்தை அந்நாட்டின் மீது தடைகள் விதிக்க முயலும் நோக்கில் ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கு எடுத்துச் செல்ல வேண்டும் - என்று தெரிவித்தார்.

ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில்- "ஈரான் பராச்சினில் உள்ள தனது முக்கிய இராணுவ வளாகத்திற்கு - தளத்திற்கு அணுசக்திக் கண்காணிப்பாளர்கள் வந்து பார்வையிடுவதற்கு அனுமதியளிக்க மறுத்தது உள்ளிட்ட பல விடயங்களில் ஐ.நாவுடன் ஒத்துழைக்கத் தவறியது மற்றும் தாமதப்படுத்தியது போன்ற விடயங்கள்" குறிப்பிடப்பட்டுள்ளன.

இந்த அறிக்கை குறித்து ஈரான் தமது கருத்தை நேற்று தெரிவிப்பதாக இருந்தது.

(க-த)

## பொது மன்னிப்புக் காலம் நிறைவடைந்த பின்னரும் மலேஷியாவில் ஆயிரக்கணக்கானோர் தலைமறைவு

### மலேஷிய சட்டவிரோத குடியகல்வு அதிகாரிகள் அறிவிப்பு

லண்டன்,மார்ச்4

மலேஷியாவில் சட்டவிரோதமாக தங்கியிருந்தவர்கள் தமது சொந்த நாடுகளுக்குத் திரும்பிச் செல்லஅந்த நாட்டு அரசு வழங்கிய பொது மன்னிப்புக் காலம் நிறைவடைந்த பின்னரும், ஆயிரக்கணக்கானவர்கள் அங்கு தலைமறைவாகத் தங்கியுள்ளனர் என குடிவரவு, குடியகலவு அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

நாட்டில் தங்கியுள்ள குடியேற்றவாசிகள் 5 ஆயிரம் பேரின் விவரங்கள் குறித்து ஆராய்ந்த போது இந்த விடயம் தெரியவந்தாக அந்நாட்டு உள்துறை அமைச்சர் அஸ்மி காலித் கூறினார்.

நாட்டில் தொடர்ந்து சட்டவிரோதமாகத் தங்கியிருந்து கைதுசெய்யப்பட்டவர்களுக்கு சிறைத்தண்டனை, கசையடி என்பன தண்டனையாக வழங்கப்படும் என அந்நாட்டு அரசு அறிவித்திருநதது.

பொது மன்னிப்புக் காலத்தில் பல லட்சக் கணக்கான மக்கள் தமது சொந்த நாடுகளுக்கு திரும்பிச் சென்றனர். சட்ட விரோதமாக தங்கியிருந்தவர்களில் 2 லட்சம் பேர் நாட்டில் குடியேற அரசு அனுமதியளித்தது. பொது மன்னிப்புக் காலம் முடிவடைந்த பின்னர் அரசு திடீரென நடத்திய சோதனையின் போது 550 இற்கு மேற்பட்ட சட்டவிரோத குடியேற்றவாசிகள் கைது செய்யப்பட்டனர் எனவும் இதுபோன்று இன்னும பலர் அங்கு தலைமறைவாக இருக்கலாம் எனவும் அதிகாரிகள் கூறினர்.

## லெபனானில் ஆர்ப்பாட்டம் தொடர்கிறது

பெய்ருட்,மார்ச்4

லெபனான் அமைச்சரவை ராஜினாமச் செய்த மறுதினமான செவ்வாய்க்கிழமையும் நூற்றுக் கணக்கான எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் தொடர்ந்தும் தலைநகர் பெய்ருட்டில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

லெபனானில் நிலைகொண்டுள்ள சிரிய நாட்டுப் படைகள் வெளியேறும்வரை தாம் ஆர்ப்பாட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்று மாணவர்களும் ஆர்வலர்களும் தெரிவித்தனர்.

எதிர்வரும் மே மாதம் நடைபெறவுள்ள நாடாளுமன்றத் தேர்தல் நேர்மையாக இடம்பெறவேண்டும் என்றும் -

அத்தேர்தல் நடுநிலையாக நடைபெற 3 ஆம் தரப்பு நாடு ஒன்று கண்காணிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் -

அரசில் அங்கம் வகிக்கும் மூத்த அதிகாரிகள் பலர் பதவி விலகவேண்டும் என்றும் - ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

லெபனான் முன்னாள் பிரதமர் ரபீக் ஹரிரி படுகொலை செய்யப்பட்டு இரண்டு வாரங்கள் கடந்த பின்னர் அந்நாட்டு - சிரியாவுக்கு ஆதரவான - அரசு பதவி விலகியுள்ளது. (ஐ-க)

## கொங்கோவில் நிலைகொண்டுள்ள கிளர்ச்சிவாதிகளை வெளியேற்ற ஐ.நா.படை கடும் நடவடிக்கை!

லண்டன்,மார்ச்4

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் கிழக்குப் பகுதியில் நிலைகொண்டுள்ள கிளர்ச்சிவாதிகளை வெளியேற்றக் கடுமையானதொரு நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாக அந்த நாட்டிலுள்ள ஐ.நா. அமைதிகாக்கும் படைகளின் தளபதி தெரிவித்தார்.

கிழக்குப் பகுதிகளில் வாழும் மக்களை பயமுறுத்தி வரும் இந்த ஆயுதக் கிளர்ச்சிவாதிகள் கிழக்கின் பல பகுதிகளை தங்களுடைய கட்டுப்பாட்டில் வைத்திருக்கின்றனர் என்று கூறப்படுகின்றது.

இடுரி என்ற இடத்தின் வடமேற்குப் பகுதியில் ஆயுதக்குழுக்களால் பயன்படுத்தப்படும் அனைத்து முகாம்களையும் தகர்க்கத்தான் எண்ணியுள்ளார் என்று ஐ.நா.அமைதிகாக்கும் படையின் தளபதி ஜெனரல் ஷான் பரான்சுவா கொல்லோ தெஸ்குரி தெரிவித்தார்.

கிழக்குப் பிராந்தியத் தலைநகர் புனியாவிற்கு அருகே 60 கிளர்ச்சிவாதிகளை அமைதிகாக்கும் படையினர் கொன்றுள்ளனர் என்ற அறிவிப்பு வெளியானதன் பின்னரே மேற்படி கருத்துகள் ஐ.நா. அமைதிகாக்கும் படையின் தளபதியால் வெளியிடப்பட்டுள்ளது. கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற சண்டையில் - மோதலில - சம்பந்தப்பட்டிருந்த எப்.என்.ஐ. என்றழைக்கப்படும் ஆயுதக் குழுவினரே பங்களாதேஷ் படையினர் ஒன்பது பேர் கொல்லப்பட்டமைக்குக் காரணம் எனக் குற்றஞ்சாட்டப்பட்டது.

இந்த ஆயுதக் குழுவைச் சேர்ந்த 60 பேரையே ஐ.நா.அமைதிகாக்கும் படையினர் கொன்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-க)




## இந்தோனேஷியாவின் கடலடியில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

இந்தோனேஷியாவில் மீண்டும் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஒன்று ஏற்பட்டதாக இந்தோனேஷிய நிலநடுக்க ஆய்வுமையம் அறிவித்தது.

இந்த நிலநடுக்கம் இந்தோனேஷியாவின் பாண்டா கடல் பகுதியை மையம்கொண்டு நேற்று முன்தினம் மாலை ஏற்பட்டது. இது ரிச்டர் கருவியில் 7.5 புள்ளியாக பதிவாகியிருந்தது.

இந்நிலநடுக்கத்தின் தாக்கம் ஆஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியிலும் உணரப்பட்டது என ஆய்வாளர்கள் கூறினர்.

இந்த நிலநடுக்கம் குறித்த தகவல்கள் இன்னும் வெளியிடப்படவில்லை எனவும் இந்த நில நடுக்கத்தினால் சுனாமி அலைகள் தோன்றும் அபாயம் இல்லை எனவும் ஜகாத்தாவில் உள்ள வானிலை மற்றும் புவியியல் ஆராய்ச்சி மையம் அறிவித்துள்ளது.

கடலுக்கடியில் 100 கிலோமீற்றருக்கும் அடியில் இந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருப்பதால் சுனாமி அலைகள் தோன்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை என ஜப்பானிய வானிலை ஆராய்ச்சி மையமும் உறுதி செய்துள்து.

(த-க)

## பாகிஸ்தானில் சிறையிருக்கும் 900 இந்தியர்கள் விரைவில் விடுதலை

இஸ்லாமபாத்,மார்ச்4

பாகிஸ்தான் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 900 இந்திய மீனவர்கள், பொதுமக்கள் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர் என பாகிஸ்தான் அரசு அறிவித்துள்ளது.

பாகிஸ்தான் சிறையிலுள்ள சுமார் 802 இந்திய மீனவர்கள் மற்றும் 123 இந்தியப் பொதுமக்கள் விடுதலை செய்யப்படவுள்ளனர் எனவும், உரிய சட்ட வழிமுறைகள் முடிந்த பிறகு அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் எனவும் பாகிஸ்தான் வெளிவிவகார செய்தித் தொடர்பாளர் ஜலீல் அப்பாஸ் செய்தியாளர்களிடம் கூறினார்.

இதேவேளை, பாகிஸ்தானுக்கு விஜயமொன்றை மேற்கொண்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்கள் ஹர்கிஷன்சிங், ஏ.பி.பரதன் ஆகியோர் பாகிஸ்தான் ஜனாதிபதி முஷாரப்பைச் சந்தித்து இந்தியக் கைதிகளை விடுதலை செய்வது குறித்து பேச்சு நடத்தினர் என்றும -

அவர்கள் முன்னிலையிலேயே 200 இந்தியர்களை விடுதலை செய்ய ஜனாதிபதி உத்தரவிட்டார் எனவும் -

தற்போது 200 இந்தியர்கள் விடுதலை செயயப்பட்டு விட்டனர் எனவும் செய்தியாளர்கள் கூறினர்.

(த-க)

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள மொறிஸ் 1000 - 1ஸ்ரீ ஒன்பதினாயிரத்திச் சொச்ச இலக்கத்தை யுடைய கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: திரு.ந.அருணாசலம், குளப்பிட்டிச் சந்தி, கொக்குவில். (42668)

## கார் விற்பனைக்கு

எம்மிடம் 18 - XXXX வெள்ளை நிறக் கார் ஹொண்டா சிவிக், 11 ஸ்ரீ XXXX சிவப்பு நிறக் கார் லான்ட்சர் - இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: இல.884, கே.கே.எஸ்.றோட், யாழ்ப்பாணம். T.P 0777 758147. (42647)

## வீடு விற்பனைக்கு

இல. 55, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப் பாணத்தில் அமைந்துள்ள மேல்மாடி வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: க.ராதாகிருஷ்ணன், 77, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப் பாணம். (42547)

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகர எல்லைக்குள் கற்குளி தபாலக மத்தியில் திருத்தக்கூடிய கட்டடத் துடன் கிணற்றுப் பங்குடன் நிலப்பரப்பு 3 குளி 2.8 கொண்ட காணி விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: T.P. 222 6061 (தரகர் தேவையில்லை) (42654)

கொடிகாமம் நாவலடிப் பாடசாலைக்கு முன்னால் 16 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: சி.அருளம்பலம், பஸ்நிலையம், கொடிகாமம். (சி-41284)

## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தில், 1979 பிறந்த, மக நட்சத்திரம், 5' 9" உயரமுள்ள, ஆஸ்திரேலியா பிரஜாவுரிமை பெற்ற, கணக்கியல் படித்த, மெசின் ஒப்பரேட்டர் மணமகனுக்கு ஆங்கிலம் தெரிந்து சரளமாகப் பேசக் கூடிய மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். சீதனம் பேசித் தீர்க்கலாம். ஜாதகக் குறிப்பு, புகைப்படம் என்பவற்றுடன் விண்ணப் பிக்கவும். தொடர்பு: விளம்பர இல.2513, மே/பா உதயன், யாழ்ப்பாணம். (42595)

## வானொலி நாடகம் எழுதுவது எப்படி ?

இந்த நூலை வாசித்தால் நடாகம், சிறு கதை, இரண்டும் எழுதலாம். மாணவர்களுக் குப் பொருத்தமான மூன்று சமூக நாடகங் களும் கொண்டது. எல்லா இலக்கியங்களும் படைத்த கலாபூசணம் அராலியூர் ந.சுந்தரம் பிள்ளை எழுதியது. (42650)

## தவறிவிட்டது

முக்கிய ஆவணங்கள் அடங்கிய பார்சல் 28.02.2005 திங்கட்கிழமை அன்று காங்கேசன் துறை வீதி, மல்லாகத்திற்கும் யாழ்ப்பாணம் மனோகரா சந்திக்குமிடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்புகொள்ளவும். மா. மகாலிங்கம், சங்குவேலி தெற்கு, மானிப்பாய். தொ.பே. 0776624415 (சன்மானம் வழங்கப் படும்) (42680)


## சமையலாளர் தேவை

கீழைத்தேச, மேலைத்தேச சமையல் தெரிந்தவர்கள் தேவை. வெளிநாட்டில் வேலை செய்த அனுபவம் உள்ள வர்கள் விரும்பத்தக்கது.
உயர்ந்த ஊதியம் வழங்கப்படும்.
நேரில் வரவும்.

தொடர்புகளுக்கு:
OLD PARK CHINESE RESTAURANT
(42604) 40, Kandy Rd. Jaffna.


# தன் வயிற்றைக் கிழித்து சிசுவை வீசிய தாய்!

புத்தளம்,மார்ச்4

தன் வயிற்றைத் தானே கத்தியால் கிழித்து நிறைமாத சிசுவை வெளியே இழுத்து வீசினார் என்று கூறப்படும் தாய் ஒருவர் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொடூரமான சம்பவம் புத்தளம் கல்லடிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது. சிங்கள இனத்தைச் சேர்ந்த பெண் ஒருவரே இந்தச் சம்பவத்தில் தொடர்புபட்டவர் என்று பொலீஸார் கூறுகின்றனர்.

குறிப்பிட்ட பெண்ணின் கணவன் வெளி நாட்டுக்குத் தொழில் பெற்றுச் சென்று பல வருடங்களாகிவிட்டன. இத்தம்பதிக்கு ஏற்கனவே இரு பிள்ளைகள் இருக்கின்றனர். கணவன் வெளிநாடு சென்ற பின்னர் ஏற்பட்ட தவறான உறவு மூலம் மற்றொரு குழந்தைக் குத் தாயானாள் அப்பெண். அயலவர்கள் இதுபற்றிக் கேட்டபோது, தனக்கு வயிற்றில் கட்டி என்று கூறி விடயத்தை மழுப்பிவிட்டார்.

பிரசவ காலத்திற்கு சில நாள்கள் முன்னதாக இரவோடு இரவாக கத்தியொன்றை எடுத்து தனது வயிற்றைத் தானே கிழித்து சிசுவை வெளியே எடுத்து அதனை பற்றைக் குள் போட்டு மறைத்து விட்டார் அப்பெண் என்கின்றனர் விசாரணை நடத்தும் பொலீஸார்.

இச்சம்பவம் அயலவர்களுக்குத் தெரிய வரவே புத்தளம் பொலீஸாருக்குத் தகவல் கொடுக்கப்பட்டது. பொலீஸார் இறந்துவிட்ட சிசுவை மீட்டதுடன் அதன் தாயான படுகாயமுற்ற பெண்ணைக் கைதுசெய்தனர்.

படுகாயமுற்ற பெண் தற்சமயம் நீர் கொழும்பு வைத்தியசாலையில் சிகிச்சைக் காகச் சேர்க்கப்பட்டுள்ளார். (த-க)

# தண்ணீர்த் தாங்கி அன்பளிப்பு

வலிகாமம் தெற்கு,மார்ச்4

சுன்னாகம் மக்கள் வங்கியினரால் கந்த ரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை ஆசிரியர்களின் பாவனைக்கென குடிதண்ணீர் வடிதாங்கியொன்று அன்பளிப்புச் செய்யப்பட் டுள்ளது.

பாடசாலை மாணவர்களுக்கான 'சிசு உதான' சேமிப்பு கணக்கிற்கு அதிகமான மாணவர்களை இணைத்துக் கொடுத்தமைக் காக ஆசிரியர்களுக்கு இந்த அன்பளிப்பு வழங்கப்பட்டது.

சுன்னாகம் மக்கள் வங்கி முகாமையாளர் மா.சந்திரகாந்தன் பாடசாலைக்குச் சென்று பாடசாலை மாணவர்களுக்கான 'சிசு உதான' வைப்பு பற்றி கலந்துரையாடி விளக்கமளித் தார்.

பரிசு பெற்ற மாணவர்களுக்கான பரிசில் களையும், ஆசிரியர்களுக்கான அன்பளிப்பு களையும் அதிபர் க.செல்வக்குமாரன் ஊடாக வழங்கினார். (த-152)

## தசாக கிரகயக்ஞ அழைப்பு



அன்புடையீர்

நிகழும் தாரண வருஷம் மாசி மாதம் 12ஆம் திகதி (24.02.2005) வியாழக்கிழமை சிவபதம் அடைந்த அன்னை

**திருமதி திருச்செந்தில்நாதக் குருக்கள் பரமேஸ்வரி அம்மா அவர்களின்**

ஆத்மசாந்திக்கான கிரியைகள் பின்வரும் திகதிகளில் நடைபெறும் அதில் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் சுற்றம் சூழ வந்து ஆத்மசாந்தியில் பங்குகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

| | | |
|---|---|---|
| தசாகம் | 05.03.2005 | சனி காலை 9 மணி |
| ஏகோதிஷிடம் | 06.03.2005 | ஞாயிறு காலை 9 மணி |
| சபிண்டீகரணம், திருஹஜக்கும் | 07.03.2005 | திங்கள் காலை 9 மணி |

குறிப்பு: 07.03.2005 திங்களன்று 12 மணியளவில் நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும் வண்ணம் கேட்டுக்கொள்கிறோம்.

வீரபத்திரர் கோவிலடி,
துன்னாலை மத்தி, கரவெட்டி.

பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(42677)(21-14-15)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 10 – 07 – 1917

இறப்பு 14 – 02 – 2004

**திருமதி பொன்னம்மா சின்னத்துரை**

திதி: 04.03.2005 (அபரபக்க நவமி)

ஆயிரம் உறவுகள் இருந்தென்ன
அம்மம்மா என்றழைக்க ஓர் உறவு இல்லையே!
உங்கள் உறவுகள் ஒவ்வொரு தேசத்தில்
இருந்தாலும்
உங்கள் நினைவு நாளில் எல்லோர்
விழிகளும் நனைகின்றன.

அன்னாரின் குடும்பத்தினர்

'ஆனந்த பவனம்'
237, பருத்தித்துறை வீதி,
முத்திரைச் சந்தி, யாழ்ப்பாணம்.

(42675)(21-14-15)


German Technical Cooperation

# VACANCIES

GTZ-Northern Rehabilitation Project invites applications from suitable candidates for the following positions at their Jaffna office on a contractual basis:

## SECRETARY

- A minimum qualification of G.C.E(A/L)
- An excellent command of written and spoken English (additional command in Sinhala is preferable)
- Preferably with a minimum of two years experience in a similar capacity
- Computer literacy with thorough working knowledge of MS Office packages
- Suitable training in Secretarial functions and distinct ability to work independently and as part of a team
- Preferred age is 25 to 35 years

## RECEPTIONIST

- A minimum qualification of G.C.E (A/L)
- Pleasing personality with amiable telephone manners
- Computer literacy in MS Office packages
- Preferred age is 20 to 30 years
- Experience in a similar position is an added advantage

Women and Men are equally encouraged to apply for these posts.

Please forward your CV together with names of two non related referees and a contact number on or before 11th March 2005

**Senior Advisor**
**GTZ-Northern Rehabilitation Project,**
**472, Main Street,**
**Jaffna.**

(C/41283)


## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 26 – 05 – 1926

மறைவு 02 – 02 – 2005

**இராமுப்பிள்ளை சோமசுந்தரம்**

(ஓய்வு பெற்ற சிறைச்சாலை உத்தியோகத்தர்)

எமது குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்து
மனிதருள் மாணிக்கமாய் மாண்புடன் வாழ்ந்து
எம் எல்லோரையும் வளர்த்து வாழ்வித்து
வையத்துள் நல்வாழ்வு வாழ்வதற்கு
தன்னைச் சந்தனமாய்த் தேய்த்து
என்றும் இன்முகத்துடன் இன்புற்றிருக்க வாழவழிவகுத்த

எங்கள் அன்புத் தெய்வம் இராமுப்பிள்ளை சோமசுந்தரம் அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று (04.03.2005) வெள்ளிக்கிழமை நடை பெறவுள்ளது. அந்நிகழ்விலும் அவரது ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டுகிறோம்.

நிலாவரை, புத்தூர். (42678)(21-14-15)

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

# கலந்துரையாடலும் பயிற்சி வகுப்பும்

யாழ்ப்பாணம்,மார்ச்.4

எதிர்வரும் 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள உதைபந்தாட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்கான ஆயத்தப் பயிற்சி வகுப்புக் களும் கலந்துரையாடல்களும் நாளையும் நாளைமறுதினமும் யாழ்.உதைபந் தாட்ட மத்தியஸ்தர் சங்கப் பணிமனையில் காலை 10 மணியள வில் நடைபெறவுள் ளன.

அத்துடன், பரீட் சார்த்திகளுக்கான பரீட்சை அனுமதி அட்டையும் வழங்கப் படும். கலந்து கொள் ளத் தவறும் பரீட்சார்த் திகள் தங்கள் பரீட் சையில் இருந்து விலக்கப்படுவார்கள் என்று யாழ். உதை பந்தாட்ட மத்தியஸ் தர் சங்கத்தின் செய லாளர் இ.ஆர்னல்ட் தெரிவித்தார். (த-190)


YOGI BEAUTY PARLOUR and HOME SCIENCE ACADEMY

(Academy of Beauty Culture, Hair Dressing & Home Economies)

குறுகிய காலப் புதிய பயிற்சி வகுப்புகள் 05.03.2005 சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.

1. கேக் ஐசிங் அலங்காரம், மேலைத்தேய ஐசிங் அலங்காரம், மாச்சீனி மலர் அலங்காரம் (Fondant Structures & Sugar Flowers)
2. முக ஒப்பனை, தலை அலங்காரங்கள், மணப் பெண் அலங்காரங்கள்.
3. அழகுக்கலையும் மூலிகை சிகிச்சை முறைகளும் (Facial Classes) (Beauty Culture and Herbal Therapies)

இதில் பாடக்குறிப்புகளுடன் கூடிய செய்முறை விளக்கங்கள் பயிற்சி அளிக்கப்படும்.
சேரவிரும்பும் மாணவிகள் உடன் தொடர்புகொள்ளவும்.

(41281) (24-21-14-15)

T.P.: 222 2796
0777164923

75, அம்மன் வீதி,
நல்லூர் - யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக).

உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி, தொலைநகல் — 222 2030, 222 2083, 222 3837.

# நிருபணமாகும் நிதர்சனங்கள்

இலங்கை இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வு காணும் சமாதான முயற்சிகள் கிணற்றில் போட்ட கல்லாகத் தேங்கிக் கிடக்கின்றன.

அதுவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி. இணைந்து அமைத்த ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசு ஆட்சிக்கு வந்த இந்த ஓராண்டு காலத்திலே அமைதி முயற்சிகள் சற்றும்கூட முன் நகரவில்லை.

வடக்கு - கிழக்கு என்றோ, தெற்கு என்றோ பேதமின்றித் தாக்கிய ஆழிப்பேரலையும், அதன் அழிவுகளும் சமாதான முயற்சிகளை முன்னெடுக்கவேண்டிய தரப்புகளுக்கு இணைந்து செயலாற்றும் வரலாற்று வாய்ப்பை - சரித்திரக் கட்டாயத்தை - கொடுத்தன. ஆனால், பலன் ஏதுமில்லை. சமாதான முயற்சிகளை மேற்கொள்வதற்கான சூழ்நிலையைக் கெடுத்து, முரண்பாடுகளையும், குழப்பங்களையும் ஏற்படுத்தியதைத் தவிர, இந்த அரசின் காலத்தில் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கான - ஆக்கபூர்வ - செயற்பாடுகள் எதுவும் இடம் பெறவில்லை.

நாட்டின் தேசிய முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினையான இனப்பிணக்குக்கு இணக்கமான தீர்வு காணும் விடயத்தில் கொள்கை முரண்பாடும், ஒன்றுக்கொன்று எதிரெதிரான சிந்தனை நிலைப்பாடும் கொண்ட சக்திகளின் ஒன்றிணைவான இந்த அரசினால் எதுவும் சாதிக்கமுடியாது என்பது ஆரம்பத்திலிருந்தே எதிர்பார்க்கப்பட்டதுதான்.

இப்போதைய - பிந்திய - அமைதி முயற்சிகளைத் தென்னிலங்கைத் தரப்பிலிருந்து முன்னெடுத்தவரும், அந்த முயற்சிகளை ஆரம்பித்த ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க இந்த விடயத்தையே திரும்பத் திரும்பச் சுட்டிக்காட்டி வந்தார்; வருகிறார்.

இனப்பிரச்சினைக்கு அமைதித் தீர்வுகாணும் விடயத்தில் இந்த அரசின் ஒட்டுமொத்தமான நிலைப்பாடு - கொள்கைப் போக்கு - சிந்தனையோட்டம் - என்னவென்பதை அரசு முதலில் தெட்டத்தெளிவாகப் பகிரங்கப்படுத்த வேண்டும். அதனைச் செய்வதற்கு அரசு முதலில் தனக்குள் ஒருமித்த - திடமான - ஏகமனதான - முடிவுக்கும், தீர்மானத்துக்கும் வரவேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்கவும், மறுபுறத்தில் தமிழர் தரப்புப் பிரதிநிதிகளும் மீண்டும் மீண்டும் சுட்டிக்காட்டி வந்தனர்.

இதையே கடந்த நவம்பரில் தமது மாவீரர் தின உரையில் தலைவர் வே.பிரபாகரன் வெகு தெளிவாகச் சுட்டிக்காட்டியிருந்தார்.

*"அரச கூட்டணிக்குள் நிலவும் உள் முரண்பாடும், அடிப்படையான கொள்கை வேறுபாடும் சமாதானப் பேச்சுகளை ஆரம்பிப்பதற்குப் பெரும் இடையூறுகளாக எழுந்துள்ளன. தமிழரின் தேசிய இனப்பிரச்சினை குறித்து அரச கூட்டணிக்குள் அங்கம் வகிக்கும் கட்சிகள் மத்தியில் ஒரு தெளிவான கொள்கைத் திட்டமோ, பொதுவான அணுகுமுறையோ இருக்கவில்லை. தமிழர் விரோத இனவாதத்திலும், போர் வெறிபிடித்த இராணுவ வாதத்திலும், சிங்கள - பௌத்த மேலாதிக்கத்திலும் ஊறித் திளைத்த தீவிரவாத சக்திகளுடன் அதிகாரக் கூட்டுறவு வைத்திருக்கும் சந்திரிகா அம்மையாரால் ஒரு தெளிவான கொள்கைத் திட்டத்தின் அடிப்படையில் சமாதான முயற்சிகளை முன்னெடுக்க முடியவில்லை. இதுதான் தென்னிலங்கையில் நிலவும் உண்மையான அரசியல் யதார்த்த நிலை. அரச கூட்டணிக்குள் கருத்தொற்றுமையில்லை என்ற அரசியல் உண்மையானது மிகவும் சாதுரியமான முறையில், சர்வதேச சமூகத்திற்கு இருட்டடிப்புச் செய்யப்படுகிறது."* - இப்படித் தலைவர் வே.பிரபாகரன் சுட்டிக்காட்டியிருந்தார்.

அது அப்படியே அப்பட்டமான உண்மை என்பது இப்போது நிதர்சனமாகி வருகின்றது.

அமைதி முயற்சிகளில் ஓரடி முன்னெடுத்து வைத்தாலும் அரசைக் கவிழ்த்துவிடுவோம் என்று, ஜனாதிபதி சந்திரிகாவுக்கு அடித்துக் கூறியிருக்கின்றார்கள் ஆட்சியைத் தக்கவைப்பதற்காக அவரே தம்முடன் கூட்டுச் சேர்த்துக் கொண்டுள்ள பௌத்த - சிங்கள மேலாண்மை போக்குத் தீவிரவாதிகள்.

"ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகள் தொடர்பாகப் புலிகளுடன் சேர்ந்து செயற்படுவதற்காகப் பொதுக் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்கவோ அல்லது புலிகளுக்குத் தன்னாட்சி அதிகார சபையை வழங்கவோ அரசு முன்வருமானால் அரசை விட்டு வெளியேறி அரசைக் கவிழ்த்துவிடுவோம்?" - என்று ஜே.வி.பி. தலைவர் சோமவன்ஸ அமரசிங்க பகிரங்கமாக அறிவித்திருப்பது - அரசுக்கு எச்சரித்திருப்பது - கடந்த மாவீரர்தின உரையில் தலைவர் பிரபாகரன் சுட்டிக்காட்டிய விடயத்தைப் பட்டவர்த்தனமாக நிரூபித்து, அம்பலப்படுத்தியிருக்கின்றது.

ஜே.வி.பியின் இந்த நிலைப்பாட்டுக்கு அரசுத் தலைவி ஜனாதிபதி சந்திரிகாவின் பதில் என்ன? அது அசாத்தியம்.

வழமைபோல பதில் தராமல் - அரசுக் கூட்டுக்குள் உள்ள கருத்து வேறுபாட்டைச் சாதுரியமான முறையில் மூடி மறைத்துக் கொண்டு - ஆட்சியை இழுத்துக் கொண்டு போவதற்காகக் காலத்தை இழுத்தடிப்பார் அவர் என எதிர்பார்க்கலாம்.

# தற்காலிக வீடமைக்கும் பணிகள் வடமராட்சியில் ஆமைவேகம்!

யாழ்ப்பாணம், மார்ச்4

சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட வடமராட்சி வடக்கைச் சேர்ந்த மக்களுக்கான தற்காலிக வீடுகளை அமைக்கும் பணிகள் அரைகுறை நிலையிலேயே உள்ளன என பாதிக்கப்பட்ட மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்பகுதியில் ஆயிரத்து 393 வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்கான பொறுப்புக்களை 5 அரசசார்பற்ற நிறுவனங்கள் ஏற்றிருந்தன.

ஆயினும், சுனாமி அனர்த்தம் பாதித்து இரு மாதங்கள் பூர்த்தியான நிலையிலும் இதுவரை 50 வீதமான வீடுகள் கூடப் பூர்த்தியாக்கப்படவில்லை.

இந்நிலையில், பாதிக்கப்பட்ட மக்கள் இடைத்தங்கல் முகாம்களிலும் உறவினர் வீடுகளிலும் தங்கியிருப்பதால் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று கூறப்படுகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான வீடமைக்கும் பணிகளில் கியூடெக் நிறுவனம் தொண்டைமானாறு, பொலிகண்டி மேற்கு, பொலிகண்டி கிழக்கு, சேந்தாங்குளம், சக்கோட்டை, இன்பருட்டி, எரிந்த அம்மன் கோவிலடி, தும்பளை கிழக்கு ஆகிய இடங்களிலும் -

யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் கற்கோவளம், புனிதநகர், மணற்காடு, பொற்பதி ஆகிய இடங்களிலும் -

சேவாலங்கா நிறுவனம் ஆதிகோவிலடி, கொட்டடி, சுப்பர்மடம் ஆகிய இடங்களிலும் -

சிறுவர் பாதுகாப்பு நிதியம் வியாபாரி மூலை, முனை ஆகிய இடங்களிலும் -

வெண்புறா நிறுவனம் வல்வெட்டித் துறையிலும் தற்காலிக வீடுகள் அமைத்துக் கொடுப்பதற்குப் பொறுப்பெடுத்துள்ளன.

எனவே, வீடமைக்கும் பணிகளைத் துரிதமாக முடித்து தம்மை விரைவில் அங்கு குடியமர்த்துமாறு மக்கள் கேட்டுள்ளனர். (கு-202-203)

# சகல கிராம அலுவலர்களுக்கும் விரைவில் உள்ளக இடமாற்றம்

**யாழ்.அரச அதிபர் நடவடிக்கை**

வலி.மேற்கு, மார்ச் 4

யாழ்.மாவட்டத்தில் கடமையாற்றும் சகல கிராம அலுவலர்களும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர். இதற்கான ஆரம்பக் கட்ட நடவடிக்கைகளை யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் மேற்கொண்டுள்ளார்.

இது சம்பந்தமாக அரச அதிபர் யாழ். மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலர்களுக்கும் சுற்றறிக்கை ஒன்றினை அனுப்பி வைத்துள்ளார். ஐந்து வருடங்களிற்கு மேலாக பிரிவில் கடமையாற்றும் கிராம அலுவலர்கள் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர் என்று தெரிகின்றது.

இடமாற்றம் தொடர்பாகச் சகல கிராம அலுவலர்களுக்கும் விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

மே மாதம் தொடக்கம் பிரிவுக்குள்ளேயும் பிரிவுக்கு வெளியேயுமீ இந்த இடமாற்றம் இடம் பெறவுள்ளதாகவும் தெரிய வருகின்றது.

இதேவேளை -

இந்த இடமாற்றத்துக்கான படிவங்கள் பிரதேச செயலகங்களுக்குக் கிடைத்துள்ளன. இந்தப் படிவங்களைச் சகல கிராம அலுவலர்களும் பூர்த்தி செய்து அனுப்பி வைக்கவேண்டும் என்று கேட்கப்பட்டுள்ளது.

குடாநாட்டில் கிராம அலுவலர்கள் சுமார் பத்து ஆண்டுகளுக்கு மேலாகவும் ஒரே பிரிவில் கடமையற்றி வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-86-175)

# மண்டைதீவில் கால்நடைகளுக்கு புதுவிதத் தொற்றுநோய் பரவுகிறது

மண்டைதீவு, மார்ச்4

மண்டைதீவுப் பகுதியில் கால்நடைகளுக்கு ஒருவிதமான தொற்றுநோய் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நோய்த்தாக்கத்திற்கு உட்பட்ட - உரிமை கோரப்படாத - கட்டாக்காலி மாடுகளும் வளர்ப்புக் கால்நடைகளும் சில தினங்களுக்குள் இறந்து விடுகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

வயல் வெளிகளிலும் தரவைகளிலும் இந்த நோயினால் கால்நடைகள் இறந்து கிடக்கின்றன. அவற்றைப் புதைப்பதற்கு எவரும் முன்வராததால் இந்தப் பகுதியில் உள்ள அம்மன் கோயில் சந்தி கரியம்பனை தூத்தாவாரி வாகையடிப் பகுதிகளில் துர்நாற்றம் வீசுகின்றன. இதனால் தொற்றுநோய் பரவும் அபாயமும் உள்ளது.

இங்கு நிலவும் கடும் வெப்பமே இதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. (கு-88)

# யாழ்.ஆஸ்பத்திரி வார்ட்டுகளில் மின்விசிறிகள் சீரில்லை; சிரமம்!

யாழ்ப்பாணம், மார்ச்4

யாழ்.போதனா வைத்தியசாலையின் சில விடுதிகளில் மின்விசிறிகள் சீராக இயங்காது உள்ளமையால் நோயாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

போதனா வைத்தியசாலையில் சகல வார்ட்டுகளிலும் மின்விசிறிகள் பொருத்தப்பட்டு உள்ளன. ஆனால், அவற்றில் பலவும் சீராக இயங்குவ தில்லை.

அவற்றைச் சீராக இயங்கச் செய்வதற்கு உரிய பராமரிப்பாளர்களும் இல்லை என்று வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தற்போது வெய்யில் காலமாகையால் வார்ட்டுகளில் உள்ள நோயாளர்கள் மின்விசிறி இன்றிச் சிரமமடைகின்றனர்.

எனவே, இதனை உரியவர்கள் கவனத்தில் எடுத்து மின்விசிறிகளை ஒழுங்காக இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் எனவும், அத்துடன் அவற்றைப் பராமரிக்கக் கூடியவர்களை நியமித்து நோயாளர்களின் அசௌகரியங்களைக் குறைப்பதற்கு உதவவேண்டும் என்றும் நோயாளர்கள் தரப்பில் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. (கு-203)

# பாதிக்கப்பட்ட உயர் தர மாணவருக்கு பல்வேறு உதவிகள்

யாழ்ப்பாணம், மார்ச்4

சுனாமி இயற்கையனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவன மாணவர்களுக்கு ஏற்பட்ட இழப்புகளின் அடிப்படையில் பல்வேறு உதவிகளைச் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையூடாகச் செய்வதற்கு 'நீடோ' மற்றும் 'வூஸ்' ஆகிய நிறுவனங்கள் முன்வந்துள்ளன.

அண்மையில் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை அலுவலகத்தில் இடம் பெற்ற கலந்துரையாடலிலேயே அந்த நிறுவனப் பிரதிநிதிகள் இதனைத் தெரிவித்தனர்.

இக்கலந்துரையாடலில் 'நீடோ' நிறுவனப் பணிப்பாளர் செபஸ்ரியன் செல்வராஜா, 'நீடோ' நிறுவனத்தைச் சேர்ந்த ரகு, 'வூஸ்' நிறுவனத்தின் வன்னிக்கான இணைப்பாளர் சீலன், அந்த நிறுவனத்தைச் சேர்ந்த துஷ்யந்தன், சர்வதேச தமிழீழ மாணவர் பேரவை இணைப்பாளர் ந.கண்ணன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். (கு-202)

**யாழ்ப்பாணத் தமிழ்ப் பிரபந்த இலக்கியங்கள்**

# வாகீச கலாநிதியின் நூல் ஏழாலையில் வெளியிடப்படும்

யாழ்ப்பாணம், மார்ச்4

வாகீச கலாநிதி எழுதிய 'யாழ்ப்பாணத்துத் தமிழ்ப்பிரபந்த இலக்கியங்கள்' எனும் ஆய்வுப்பெருநூல் வெளியீட்டு விழா எதிர்வரும் 8 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரவு 7 மணிக்கு ஏழாலை களபாவோடை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்மன் ஆலய மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழகக் கல்விப் பீடத் தலைவர் பேராசிரியர் கலாநிதி சபா.ஜெயராசா தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் பேராசிரியர் வி.சிவசாமி, பேராசிரியர் அ.சண்முகதாஸ், பேராசிரியர் பொ.இரகுபதி, கலாநிதி சி.சிவலிங்கராஜா, திருமதி சரஸ்வதி ஜெயராசா, க.கணேசலிங்கம், கவிஞர் கே.பத்மநாதன் ஆகியோர் வாழ்த்துரைகள் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து நூலாசிரியரைக் கற்பித்த ஆசிரியர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும். அதனையடுத்து அவதார நாயகி வசந்தகுமாரி அம்மன் நூலை வெளியிட்டு வைப்பார். அதன் முதற் பிரதியை புரவலர் க.சோமசேகரம் பெற்றுக் கொள்வார்.

நூல் ஆய்வுரைகளைப் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளர் கலாநிதி வ.மகேஸ்வரன் ஆற்றுவார்.

தொடர்ந்து கலைநிகழ்வுகளும் இடம் பெறும். (கு-203)

# உறவுகளை இழந்த குடும்பங்களுக்கு உதவி

கரவெட்டி, மார்ச் 4

ஆழிப்பேரலை அனர்த்தங்களினால் உயிர் இழப்புகள் ஏற்பட்ட குடும்பங்களுக்கு உதவுவதற்காக கனடாவில் இயங்கும் கொற்றாவத்தை நலன்புரிச் சங்கத்தினர் வடமராட்சி தேசிய எழுச்சிப் பேரவையினரிடம் 5 லட்சத்து 10ஆயிரம் ரூபாவைக் கையளித்துள்ளனர். (கு-70)

**நாளை**

*மாசி 21*
*சனிக்கிழமை*
*05.03.2005*
*திதி : தசமி*
*பின்னிரவு 02.39 வரை*
*நட்சத்திரம் : மூலம்*
*பிற்பகல் 12.56 வரை*
*சுபநேரம் : 03.25 - 04.55*
*ராகுகாலம் : 09.25 - 10.55*
*(யாவும் பழைய நேரப்படி)*

# மின்குமிழ்கள் ஒளிர்வதில்லை; யாழ்.–பருத்தித்துறை வீதியில்!

கோப்பாய், மார்ச்4

பருத்தித்துறை - யாழ். வீதியில் கடந்த காலங்களில் பொருத்தப்பட்ட வீதி யோர மின்குமிழ்களில் பெருமளவிலானவை தற்போது ஒளிராமையால் இரவு நேரங்களில் இவ்வீதியால் பயணிப்பவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர்.

தற்போது ஏ-9 வீதியும் கோப்பாய் சந்தியூடாகப் பருத்தித்துறை வீதியுடன் இணைக்கப்பட்டிருப்பதால் இவ்வீதியூடான போக்குவரத்தும் அதிகரித்துள்ளது.

அத்துடன், இவ்வீதியில் திருடர்களின் நடமாட்டமும் வழிப்பறிப்புகளும் அடிக்கடி இடம்பெறுகின்றன


எனவே, சம்பந்தப்பட்டவர்கள் கூடிய கவனம் எடுத்து இவ்வீதியிலுள்ள மின்குமிழ்களைத் திருத்தி ஒளிரச் செய்ய வேண்டுமென்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது. (கு-72)

**உதயவாக்கு**

ஆண்கள் மரங்கள். பெண்கள் அந்த மரத்தை ஆதாரமாகத் தழுவிக் கொண்டு அதனைச் சுற்றி இருக்கும் கொடிகள் குழந்தைகள் அந்தக் கொடிகளில் கூத்தாடும் மணமலர்கள். - இங்கர்சால்.

# மாவீரர்களின் நினைவாலயங்கள் விடுதலை உணர்வை விரிவுபடுத்தும்

## வடபோர்முனைத் தளபதி கேணல் ஜெயம்



பரந்தன்,மார்ச்4

மாவீரர்களின் நினைவாலயங்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப்படவேண்டும். அவை எமது மாவீரர்களின் நினைவுகளை அழியாது காப்பதுடன் மக்கள் மத்தியில் விடுதலை உணர்வை விரிவுபடுத்தும்.

- இவ்வாறு தெரிவித்தார் வடபோர்முனைக் கட்டளைத் தளபதி கேணல் ஜெயம்.

கடந்த 14ஆம் திகதி கண்டாவளை மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற மாவீரர் நினைவாலயத் திறப்பு விழாவில் சிறப்புரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

கண்டாவளைக் கிராமத்தில் 46 மாவீரர்கள் ஆகுதியானார்கள். இந்த மாவீரர்களுக்கான நினைவாலயத்தை இந்தக் கிராம மக்கள் ஒன்று சேர்த்து அமைத்தீர்கள்.

எமது தமிழ் இனம் இதுபோன்று வீரச்சாவைத் தழுவிக்கொண்ட மாவீரர் அனைவருக்கும் ஆங்காங்கே அந்தந்த இடங்களிலே மாவீரர் நினைவாலயம் அமைக்கவேண்டும். இது ஒரு நினைவுச் சின்னமாக இருக்கவேண்டும். இந்த வகையில், கண்டாவளையில் இந்த நினைவாலயம் அமைத்ததையிட்டு பெருமையடைகின்றேன்.

நாங்கள் ஏன் ஆயுதம் ஏந்திப் போராடவேண்டிய சூழல் ஏற்பட்டது என்பதை அனைவரும் சிந்திக்க வேண்டும்.

இந்த நிலைவாலயத்திலே வைக்கப்பட்டிருக்கின்ற 46 மாவீரர்களும் எதற்காகத் தமது இன்னுயிர்களைத் தியாகம் செய்திருக்கின்றார்கள். என்பதை ஒவ்வொரு தமிழ்மக்களும் சிந்திக்கவேண்டும். காலத்திற்குக் காலம் சிறிலங்கா அரசினால் தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்டு வந்த அநீதி - கொடுமை என்பவற்றை எதிர்த்துப் போராடுவதற்கு, எமது தலைவர் தலைமை ஏற்று ஆயுதப் போராட்ட வடிவில் இன்று இலங்கை அரசுடன் சவால்விடக்கூடிய அளவில் பலத்தைப் பெற்றிருக்கின்றார்.

எமது அமைப்பின் வளர்ச்சியோடு இந்த மாவீரர்களின் தியாகமும் எமது மக்களினுடைய உணர்வலைகள், ஒத்துழைப்புகள் யாவும் கிடைத்துள்ளது.

போராட்டத்தின் இறுதி இலட்சியத்தை அடைவதற்கு இதுபோன்ற மாவீரர்களின் நினைவாலயங்கள் கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு இதுபோன்ற நிகழ்வுகள் நடத்தும்போது அந்தக் கிராமத்திலே வாழ்கின்ற மக்களது மனதிலே உணர்வலைகள் ஏற்படும். அந்த உணர்வலைகள் ஊடாக நாங்கள் விடுதலையை வென்றெடுக்கவேண்டும்.

இந்த மண்ணிலே வாழ்ந்து மாவீரர்களான மாவீரர்களின் இலட்சியக் கனவுகள் நிறைவேறி, நாம் எமது இலட்சியப் பாதையைச் சென்றடையவேண்டும்.

ஒவ்வொரு தமிழர்களும் நாம் தமிழீழத்தில் சுதந்திரமாக வாழவேண்டும் என்ற உயரிய இலட்சியத்துடன் நாளாந்தக் கடமைகளை மேற்கொள்ளவேண்டும். இதனூடாகத்தான் மாவீரர்களின் இலட்சியத்தை நாம் அடைய முடியும்.

எமது போராட்டத்தின் வளர்ச்சியோடு எமக்கு இன்று ஏற்பட்டிருக்கும் சர்வதேச ரீதியான ஒரு வளர்ச்சிப் போக்கு சரியான அடித்தளம் இட்டு எமக்கு எது தேவை என்பதனை மக்களின் எழுச்சியூடாகச் சர்வதேச உலகிற்கு எடுத்துக்கூறவேண்டிய ஒரு கட்டாய தேவை எமக்கு இன்று இருக்கின்றது.

அண்மையில் ஏற்பட்ட சுனாமியின் தாக்கத்தில் கூட சிங்கள ஆட்சியாளர்களால் தமிழர்கள் புறக்கணிக்கப்பட்டு பாராமுகமாக நடத்தப்பட்டதை நாம் ஒவ்வொருவரும் கண் கூடாகப் பார்த்திருக்கின்றோம்.

இந்த ஒரு விடயமே எமக்கு ஒரு நல்ல சிந்தனையை உருவாக்கவேண்டும்.

தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் மக்களின் அவலங்களைத் தீர்த்துவைப்பதற்கு எந்த ஒரு முன்மாதிரியான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை.

இதனூடாக நாம் ஒன்றை விளங்கிக் கொள்ளவேண்டும். எங்களினுடைய தலைவிதியை நாங்களே தீர்மானிக்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஆகவே, இன்று எமக்கு ஏற்பட்டிருக்கின்ற படை, பல ரீதியான பெரிய வளர்ச்சி, சர்வதேச ரீதியாக ஏற்பட்டிருக்கின்ற உணர்வலைகளை விளங்கிக்கொள்கின்ற தன்மை இவற்றைப் பயன்படுத்தி எங்களுடைய இறுதி இலட்சியமான தமிழீழத்தை வென்றெடுப்பதறகு ஒவ்வொரு தமிழ்மகனும் செயற்படவேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றோம்.

இனியும் சிங்கள ஆட்சியாளர்களை நம்பிக்கொண்டு இருக்காது எமது பிரதேசத்தை நாம் மீட்டெடுக்கவேண்டும்.

எங்களுடைய பிரதேசங்களை மீட்டெடுப்பதன் ஊடாகவும், அதனைத் தக்கவைத்துக் கொள்வதன் ஊடாகவும், தமிழீழத்தில் வாழ்ந்துகொண்டிருக்கின்றோம் என்பதனை வெளி உலகிற்குச் சொல்லக்கூடிய ஒரு நிலையை நிச்சயமாக உருவாக்கவேண்டும் - என்றார்.

இந்தத் தேசத்தின் விடுதலையையும் உணர்வலைகளையும் அனைவர் மனங்களிலும் ஏற்படுத்தி, எமது தேசத்தின் விடுதலையை வென்றெடுப்பதற்கு மாவீரர் நினைவாலயங்கள் அமைப்பது மிகவும் அவசியம்.

இவ்வாறு கிளிநொச்சி மாவட்ட மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் செல்வி பூவிழி தெரிவித்தார்.

அண்மையில் கண்டாவளை மகாவித்தியாலயத்தில் 46 மாவீரர்களின் திருவுருவப்படங்கள வைக்கப்பட்ட நினைவாலயம் ஒன்று திறக்கப்பட்டது.

அந்தத் திறப்பு விழா நிகழ்வில் -

கிளிநொச்சி மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் பூவிழி தனது உரையில் தெரிவித்ததாவது:-

இப்பாடசாலையில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவாலயம் போல் இந்தத் தமிழ்த் தேசத்தின் விடுதலைக்காகத் தங்கள் இன்னுயிரை ஆகுதியாக்கிய மாவீரர்களின் நினைவாகவும் - அவர்களின் தியாகத்தையும் அர்ப்பணிப்பையும் நினைவு கூர்வதற்காகவும் ஒவ்வொரு பாடசாலைகளிலும் நினைவாலயம் அமைப்பது அவசியம்.

முதற்கட்டமாக இப்பாடசாலையிலேயே நினைவாலயம் அமைக்கப்பட்டுள்ளது. இதே போன்று ஏனைய பாடசாலைகளிலும் அமைக்கப்படவேண்டும் - என்றார்.

தமிழீழக் கல்விக் கழகக் கிளிநொச்சி மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜீவராஜ் கருத்துத் தெரிவிக்கையில் -

கிளிநொச்சி மாவட்டத்தின் பாடசாலைகளுக்கு முன்மாதிரியாக இப்பாடசாலை விளங்குகின்றது. இப்பாடசாலையின் சமூகத்தினர் கல்வி, அறிவு, உடல் ஆகியவற்றின் வளர்ச்சிகளுக்காகப் பின்புலங்களில் நின்று பல உதவிகளைப் புரிந்துவருவதை நாம் அறிவோம். அந்த வகையில், மாவீரச் செல்வங்களிற்காக ஒரு நினைவாலயத்தைத் திறந்து வைப்பதில் நாம் பெருமை அடைகின்றோம்.

இநத நினைவாலயத்தின் திறப்பு நிகழ்வின் மூலம் மாவீரர்களது இலட்சியக் கனவுகள் நினைவாவதுடன், எமக்கும் பெருமையைத் தருகின்ற ஒரு விடயமாகும் - என்றார்.(த-202-352)

# கூரை பெரும்சேதம்; வேலிகள் ஏதுமில்லை: முழங்காவில் தபாலகத்தின் அவலநிலை!

முழங்காவில் உபதபாலகம் கடந்த காலங்களில் ஏற்பட்ட போர்க்காலச் சூழலின்போது அதிர்வடைந்து உடைவுகள் ஏற்பட்டுள்ளது. இதனால் அங்கு கடமைபுரிவோர் பெரும் சிரமங்களின் மத்தியில் செயற்படுகின்றனர்.

இத்தபாலகம் கடந்த 1971ஆம் ஆண்டு புதிதாக அமைக்கப்பட்டது. அதன் பின்னர் எந்தவிதமான திருத்த' வேலைகளும் செய்யப்படாது இதுவரை இயங்கி வருகின்றது.

இது ஓர் அரச கட்டடமாக இருந்தபோதிலும், இதனைச் சுற்றி ஒரு வேலி கூட அமைக்கப்படவில்லை.

அத்துடன், மழைகாலங்களில் உடைவுகள் ஏற்பட்டுள்ள கூரைகளால் கட்டடத்தினுள்ளே தண்ணீர் புகும் நிலைமையும் இங்கு காணப்படுகின்றது.

கடந்த 34 வருடங்களாக இநதத் தபாலகம் திருத்த வேலைகள் எதுவும் செய்யப்படாது இருப்பதையிட்டு அப்பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுத்து இத்தபாலகம் புதுப்பொலிவுபெற உதவவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-203-415)

# குளவி கொட்டியதில் 15 மாணவர்கள் ஆஸ்பத்திரியில்!

வெள்ளாங்குளம்,மார்ச்4

உடற்பயிற்சியில் ஈடுபட்ட மாணவர்கள் மீது குளவி கொட்டியதில் 15 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் கிளிநொச்சி குமுழமுனை அ.த.க. பாடசாலையில் இடம்பெற்றுள்ளது.

அண்மையில் இல்ல மென்வன்மைப் போட்டிக்கான பயிற்சிகளில் ஈடுபட்டிருந்த மாணவர்களையே குளவி தாக்கியுள்ளது.(த-202-415)

# தோல்பொருள் உற்பத்தி நிலையம் திறந்துவைப்பு

போரினால் பாதிக்கப்பட்ட மக்களின் வருமான ஊக்குவிப்புக்கான சமுதாய முன்னேற்ற நிலையமும் ஐ.ஓ.எம். நிறுவனமும் இணைந்து தோல்பொருள் உற்பத்திப் பயிற்சி நிலையம் ஒன்றை நேற்றுமுன்தினம் மல்லாவியில் திறந்து வைத்துள்ளன.

இந்நிகழ்வில் நிலையத்தின் பெயர்ப்பலகையையினை வன்னி மாவட்ட ஐ.ஓ.எம். நிறுவன இணைப் பாளர் அனுராதன் திரைநீக்கம் செய்து வைத்தார். பயிற்சி நிலையத்தைத் தமிழீழ அரசியல் துறைத் துணைப்பொறுப்பாளர் சோ.தங்கன் நாடாவெட்டித் திறந்துவைத்தார்.(த-2-3)

# பிரச்சினைகளைச் சுயமாகத் தீர்க்கும் அறிவைப் பெண்களிடம் வளர்க்கவேண்டும்

## முல்லை. மாவட்ட அன்னையர்கள் தீர்மானம்

புதுக்குடியிருப்பு,மார்ச்4

பெண்கள் அனைவரும் எழுதவும், வாசிக்கவும் சுயமாகவே தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காண்பதற்கும் தங்களது அறிவுத் திறன்களை வளர்த்துக்கொள்ளவேண்டும். இதற்கான ஏது நிலைமை கிராமங்கள் தோறும் ஏற்படுத்துதல் வேண்டும்.

கடந்த 28ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட அன்னையர் முன்னணியின் விசேட கூட்டம் ஒன்று அன்னையர் முன்னணி நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவி திருமதி கௌரி புத்திரி தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டது.

அத்துடன், மார்ச் 8ஆம் திகதி நடைபெறவுள்ள சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மாவட்டமட்டச் செயற்பாடுகள் தொடர்பாகவும் சமூகத்தில் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் இங்கு ஆராயப்பட்டது.

தொடர்ந்து கிராமமட்டத்தில் உள்ள பெண்கள் வீடுகளில் எதிர்நோக்கும் பிரச்சினைகள், அவர்களுக்கு விழிப்புணர்வூட்டல், கல்வி, சுகாதாரம் உள்ளிட்ட பிரச்சினைகள் தொடர்பாகவும் ஆராயப்பட்டது. கிராமங்கள் தோறும் சென்று பெண்களின் திறனை வளர்ப்பதற்கான குழுக்களும் அமைக்கப்பட்டது.

இத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு அரசியல் துறையினரின் ஒத்துழைப்புடன் அதற்கான பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டனர். இவர்களால் உளவியல் மருத்துவம் சமூக விழுமியங்கள் போன்றவற்றைப் பேணல், அவர்களுக்கான தகுந்த ஆலோசனைகள் வழங்கல் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் முல்லை. மாவட்ட அரசியல் துறை மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் வேழினி கலந்துகொண்டு கருத்துரை வழங்கினார். (த-203-353)

# மின் இணைப்பு வேலைகள் புதுக்குடியிருப்பில் மந்தம்!

புதுக்குடியிருப்பு,மார்ச்4

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் கடந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட மின் இணைப்பு வேலைத்திட்டங்கள் இன்னமும் பூர்த்தி அடையவில்லை. அப்பகுதி மக்கள் மின்சார வசதிகள் இன்றித் தொடர்ந்தும் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர் என்று கூறப்படுகிறது.

இப்பிரதேசத்தில் உள்ள வீதிகளில் மின்சார இணைப்புகளை ஏற்படுத்துவதற்கான தூண்கள் நிறுவப்பட்டுள்ளன. எனினும், மேற்கொண்டு வேறு எந்தவிதமான வேலைகளும் ஆரம்பிக்கப்படவில்லை.

யுத்தநிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு மூன்று ஆண்டுகள் பூர்தியடைந்துள்ள நிலையிலும், புதுக்குடியிருப்புப் பிரதேசத்திற்கு மின்சாரம் வழங்குவதற்கு எவரும் முன்வரவில்லை.

எனவே, இதனை உரியவர்கள் கவனத்தில் எடுத்து இப்பிரதேச மக்களுக்கு மின்சாரத்தை வழங்க முன்வரவேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரியுள்ளனர். (த-203-353)

வன்னிச் செய்திகள்

# துப்புரவுப் பணியாளர் இல்லை; ஜெயபுரம் சந்தையில் சீர்கேடு

பூநகரி,மார்ச்4

ஜெயபுரம் மக்கள் சந்தையைத் துப்புரவு செய்வதற்கான பணியாளர்கள் இல்லாமையால் மேற்படி சந்தை சுகாதாரம் அற்றுக் காணப்படுகின்றது.

இதனால் பொருள்களை வாங்கவென வருவோர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

பூநகரிப் பிரதேச சபைக்கு உட்பட்ட இச்சந்தை தொடர்பாக உரியவர்களிடம் எடுத்துக் கூறியும் எவரும் இதுவரை இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளவில்லை.

இச்சந்தையைத் துப்புரவு செய்து மக்களின் பாவனைக்கு இடைஞ்சல் ஏற்படாத வகையில் ஆவனசெய்ய உரியவர்கள் உதவுவார்களா என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.(த-203-291)

# சுனாமியால் பாதிக்கப்பட்டோருக்கு உண்ணாப்புலவில் 150 வீடுகள்

## 'வேல்ட்விஷன்' நிறுவனம் அமைக்கிறது

புதுக்குடியிருப்பு,மார்ச்4

சுனாமி அனர்த்தம் காரணமாக முல்லைத்தீவுப் பகுதிகளில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உண்ணாப்புலவுப் பகுதியில் 150 வீடுகளை அமைத்துக்கொடுக்கும் பணிகளில் 'வேல்ட்விஷன்' நிறுவனம் ஈடுபட்டுள்ளது. அத்துடன், பாதிக்கப்பட்டோர் தங்கியுள்ள இடங்களில் 18 முன்பள்ளிகளை அமைக்கவும் அந்த நிறுவனம் நடவடிக்கை எடுத்துள்ளது.

அத்துடன், அப்பகுதியில் உள்ள பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொருள்களையும் வழங்கி வருகின்றது.

வீடுகள் அமைக்கும் வேலைகள் யாவும் முடிவடைந்த பின்னர் பாதிக்கப்பட்ட மக்களை அவ்விடங்களில் குடியமர்த்தவுள்ளனர் எனவும், அங்குள்ள சிறுவர்கள் அங்கேயே அமைக்கப்படும் முன்பள்ளிகளில் கல்வி கற்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்படுமென்றும் அந்நிறுவனத்தினர் தெரிவித்தனர்.

(த-203-353

# சிறப்புக்கள் பொதிந்த கீரிமலை மீண்டும் எப்போது சிவபூமியாகும்?

**இந்துசமய கலாசார அலுவல்கள் திணைக்களம் வருடம் தோறும் நடத்தி வரும் சிவராத்திரி தின நிகழ்வுகள் எதிர் வரும் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கீரி மலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நடை பெறவுள்ளன. நீண்டகாலப் பழைமையும் வரலாற்றுப் பெருமையும் கொண்ட கீரி மலைப்பதி தற்போதைய நிலையிலிருந்து மீண்டும் எப்போது தனது பழைய நிலை யைப் பெறும் என்பது தொடர்பாக ஆராய் கிறது இந்தக் கட்டுரை.**

தமிழ் நாட்டிலும் ஈழத்திலும் வாழ்கின்ற இந்துக்களில் பெரும்பான்மையோர் சைவர் களாகவே உள்ளார்கள். "தென்நாடுடைய சிவனே போற்றி எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி" என்றே மணிவாசகப் பெருமானுடைய தெய்வ வாசகமாகிய திருவாசகமும் குறிப்பிடு கின்றது. சைவர்கள் சிவனையே முழுமுதற் கடவுளாக வணங்குகின்றார்கள். இலங்கையைச் சிவபூமியெனத் தவயோகி திருமூலநாயனார் தமது மந்திரமாகிய திருமந்திரத்தில் குறிப்பிட் டுள்ளார். சைவத் தமிழ் மக்களின் இரண்டு பொக்கிஷங்களாகப் பன்னிரு திருமுறைகளும் பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்களும் போற் றப்படுகின்றன. இந்நூல்கள் அனைத்தும் சிவ னையே முழுமுதற் தெய்வமாகக் குறிப்பிடு கின்றன.

*"சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம்*
*அல்லோம்*
*சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்"*

என்பது அப்பர் பெருமானின் வாக்காகும். "சிவனோடொக்கும் தெய்வம் தேடினும் வேறில்லை" எனத் திருமந்திரமும் குறிப் பிடுகின்றது. சிவனுடன் பிரிவின்றிக் கலந்து நிற்கும் சக்தியாகவே அம்பிகை வழிபடப் படுகின்றாள். சிவனிலிருந்து வேறாகாத சக்தி களாகவே விநாயகப்பெருமானும் கந்தவேட் பெருமானும் வணங்கப்படுகின்றார்கள்.

பரசிவசோதிப்பிளம்பாக இருக்கும் சிவன் தான் ஆறுமுகப் பெருமானாகத் தோன்றினார் என்றே கந்தபுராணம் குறிப்பிடுகின்றது. சிவ னுடைய இருபத்தைந்து மூர்த்தங்களில் துஷ்ட நிக்ரஹ வடிவமாக வைரவர் மூர்த்தமும், தக் கன் யாகத்தைத் தகர்த்தெறிய எடுத்த வடிவ மாக வீரபத்திர மூர்த்தமும் காணப்படுகின்றது.

இலங்கையின் நான்கு எல்லைகளிலும் நான்கு ஈஸ்வரங்கள் இருந்ததாக வரலாறுகள் கூறுகின்றன. வடக்கே நகுலேஸ்வரம், கிழக்கே கோணேஸ்வரம், மேற்கே திருக்கேதீஸ்வரம், தெற்கே சந்திரசேகரேஸ்வரம் ஆகிய ஆலயங் களுடன் வடமேற்கில் உள்ள முன்னேஸ்வர ஆலயமும் உட்படப் பஞ்ச ஈஸ்வரங்கள் ஈழ மணித் திருநாட்டில் மிகத்தொன்மைக் காலம் தொட்டு இருந்து அருளாட்சி புரிந்துவந்த திருத்தலங்கள் ஆகும்.

இவற்றில் சந்திரசேகரேஸ்வர ஆலயம் போத்துக்கீசர் காலத்தில் முற்றாக இடித்துத் தரைமட்டமாக்கப்பட்டுவிட்டது. போத்துக்கீச ரால் இடிக்கப்பட்ட திருக்கேதீஸ்வரமும் நகு லேஸ்வரமும் சைவத்தின் காவலர் சைவசேனா திபதி நாவலர் பெருமானின் வேண்டுகோளை ஏற்றுச் சைவப் பெருமக்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டன.

கோணேஸ்வரம் பல சைவப் பெரியார் களின் அயராத முயற்சியினால் 1950 ஆம் ஆண்டில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. திருக் கேதீஸ்வரத்தின் மீது சம்பந்தரும் சுந்தரரும் கோணேஸ்வரத்தின் மீது சம்பந்தரும் அருண கிரிநாதரும் பாடல்கள் பாடியுள்ளார்கள்.

ஈழத்தின் வடபால் அமைந்துள்ள புனித தீர்த்தமாகிய கீரிமலைத் தீர்த்தம் கண்டகி தீர்த்தம் என்று அழைக்கப்படுகின்றது. கீரி மலையிலே அமைந்து அருளாட்சி புரியும் ஆலயம் நகுலேஸ்வரப் பெருமானுடைய திருத்தலம் ஆகும்.

கீரிமலையில் தீர்த்தம் ஆடியதால் நகுல முனிவர தனது கீரிமுகம் நீங்கி மனித முகத் தினைப் பெற்றார் என்றும் இதே போலச் சோழ இளவரசியாகிய மாருதப்புரவீகவல்லி குதிரைமுகம் மாறப் பெற்றார் என்றும் வரலாறு கள் கூறுகின்றன.

மாவிட்டபுரம் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்ட முருகன் விக்கிரகங்கள் வந்து இறங்கிய இடம் காங்கேசன்துறை என அழைக்கப்பட்டது. கீரிமலை, மாவிட்டபுரம், காங்கேசன்துறை ஆகிய மூன்று கிராமங் களும் அடங்கிய பிரதேசம் கோயிற்கடவை என்று அழைக்கப்பட்டது.

தீர்த்த யாத்திரை செய்து வந்த வியாச மகரிஷி கீரிமலையில் தீர்த்தமாடி நகுலேஸ் வரத்தை வணங்கிச் சென்றார் என்று கூறப் படுகின்றது. தல யாத்திரை செய்துவந்த அருச்சுனனும் கீரிமலைக்கு வந்து நகுலேஸ் வரப் பெருமானை வணங்கிச் சென்றதாக வரலாற்று நூல்கள் கூறுகின்றன.

திருத்தம்பலேஸ்வரம் என்று அழைக்கப் பட்ட நகுலேஸ்வரத்தில் மகா சிவராத்திரி தினத்தைத் தீர்த்த உற்சவமாகக் கொண்டு நகுலேஸ்வரப் பெருமானுக்கு மகோற்சவம் பல வருட காலமாகச் சிறப்பாக நடைபெற்று வந்தது. பிதிர்க்கடன் செய்வதற்காக கீரி மலைக்கு வரும் அடியார்கள் அனைவரும் நகுலேஸ்வரப் பெருமானைத் தரிசித்து இறந்த வர்களின் ஆத்ம சாந்திக்காக மோட்ச தீபம் ஏற்றிச்செல்லும் வழக்கம் நிலவி வந்தது.

ஆடி அமாவாசைக்குப் பல்லாயிரக் கணக் கான மக்கள் கீரிமலையில் தீர்த்தமாடி பிதிர்க் கடன்களைச் செய்துவருவார்கள். புனித பிர தேசமாகத் திகழ்ந்த கீரிமலையில் சிறாப்பர் மடம் சைவப் பண்பாட்டினைப் பேணிப் பாது காக்கும் மடமாக நிலவி வந்தது. கந்தபுராணப் படிப்பு முதலாகப் பல சமய நிகழ்வுகள் அங்கே இடம்பெற்று வந்தன. பெருஞ்ஞானிகள், யோகிகள் கூடிச் சத்சங்கம் நடத்தும் ஆன்மீக நிலையமாகவும் சிறாப்பர் மடம் மிளிர்ந்தது.

1970 முதல் 1990 வரை கீரிமலை சிவ நெறிக் கழகத்தினர் பல சைவ மாநாடு களையும் நிகழ்வுகளையும் ஆலயச் சூழலில் நடத்தினார்கள். வித்துவான் கணேசையரின் முதல் மாணவர் இலக்கண வித்தகர் பண்டிதர் இ.நமசிவாயம் அவர்கள் கூட்டத்திற்குத் தலைமை தாங்குவார்கள்.

**சிவத்தமிழ் வித்தகர் சிவ.மகாலிங்கம்**

மகாஜனாக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியர் திரு.ச.விநாயகரத்தினம் அவர்கள் சிவநெறிக் கழகத்தின் வளர்ச்சிக்காகத் தன் னையே அர்ப்பணித்துப் பணிகள் பல செய் தார். மாணவர்கள் மத்தியிலும் சைவப் பெரு மக்கள் மத்தியிலும் சமய விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் சிவநெறிக்கழகம் சாதித்த சாதனைகள் அளப்பரியதாகும். சிவநெறிக் கழகத்தின் கூட்டங்களில் அறிஞர்கள் பலர் ஒன்றாகச் சங்கமிக்கும் சங்கப் பலகையாகவே இருந்தது.

நகுலேஸ்வரப் பெருமானின் அருளாட்சி நடந்த பிரதேசம் இன்று மக்கள் நடமாட்டமற்ற நிலையில் அழிந்த பிரதேசமாகக் காட்சி தரு கிறது. புனித தீர்த்தமாகிய கீரிமலைக் கடல் சுனாமியின் பொழுது சீற்றம் கொண்டு கேணி யில் குளித்துக் கொண்டிருந்த சிலரின் உயி ரைப் பறித்த கொடுமை இரண்டு மாதங் களுக்கு முன்பு இங்கே இடம்பெற்றது.

ஏன் இந்த அவலம்? இயற்கையின் சீற் றத்திற்கு யாது காரணம்? சிவபூமி குறிக்கப் பட்ட சில நிமிடங்களுக்குள் பிணபூமியாக ஏன் மாறியது? நாற்பதினாயிரம் உயிர்கள் பலியாகியதற்கும் பலருடைய சொத்துக்கள் நிர்மூலமானதற்கும் உற்றார், உறவுகளை இழந்து பலர் பரிதவிப்பதற்குமான மூல கார ணம் யாது? அனைவரும் இதற்கான கார ணத்தை ஆராய வேண்டும். நாட்டை ஆட்சி செய்யும் தலைவர்களிலிருந்து சாதாரணகுடி மகன் வரை இந்த அவலம் ஏற்பட்டதற்கான காரணிகளை உணர்ந்துகொள்ளவேண்டும்.

## ஞானக்கதிர்

இலங்கை ஒரு கடலால் சூழப்பெற்ற தீவு ஆகும். இயற்கை அழிவுகள் ஏற்டபடாமல் இருககவே இந்த நாட்டின் எல்லைகளில் நமது மன்னர்கள் சிவாலயங்களை அமைத்தார்கள். ஆலயங்களில் நித்திய, நைமித்திய கிரியை கள் நடைபெறாவிட்டால் இறைவனுக்கு ஒரு தீங்கும் ஏற்படாது.

நாட்டு மக்கள் தான் துன்பங்களை அனு பவிக்கவேண்டும். ஆலயப் பூசைகள் ஒழுங் காக நடைபெறாவிட்டால் நாட்டின் ஆட்சியா ளர்களுக்குப் பாதிப்பு ஏற்படும். வரட்சி ஏற்பட்டு மக்கள் பட்டினியால் வாடுவார்கள். கொலை. களவு ஆகிய பஞ்சமா பாதகங்கள் தலை விரித்தாடும் என்பதை,

*"முன்னவனார் கோயில் பூசைகள் முட்டிடின்*
*மன்னர்க்கு தீங்குள வாரி வளம் குன்றும்*
*கன்னங் களவு மிகுந்திடும் காசினி*
*என்னரு நந்தி எடுத்துரைத்தானே"*

எனத் தமிழ் மந்திரமாகிய திருமந்திரம் குறிப்பிடுகின்றது.

இந்து சமய விவகார அலுவல்கள் திணைக் களத்தினால் இந்த வருடம் மகா சிவராத்தி விழா கீரமலை நகுலேஸ்வரத்தில் கொண்டா டப்படுகிறது. பாடசாலைகள், அறநெறிப் பாட சாலைகள்; சமயநிறுவனங்கள் ஆகியவற்றி னால் வழங்கப்படும் நிகழ்ச்சிகள் பல இடம் பெறவுள்ளன. "மீண்டும் தொடங்கும் மிடுக்கு" என்று மகாகவி உருத்திரமூர்த்தியின் பாடல் வரிகள் குறிப்பிடுவது போல கீரிமலைப் பிர தேசம் மீண்டும் புனித பிரதேசமாக மாறுவதற் கான அறிகுறிகள் தென்படுகின்றன.

நகுலேஸ்வரப் பெருமானின் பெருஞ்சாந்தி விழா (மகா கும்பாபிஷேகம்) மிக விரைவில் நடைபெற்று நித்திய, நைமித்திய கிரியைகள் அனைத்தும் ஒழுங்காக இடம்பெற்று நமது மக்கள் அனைவரும் சாந்தியும் சமாதானமும் பெற்றுத் தங்களுடைய பிறந்த கிராமத்திலே சொந்த வீட்டிலே நிம்மதியாக வாழும் காலம் மிக விரைவில் ஏற்படுவதற்கு நகுலாம்பிகா சமேத நகுலேஸ்வரப் பெருமானின் திருவருள் துணை அனைவருக்கும் கிடைக்க வேண்டு மென்று நாம் அனைவரும் இறையருளைப் பிரார்த்திப்போமாக. ✳

# சண்டிலிப்பாயில் ஞாயிறு முதல் அஸ்வமேதயாகம் நடக்கும்

'சுனாமி' இயற்கை அனர்த்தத்தினால் உயி ரிழந்தவர்களின் ஆன்ம ஈடேற்றத்திற்காகவும், உலக நன்மையை முன்னிட்டும் சண்டிலிப் பாய் வடக்கு இரட்டையர்புல ஞானவைரவர் ஆலயத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 8ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை மிகப்பிரமாண்டமான முறையில் அஸ்வ மேத மஹாயாகம் நடைபெற ஏற்பாடாகியுள் ளது.

உயிர்களையும், உடைமைகளையும் இழந்து நிர்க்கதியாகி நிற்கும் மக்களின் கிராமங்களை மீளககட்டியெழுப்புவதற்கு முன்னர் அவர்களின் நொருங்கிப்போயுள்ள மனங்களை மீளக்கட்டி யெழுப்புவதே முதன்மையானதாகும்.

பாதிக்கப்பட்ட உள்ளங்களில் அமைதி யும், சாந்தமும் குடிகொள்ளவேண்டுமெனில், இறைவழிபாடு இன்றியமையாதது.



**பிரான்ஸ், பாரிஸ் நகரில் உள்ள மாணிக்க விநாயகர் ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற 9 ஆவது தேர்த்திருவிழாவில் ஈழத்து அடியவர்கள் சைவ ஆசார உடையணிந்து தேர் இழுத்து வந்ததைப் படத்தில் காணலாம்.**

முன்னர் மாபெரும் சக்கரவர்த்திகளால் தமது சுயலாபம் கருதிச் செய்யப்பட்டுவந்த அஸ்வ மேத யாகம், இன்றைய காலத்தில் தேவைக கேற்ப லோக சோடிமத்தின் பொருட்டு நடை பெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

சண்டிலிப்பாய் வடக்கு இரட்டையர் புல ஞான வைரவர் ஆலயத்தின் பரிபாலன சபை யினரும், அவ்வூர் சைவமக்களும் இணைந்து இந்த மாபெரும் யாகத்தினை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்துள்ளனர்.

அஸ்வமேத யாகத்திற்கென கொழும்பில் இருந்து குதிரை ஒன்று கொண்டு வரப்படவுள் ளது. அத்துடன், எதிர்வரும் ஞாயிறு முதல் தினமும் காலை 9 மணிமுதல் அஸ்வம் சர்வ உபசார சகிதம் கிராம பிரதசஷிணம் மிகக் கோலாகலமாக நடைபெறும்.

இந்த யாகம் முன்னர் ஒருபோதும் குடா நாட்டில் நடைபெறவில்லை. இந்த யாகம் மன் னர்கள் நாட்டின் நன்மை கருதியும், பஞ்சபூதங் களால் ஏற்படும் அவமிர்துக்களைத் தடுக்க வும் செய்யப்பட்ட யாகமாகும்.


ஸ்ரீராமன், தர்மர் போன்ற மன்னர்கள் நாட் டைக் காக்கவும், சகலசீவராசிகளைக் காக்க வும் செய்த யாகம் இதுவாகும்.

வியாசர், வசிட்டர், வாமர் முதலிய முனி வர்கள் முன்நின்று நடத்தி வைத்த பெருமை யும் இதற்கு உண்டு.

பஞ்சபூதங்களைப் படைக்கும் இறைவன் மகிழ்ந்து பூமியைக் காக்கச் செய்யப்படும் யாகம் இது.

கலியுகம் முடிவில் பூமி அழியும். இந்த அழி வில் இருந்து சகல சீவராசிகளும் காப்பதற் காகச் செய்யப்படும்.

உலகத்தைக் காத்தல் கடவுளான மகா விஷ்ணு சலப்பிரளைய காலத்தில் மக்களைக்



காப்பதற்காகக் குதிரை - அஸ்வத்தின் மீது ஏறி வருவார். அவரை நினைப்பதற்காக குதி ரையை வைத்துச் செய்யப்படுகிறது.

கடலில் பள்ளி கொள்பவன் மகா விஷ்ணு. ஆகவே, நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகா யம் இவைகள் காலச் சக்கரத்தால் அவற்றின் தன்மையை இழந்து நிலைமாறி இயங்கத் தொடங்கி விடும் காலத்தில் மும்மூர்த்திகளும் தங்கள் செயற்பாட்டில இருந்து விலகியிருககும் காலத்தில் பஞ்சபூதங்கள், மும் மூர்த்திகள் இவர்களுள் மேலாக இயங்கிவரும் மகா சக்தி திருவருள் கொண்டு இவர்களைக் காப்பாள்.

தொகுப்பு:
கவி

அந்த சக்தியின் வடிவம் அக்கினி போன்ற சிவந்த வடிவால் அக்கினிக்குச் சமனாக இருப் பாள். அதனால் பூமியிலுள்ள சமித்து வகைகள் தானியங்கள், சகல பழக்கவழக்கம், சகலவித மான நெய்வாசம், சகல விதமான காய்கறி வர்க்கங்கள் முதலிய திரவியங்கள் கொண்டு அக்கினி குண்டத்தில் இவைகளை ஆகுதி யாகக் கொடுத்து அந்த ஆதிசக்தியை மகி ழச்செய்தது. இத்தகைய சக்திவாய்ந்த மிகப் பிரமாண்டமான அஸ்வமேத யாகத்தில் அனை வரும் பங்குகொண்டு அனர்த்தத்தால் உயி ரிழந்தவர்களின் ஆத்மசாந்திப் பிரார்த்தனைக் காகவும் உலக நன்மைக்காகவும் இறை வனைப் பிரார்த்திப்போமாக. ✳

# 6

# பில்லியன் மூலதனம்!

எக் காலத்திலாவது இது வெல்லப்பட முடியுமா?

ஸ்ரீ லங்கா இன்ஷ்வரன்ஸ்

**எமது தலைமைத்துவம்**

**எக் காலத்திலும் வெல்லப்பட முடியாதது!**

*செயற்பாட்டிலுள்ள மொத்த மூலதனம்.

## கடமை நிறைவேற்று கல்விப்பணிப்பாளர்கள் நிரந்தர நியமனம் கோரிப் போர்க்கொடி

காரைதீவு,மார்ச்4

வடக்கு - கிழக்கின் 24 கல்வி வலயங்களிலும் கடந்த ஆறு வருடங்களுக்கு மேலாக சேவையாற்றிவரும் கடமை நிறைவேற்று உதவிக் கல்விப் பணிப்பாளர்கள் (Pergorming ADE) தமக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவேண்டும் என்று போர்க்கொடி தூக்கியுள்ளனர்.

கிழக்கு கல்வி அமைச்சர் பேரியல் அஷ்ரப் வடக்கு கல்வி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கல்வி அமைச்சரும் ஜனாதிபதியுமான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரும் தமது விடயத்தில் உரிய தீர்வை காணவேண்டுமென்று அவர்கள் கோரியுள்ளனர்.

கல்வித்துறையில் தமது அணியைத் தவிர ஏனையோரின் பதவியுயர்வு நியமனங்களைக் கவனித்து வரும் அரசு தம்மையும் கவனிக்க வேண்டும் எனக் கேட்டுள்ளனர்.

கடமை நிறைவேற்று அதிபர்களை நிரந்தரமாக்க உரிய நடவடிக்கை எடுத்துள்ள அரசு தம்மைக் கவனிக்காதது குறித்து விசனம் தெரிவித்துள்ளனர். எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் ஒன்றுகூடி எதிர்கால நடவடிக்கை பற்றி ஆராய விருப்பதாக ஏற்பாட்டாளர் கூறினர்.

(ஐ-ரி)

## கண்டி மனித அபிவிருத்தி நிறுவனம் அம்பாறையில் புனர்வாழ்வுப் பணியில்

காரைதீவு,மார்ச்.4

கண்டி மனித அபிவிருத்தித் தாபனம் அம்பாறைக் கரையோரப் பகுதியில் கல்வி, சமூக, பொருளாதார, மீள்கட்டுமானப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது.

காரைதீவு, மாளிகைக்காடு, பாண்டிருப்பு பகுதிகளில் 9 முன்பள்ளிகளை நிறுவி சகல வசதிகளையும் வழங்கி வருகின்றது. இம் மாணவர்களுக்கான கலை விழா விரைவில் நடைபெறவுள்ளது.

இதேவேளை -

காரைதீவு விபுலானந்த மத்திய கல்லூரி, மாளிகைக்காடு அல்ஹுசையின் வித்தியாலயம் ஆகியவற்றுக்கும் சாய்ந்தமருது மழ்ஹருஸ் ஷம்ஸ் வித்தியாலயத்திற்கும் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு உயர்தர வகுப்பிற்கான 10 வருட கால சகல பாடங்களுக்குமான வினா விடைப் புத்தகங்கள், அப்பியாசக் கொப்பிகள், பேனா, கொம்பாஸ் உள்ளிட்ட பைகள் வழங்கப்பட்டன.

தாபன மாவட்ட இணைப்பாளர் கே.ஸ்ரீகாந்த் மேற்படி பொருள்களை வழங்கினார். இதனைத் தவிர சுனாமி அகதிகளுக்கென காரைதீவில் 40 அறைகளைக் கொண்ட முகாமையும் நிறுவி வருகிறது.

(ஐ-ரி)

## காரைதீவு விக்கினேஸ்வராவுக்கு கல்வி உபகரணங்கள் உதவி

காரைதீவு,மார்ச்4

சுனாமியில் அழிந்த காரைதீவு விக்கினேஸ்வரா வித்தியாலயத்திற்கு கல்வி உபகரணங்களை அமெரிக்க நிறுவனமொன்று வழங்கியுள்ளது.

கல்முனை வலயக்கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.அப்துல் நிசாமின் வழிகாட்டலின் கீழ் மேற்படி உபகரணங்கள் கிடைக்கப் பெற்றுள்ளதாக அதிபர் எஸ்.மோகன் தெரிவித்தார்.

152 மாணவர்க்கும் தமிழ், கணிதம், சுற்றாடல் உள்ளிட்ட சகல பாடங்களுக்குமான பயிற்சிப் புத்தகங்கள் வழங்கப்பட்டன. 35 ஆயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் இவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

செல்வி நற்சா யோகச்சந்தா இவைகளை அதிபர் மோகனிடம் வழங்கிவைத்தார்.

இதேவேளை -

கண்டி திருத்துவக் கல்லூரி அதிபர் ஒரு தொகுதி கல்வி உபகரணங்களை இப்பாடசாலைக்கு வழங்கியுள்ளார்.

50 பிளாஸ்ரிக் சிறிய கதிரைகள், 150 பைகள் (ஒவ்வொன்றும் 1000ரூபா பெறுமதியானது) 150 சித்திரக் கொப்பிகள் உள்ளிட்ட பல உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு நன்றி தெரிவித்து அதிபர் எஸ்.மோகன் நன்றிமடலை அனுப்பி வைத்துள்ளார்.

(ஐ-ரி)

## சுயமாக வேல் தோன்றியதா? கோமாரியில் பக்தர்கள் பரவசம்

காரைதீவு,மார்ச்.4

கிழக்கில் கோமாரிப் பகுதியில் அதிரடிப் படை முகாம் அமைக்க ஏற்பாடகிவரும் இடத்தில் இந்துக் கடவுளான முருகப் பெருமானின் வேல் ஒன்று சுயமாகத் தோன்றியிருப்பதாக மக்கள் நம்புகின்றனர். வேலைப்பார்ப்பதற்காக பக்தர்கள் அங்கு படையெடுக்கத் தொடங்கி உள்ளனர்.

இரண்டரை அடி உயரமான இந்த அழகிய வேலைக் காண்பதற்காக தினந்தோறும் மக்கள் படையெடுத்த வண்ணமுள்ளனர்.

கோமாரி விசேட அதிரடிப்படையினரின் புதிய முகாமிற்கு அப்பால் பாலமொன்றுக் கருகிலுள்ள இடத்தில் இது தோன்றியுள்ளது.

விசேட அதிரடிப்படையினர் முகாம் அமைப்பதற்கு கடந்த காலங்களில் இப்பகுதியை முற்றாகத் துப்புரவாக செப்பனிட்டிருந்தனர். எனவே, இந்தவேல் இப்பகுதியில் திடீரெனத் தோன்றியுள்ளது என அவ்வூர் மக்கள் கூறுகின்றனர்.

ஐம்பொன்னாலான இவ்வேலின் பின்னால் தமிழ் எழுத்துக்கள் பொறிக்கப்பட்டுள்ளன. ஆனால், அவை தெளிவில்லாமலுள்ளது.

தற்போது வேலின் பாதிப்பகுதியைச்சுற்றி சிமெந்து இட்டு மக்கள் வணங்கத் தொடங்கியுள்ளனர். மக்கள் பொங்கி வழிபட்டும் வருகின்றனர்.

(ஐ-ரி)

## பாடசாலை மாணவர்கள் குழாய் நீரின்றி பாதிப்பு

கடந்த சிலதினங்களாக சம்மாந்துறை மத்திய நகரப் பகுதியில் பகல்வேளையில் குழாய்நீர் முற்றாக வருவதில்லையென பரவலாகப் புகார் தெரிவிக்கப்படுகின்றது.

நகரிலுள்ள சம்மாந்துறை அல்-மர்ஜான் மகளிர் கல்லூரியில் பயிலும் 1300 மாணவிகளுக்கு நீர் இல்லாமையினால் பலத்த அசௌகரியம் ஏற்பட்டுள்ளதாக அதிபர் சேலம் தசூல் கூறினார்.

அதேபோன்று தாருஸ்ஸலாம் மகா வித்தியாலயம், அல்-அர்ஷத் வித்தியாலயம் போன்ற பிரபல பாடசாலைகளுக்கும் நீர் வருவதில்லை. அப்பகுதியிலுள்ள மக்களும் பலத்த அசௌகரியத்தை எதிர்நோக்கி வருகின்றனர்.

தற்போது கடும் வெயில் காலம். தாகத்திற்கு தண்ணீர் இல்லாத நிலை அங்கு ஏற்பட்டுள்ளது. பாடசாலை கழிவறைகள் நாற்றமெடுக்கின்றன. இந்நிலை தொடர்ந்தால் மாணவர் வரவு குறையலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-ரி)

## பெற்றோரை இழந்த மாணவருக்கு சுவிஸ் இளைஞர் நிதி உதவி

காரைதீவு,மார்ச்.4

ஆழிப்பேரலையால் பெற்றோரை இழந்த மட்டு.-அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த 113 மாணவர்களுக்கு சுவிஸ், பிரான்ஸ் நாடுகளில் வாழும் இலங்கையர்கள் கல்விக்காக உதவியுள்ளார்கள்.

பாண்டிருப்பைச் சேர்ந்த சுவிஸில் வாழும் இராசலிங்கம் விஜயகுமாரன் என்பவர் கடந்த வாரம் மட்டு. - அம்பாறை பகுதிக்குச் சென்று ஒவ்வொரு மாணவரது கணக்கிலும் 15ஆயிரம் ரூபா வைப்புச் செய்துள்ளார்.

இவர்களுக்கு இலவசக் காப்புறுதியும் செய்து கொடுத்தார் அந்த இளைஞர்.

பாதிக்கப்பட்ட மாணவர்களின் கல்வியும் பாதிக்கப்படக்கூடாது என்பதில் எமது கவனம் செலுத்தப்படுகிறது என விஜயகுமாரன் தெரிவித்தார்.

பிரஸ்தாப மாணவர்களின் உறவினர்கள் விஜயகுமாரனுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்

(ஐ-ரி)

# உயர்தர கலைப் பிரிவு மாணவர்கள் பாடத்தெரிவில் கவனிக்கவேண்டியவை

ஜி.சீ.ஈ. உ/த கலைப்பிரிவில் கல்வி கற்கும் மாணவர்கள் பாடத்தெரிவினை மேற்கொள்ளும்போது முக்கியமாக கவனத்திற் கொள்ளவேண்டிய அம்சங்கள் பல உள்ளன. இன்று யாழ்.மாவட்டத்தில் சில பாடசாலைகளில் உயர்தரக் கலைப்பிரிவில் கல்விகற்கின்ற, 2005 இல் பரீட்சை எடுக்கின்ற மாணவர்கள் பலர் தாம்தெரிவுசெய்து கற்றுக்கொண்டிருக்கின்ற பாடங்களின் தெரிவில் பிழை காணப்பட்டுள்ளதனை உணர்ந்துள்ளனர். அவர்களால தெரிவு செய்யப்பட்ட பாடங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதன்மூலம் பல்கலைகழகத்திற்கோ அல்லது தேசியக் கல்வியியற் கல்லூரிக்கோ, நுண்கலைப்பீடத் தெரிவுக்கோ தன்னும் போகமுடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை அவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. மாணவர்கள் குறிப்பாகக் கலைப் பிரிவில் கல்விகற்கும் இவர்கள், கல்வி அமைச்சின் சுற்றறிக்கையினை கவனத்தில்கொள்ளாது தாம் இலகுவில் சித்தியடைந்தால் போதும் என்ற போக்கில் பாடங்களைத் தெரிவுசெய்து கற்கின்றனர்.

மாணவர்களின் பாடத்தெரிவில் பெற்றோரின் செல்வாக்கு, ஆசிரியர், மாணவர் விருப்பு என்பன இடம்பிடித்துள்ளன. அதேசமயம் தாம் எந்தளவுதூரம் சரியாகப் பாடத்தெரிவை மேற்கொண்டோம் என்பதையோ அன்றி அத்தெரிவின் மூலம் தமக்கு பல்கலைக்கழக, கல்வியியற்கல்லூரி, நுண்கலைப்பீடம் போன்றவற்றின் அனுமதிக்கான தகுதி உண்டா? என்பதனை அவர்கள் உணரத்தவறுகின்றனர். பரீட்சை நெருங்கும் இன்றைய காலகட்டத்தில்தான் இம்மாணவர்கள் தாம் தெரிவுசெய்த பாடங்கள் மூலம் பல்கலைக்கழக அனுமதி பெறும் வாய்ப்பைத் தாம இழக்கப்போகின்றோம் என அறிந்து அதிர்ச்சியும் மனவேதனையும் கொண்டுளளனர். யாழ்.மாவட்டத்தில் சில பாடசாலைகளில் ஏறத்தாள 30 கலைப் பிரிவு மாணவர்கள் இத்தகைய துர்ப்பாக்கிய நிலைக்கு ஆளாகியுள்ளனர் என்பதை அறிகின்றேன். இந்நிலைக்குக் காரணம் யார்? கல்வி அமைச்சின் சுற்றறிக்கைப்படி மாணவர்கள் பாடங்களை சரியான முறையில் தெரிவுசெய்து கற்கின்றார்களா? என கவனிக்காதிருந்த அதிபர்களின் குற்றமா? அன்றி மாணவர்களை வழி நடத்திய ஆசிரியர்களின் தவறா? அல்லது பெற்றோரின் அறியாமையா? யாருடைய தவறு என்பது ஒருபுறம் இருக்க அதனால் பாதிப்படைபவர்கள் மாணவர்களே. அவர்களுடைய கல்விக்காலம் வீணடிக்கப்பட்டுள்ளது. சரியான வழிகாட்டல் ஆலோசனைகள் இன்றி, இம்மாணவர்கள் பாதிப்படைந்துள்ளனர். அவர்களின் பள்ளிக்காலம் வீணடிக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாது, அவர்கள் மனமுறிவுக்கும் விரக்திக்கும் ஆளாகியுள்ளனர். இந்த நிலை எமது பிரதேசத்தில் தொடர்ந்தும் இடம்பெறாது தடுப்பது கல்வி சமூகத்திலுள்ள நம் அனைவரினதும் கடமையாகும்.

எனவே, கலைப்பிரிவு மாணவர்கள் தாம் கற்கவிரும்பும் பாடங்களை தெரிவுசெய்யும்போது சுற்றறிக்கையிலுள்ள பின்வரும் விடயங்களைக் கவனத்திற்கொண்டு பாடங்களைத் தெரிவுசெய்யவேண்டும்.

பல்கலைக்கழக அனுமதிதொடர்பாக ஜி.சீ.ஈ. உ/த பாடசெயல்மானங்கள் கல்வி உயர்கல்வி அமைச்சின் சுற்றறிக்கை இலக்கம் 98/15 வெளியிட்ட திகதி 09.04.1998.

**கலைப்பிரிவிலுள்ள பாடங்கள் பின்வரும் 4 பிரிவுகளுக்குள் அடக்கப்படுகின்றன**

**1. சமூகவிஞ்ஞானங்கள் / பிரயோக சமூக கற்கைகள்**

பொருளாதாரம், புவியியல், வரலாறு, மனைப் பொருளியல், கணக்கீடு, வணிகப்புள்ளி விபரவியல், அரசியல் விஞ்ஞான மூலகங்கள், அளவையியலும் விஞ்ஞான முறையும், உயர் கணிதம், விவசாயவிஞ்ஞானம், கணிதம், இணைந்த கணிதம்.

**2. சமயங்களும் நாகரிகங்களும்**

பௌத்தம் / பௌத்தம் நாகரிகம், கிறிஸ்தவம் / கிரேக்க உரோம நாகரிகம், இந்து சமயம்/ இந்துநாகரிகம், இஸ்லாம் /இஸ்லாமிய நாகரிகம்.

**3. அழகியற் கற்கைகள்**

சித்திரம்,

நடனம் - (அ) சிங்களம்,
(ஆ) பரதம்

சங்கீதம் - (அ) கீழைத்தேய, (ஆ) கர்நாடக, (இ) மேலைத்தேய,

நாடகமும் அரங்கமும் - (அ) சிங்களம் (ஆ) தமிழ் (இ) ஆங்கிலம்

**4. மொழிகள்**

(அ) வெளிநாட்டுமொழிகள்

சீனம், மலாய், பிரெஞ்சு, பார்சிய, ஜேர்மன், ரஷ்யமொழி

(ஆ) சாஸ்திரியமொழிகள்

அரபு, பாளி, கிரேக்கம், சமஸ்கிருதம் இலத்தீன்.

(இ) தேசியமொழிகள்

ஆங்கிலம், சிங்களம், தமிழ்.

**உத்தேச அனுமதி இலக்கம் 4260**

*பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைய பாடத்தெரிவு இடம்பெறவேண்டும்*

I இந்த 4 பிரிவுகளுக்குள் அடங்கும் பாடத்தில் முதலாவது பிரிவில் உள்ளசமூக விஞ்ஞானங்கள் பிரயோக சமூககற்கைகள் என்றபிரிவில் இருந்து குறைந்தது பரீட்சார்த்திகள் ஒரு பாடத்தையாவது எடுத்திருக்க வேண்டும் (அவர்கள் விரும்பினால் 2 அல்லது 3 பாடங்களையும் இப்பிரிவில் இருந்து தெரிவு செய்யலாம்

(அ) சமயங்களும், நாகரிகங்களும் என்ற பிரிவில் கொடுக்கப்பட்டுள்ள ஒருசமயத்தை எடுத்து எந்தபரீட்சார்த்தியும் அதனோடு தொடர்புடைய நாகரிகத்தை எடுத்திருத்தல் ஆகாது.

(ஆ) அழகியற் கற்கைகள் என்ற பிரிவுக்குள கொடுக்கப்பட்ட பாடங்களில் 2 இறகு மேல் எந்தவொரு பரீட்சார்த்தியும் எடுத்திருத்தல் ஆகாது.

(இ) மொழிகள் என்று கொடுக்கப்பட்ட பிரிவில் இரண்டுபாடங்களுக்கு மேல் பரீட்சாத்திகள் எடுத்திருத்தல் ஆகாது.

II மேலே I கொடுக்கப்பட்டுள்ள தேவை பின்வரும் பாடங்களை எடுத்த பரீட்சார்த்திகளுக்குப் பொருந்தாது.

★ தேசியமொழிகள் மூன்று (சிங்களம், தமிழ், ஆங்கிலம்) அல்லது தேசிய சாஸ்திரிய மொழிகளை உள்ளடக்கி குறைந்தது ஒரு தேசியமொழி (சிங்களம், பாளி, சமஸ்கிருதம் அல்லது ஆங்கிலம், கிரேக்கம், இலத்தீன்) ஆயினும் சாஸ்திரியமொழிகள் மூன்றினை பரீட்சார்த்திகள் எடுத்திருத்தலாகாது.

★ இருமொழிகளுடன் மூன்றாவது பாடமாக சமூகவிஞ்ஞானங்கள் பிரயோகசமூக கற்கைகள், சமயங்கள், நாகரிகங்கள் அல்லது அழகியற்கற்கைகள் ஆகியவற்றில் ஏதாவது ஒன்று தெரிவுசெய்யலாம். உதாரணமாக பின்வரும் தெரிவுகளை மாணவர் எடுத்தல் ஆகாது.

1 தமிழ், இந்துநாகரிகம், நடனம்
2. தமிழ், சங்கீதம், இந்துநாகரிகம்
3. தமிழ், இந்துசமயம், இந்துநாகரிகம்
4. தமிழ், நாடகமும் அரங்கியலும், இந்து நாகரிகம்.

**அ.மு.அருணாசலம்**
உறுப்பினர்,
யாழ்.மாவட்ட கல்வி மேம்பாட்டுப் பேரவை

எனவே இந்தவருடம் 2005 ஆம் வருடம் ஜி.சீ.ஈ. உயர்தரம் கலைப்பிரிவு மாணவர் பலர் மேற்கூறப்பட்டது போன்ற பாடங்களைத் தெரிவு செய்துள்ளனர். பரீட்சை எடுக்கப்போகின்ற நேரத்திலேதான் தமது தெரிவுகள் தவறு என்பதை உணர்ந்து வேதனையும் விரக்தியும் அடைந்துள்ளனர். எனவேதான் 2006, 2007 கலைப்பிரிவில் தோற்றவுள்ள மாணவர்களின் கவனத்திற்காக இச்செய்தி வெளியிடப்படுகின்றது.

★

## உடனடி வேலைவாய்ப்பு

- COMPUTER GRAPHIC DESIGNER
- TYPE SETTER
- BINDER TRAINEE

திறமை, அனுபவம் ஆகியவற்றை வெளிக்காட்டும் ஆதாரங்களுடன் எதிர்வரும் 05.03.2005 சனி காலை 9.00-12.00மணி இடையே நேரில் வரவும்.

**சுந்தர் வெளியீடு**

844, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: 021 222 7086.
(கோயில் வீதிச் சந்திக்கு அருகில்)

(42520)(42-14-15-26)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 20 - 12 - 1935



உதிர்வு 07 - 03 - 2002

### அமரர் சின்னத்தம்பி பாலசுந்தரம்

திதி: நவமி

அன்புடன் எமை
வளர்த்த அப்பாவே!
உங்கள் ஆசைகள்
நிறைவேறவில்லை என்பதால்
எம் கனவுதனில் வந்து
எமைக்கலங்க வைப்பதேனோ?
*உங்கள் ஆத்மா சாந்தியடையப்*
*பிரார்த்திக்கின்றோம்.*

சங்கத்தானை,
சாவகச்சேரி. (42580) - குடும்பத்தினர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

அன்னை மடியில் 16 08 1918



இறைவன் அடியில் 02 02 2005

### திருமதி கமலாம்பிகை குமாரசுவாமி

**அம்மாவென் றன்பொழுக யாமழைக்க**
**முடியாமல் மறைந்தீர் அம்மா!**
**எம்மாலே உமதன்பை எழிலுருவை**
**இன்மொழியை மறக்கப்போமோ?**
**பெம்மான்றன் அருளாலே பெற்றெடுத்து**
**அரவணைத்துப் பேணிக் காத்த**
**அம்மாவோ! அம்மாவோ! ஆற்றகில்லோம்.**
**உம்பிரிவை ஆற்றகில்லோம்.**
**உம் அன்பு மகள், மகன்மார்**

02.02.2005 புதன்கிழமை இறைவனடி சேர்ந்த திருமதி கமலாம்பிகை குமாரசுவாமி அவர்களின் இறுதிக்கிரியைகளின்போது உடனிருந்து எமது துயரிற் பங்குகொண்டு ஆறுதலளித்தவர்களுக்கும் தொலைபேசி. கடிதம் மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும், அவர் நோயுற்றிருந்தபோது சிகிச்சையளித்துதவிய யாழ். போதனா வைத்தியசாலை வைத்திய நிபுணர்களுக்கும், ஏனைய வைத்திய சேவையாளர்களுக்கும் மற்றும் பல்லாற்றானும் உதவிய எல்லோருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மேலும் இன்று (04.03.2005) வெள்ளிக்கிழமை பகல் 11.00 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ள ஆத்மசாந்திக்கிரியைகளில் கலந்து அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறும், மதிய போசனத்திற் பங்குபற்றிச் சிறப்பிக்குமாறும் அன்புடன் அழைக்கிறோம்.

பொன்னையா ஒழுங்கை.
ஆனைக்கோட்டை. மகன், மகள், மருமகன்.

(C-41264)

# வண்ணை வைத்தீஸ்வரன் வருடாந்தப் பெருந்திருவிழா

யாழ்ப்பாணம்,மார்ச்4

சரித்திரப் பிரசித்திபெற்ற யாழ்.வண்ணை ஸ்ரீமத் வாலாம்பிகா சமேத ஸ்ரீவைத்தீஸ்வர சுவாமி கோயில் வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் 7ஆம் திகதி பகல் 11மணிக்குக கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 22 நாள்கள் நடைபெறவுள்ள இந்தப் பெருந்திருவிழாவில் மார்ச் 22 ஆம் திகதி பெரிய சப்பரமும் 23ஆம் திகதி பிச்சாடனர் உற்சவமும் 24ஆம் திகதி தேர்த்திருவிழாவும் 25ஆம் திகதி தீர்த்தோற்சவமும் 26 ஆம் திகதி பூங்காவனமும் நடைபெறும்.

இரவு 8 மணிக்குள் உற்சவங்கள் யாவும் நிறைவுபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# கொழும்புத்துறை வீதிகளுக்கு மின் விளக்குகள் அமைப்பு

அரியாலை,மார்ச்4

யாழ்.கரையோரப் பகுதியை அண்டிய பிரதான வீதிகளுக்கு மின் விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

கொழும்புத்துறை வீதி, புங்கன்குளம் வீதி, சுவாமியார் வீதி, ஈச்சமோட்டை வீதி, பாஷையூர் வீதி, விதானையார் வீதி போன்ற வீதிகளுக்கே மின்சார விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன.

அண்மைக்காலமாக இரவுவேளைகளில் இந்த வீதிகள் இருளில் மூழ்கிக் காணப்பட்டதால் மக்கள் பயணம் செய்வதற்குச் சிரமப்பட்டு வந்தனர்.

(ஜ-17)

# அரியாலையில் கூட்டுறவுக் கட்டடம் புனரமைக்கப்படும்

அரியாலை,மார்ச்4

அரியாலை தபாற்கட்டைச் சந்திக்கு அருகில் உள்ள யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்தை மீளப் புனரமைக்கும் முகமாகக் கட்டடம் அமைந்த பகுதியில் தற்போது சங்கத்தின் பெயர்ப் பலகை இடப்பட்டுள்ளது.

இராணுவ நடவடிக்கையால் இந்தக் கட்டடம் முற்றாகத் தரைமட்டமாக்கப்பட்டிருந்தது.

தற்போது இந்தக் கட்டடம் மீளப் புனரமைக்கப்படவுள்ளது. இதற்காகக் கட்டடம் அமைந்திருந்த வளாகத்தில் சங்கத்தின் பெயர்ப் பலகை அமைக்கப்பட்டுள்ளது.

(ஜ-17)

# வாராந்த நிகழ்வு

வடமராட்சி,மார்ச்4

தொண்டைமானாறு செல்வச்சந்நிதியான் ஆச்சிரமத்தின் சைவ கலைபண்பாட்டுப் பேரவை சந்நிதியான் ஆச்சிரமத்தில் வாராந்தம் நடத்திவரும் ஆன்மீகச் சொற்பொழிவுத் தொடரில் இன்று காலை 10 மணியளவில் "மெய்ப்பொருள் நாயனார்" எனும் பொருள் பற்றி யாழ்.கல்வி வலய தமிழ் உதவிக் கல்விப்பணிப்பாளர் எம்.எஸ்.ஸ்ரீதயாளன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(த-13-173)


## காணி விற்பனைக்கு

கோப்பாய்ச் சந்தியிலிருந்து வடக்குப் பக்கமாக 100மீற்றர் தூரத்தில் பருத்தித்துறை வீதியில் கிணறு, பாதிக்கப்பட்ட வீடு, மலசலகூடம் மேலும் இரண்டு கடைக் கட்டடத்திற்கான பத்திரிப்பு, வான்பயிர் உட்பட 6 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு: தம்பிஐயா சுதர்சன், கரந்தன், நீர்வேலி. T.P.: (கொழும்பு) 2718473.

(சி-41149)


## 18 ஆவது வருட நினைவலைகள்




### கிருஷ்ணபிள்ளை கலைச்செல்வன்

திதி: அபரபட்ச நவமி

இறைவனுக்கும் சாத்துப்படி செய்து
பூமாலை புனைந்தேத்தி
நாட்டியத்தில் பாவனை காட்டி
வணிகமாணிப் பட்டம் பெற
மூன்று வருடம் எட்டி எங்கள்
உள்ளங்களைக் கொண்ட
எமது அன்புச் செல்வமே!

கிருஷ்ணபிள்ளை
(வேலுப்பிள்ளை) குடும்பத்தினர்.

23, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (42560)

# கல்முனையில் நவீன நகரத்தை ஐக்கிய அரபு இராச்சியம் அமைக்கும்

கொழும்பு,மார்ச்4

ஆழிப்பேரலை அனர்த்தத்தால் பெரிதும் பாதிக்கப்பட்ட கல்முனை மக்களுக்காகச் சகல வசதிகளையும் கொண்ட நவீன நகரம் ஒன்று அமைக்கப்படவுள்ளது. இப்புதிய நகர நிர்மாணத்திற்கான முழுப் பொறுப்புக்களையும் ஐக்கிய அரபு இராச்சியம் ஏற்றுக்கொண்டுள்ளது.

கடந்த ஆண்டு டிசெம்பர் 26 ஆம் திகதி ஏற்பட்ட ஆழிப்பேரலை அனர்த்தத்தால் அம்பாறை மாவட்டத்தில் பெரிதும் பாதிக்கப்பட்ட நகரம் கல்முனை. சுமார் 19 ஆயிரம் வீடுகள் இங்கு முற்றாக அழிகப்பட்டுள்ளன. அதேயளவான வீடுகள் பாதி சேதமடைந்துள்ளன.

இவ்வாறு பாதிக்கப்பட்ட வீடுகளுக்குப் பதிலாகவே ஐக்கிய அரபு இராச்சியம் கல்முனையில் நவீன நகரத்தை அமைக்க முன் வந்துள்ளது. இச்செய்தியைக் கொழும்பிலிருக்கும் ஐக்கிய அரபு இயக்கத்தின் தூதுவர் எம்.எம்.மொஹமட், ஜனாதிபதி சந்திரிகாவிடம் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற சந்திப்பின்போது அவர் இதனை ஜனாதிபதியிடம் தெரிவித்தார். அமைச்சர் பேரியல் அஷ்ரப்பும் அச்சந்திப்பின்போது உடன் இருந்தார்.

(க-3)

## நீங்காத நினைவில் இருபத்தோராண்டுகள்

மண்ணில் 04 - 06 - 1940



விண்ணில் 04 - 03 - 1984

### திருமதி சூசைப்பிள்ளை அமிர்தம்மா

அன்பின் பெருமைக்கு இனியவளே!
நீ மறைந்து 21 ஆண்டுகள் ஆயிடினும்
மறையாதது உள்ளத்தில் உன் நினைவுகள்!

சு.மரியதிரேஸ் (சின்னராணி) குடும்பத்தினர்

சில்லாலை வடக்கு,
சில்லாலை. (42665)(26-14-15)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 25 . 04 . 1929



மறைவு 24 . 02 . 2003

### திருமதி கந்தையா இரத்தினம்

ஈராண்டு ஆனபோதும்
ஆறவில்லை எம் இதயம்
ஈரவிழிகளுடன் அம்மா! உம் நினைவு
நிலைத்திருக்கும் எம் மனதில்.

"செல்வகம்"
முல்லையடி,
பளை. (42525)

கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## திருமகனாய் வாழ்ந்தவர்க்கு.... உருகும் மன அஞ்சலியும்... ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பும்

உளம் மகிழ 27 - 02 - 1965



மனம் நெகிழ 09 - 09 - 2004

### அமரர் வேலுப்பிள்ளை நமசிவாய சேயோன்

(அப்பன் – ஆங்கில ஆசிரியர்)

"போன வழிதேடிப் புலம்பி அழுகின்றோம்
பொன்மகனே எம்குடும்ப ஒருமகனே எங்குற்றாய்?
ஆன விதிவழியை ஆரறிவார் ஆர்வெல்வார்?
அதுஉன் விதியென்று அகம்துதித்து அஞ்சலித்தோம்!"

எமது குளவிளக்கு வே.நமசிவாய சேயோனின் (அப்பன்) வீட்டுக்கிருத்தியமும், ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் 05-03-2005 சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. இந்த நிகழ்வுகளிலும் தொடரும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். குடும்பத்தினர்

தகவல்:
ந.வேலுப்பிள்ளை,
(தந்தை, இளைப்பாறிய ஆசிரியர்).

முதலாம் மைல் கல்,
கச்சாய் வீதி,
சாவகச்சேரி. (சி.41263)(46-26-14-15)

# சுனாமியால் அழிந்த முல்லை. மாவட்டத்தில் மீண்டும் மாணவர்கள் கல்வியில் ஆர்வம்

சுனாமி அனர்த்தத்தால் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவு மாவட்டத்தில் மாணவர்களின் கல்வி நடவடிக்கை துரித கதியில் மீளக்கட்டியெழுப்பப்படுகின்றது.

கல்வியின் பெருமையை உணர்ந்த மக்களும் வேகமாகத் தம் பிள்ளைகளைத் தயார்ப்படுத்துகின்றார்கள்.

இவை தொடர்பாக முல்லை. மாவட்ட கல்விக் கழகப் பொறுப்பாளர் சி.அறிவன்பன் கூறிய கருத்துக்களை இங்கு தருகின்றோம்.

★ *கேள்வி:* சுனாமி அனர்த்தம் ஏற்பட்ட நிலையில் கல்விசார் செயற்பாடுகள் எவ்வாறு இருக்கிறது என்று கூறமுடியுமா?

✪ *பதில்:* சுனாமி அனர்த்தத்தினால் முல்லைத்தீவுக் கரையோரப் பாடசாலைகளும் பாதிக்கப்பட்டுள்ளன. குறிப்பாக மூன்று பாடசாலைகள் முற்றாக அழிந்துவிட்டன. முல்லைத்தீவு மகா வித்தியாலயம், கள்ளப்பாடு அதகபாடசாலை, முல்லைத்தீவு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் ஆகியனவே அவை.

கரையோரப் பாடசாலைகளான செம்மலை மகா வித்தியாலயம், அளம்பில் றோ.க. வித்தியாலயம், வலைஞர்மடம் அ.த.க. பாடசாலை, முல்லைத்தீவு இ.த.க., மாத்தளன் றோ.க. வித்தியாலயம், அம்பலவன் பொக்கணை மகா வித்தியாலயம், சிலாவத்தை தமிழ் வித்தியாலயம், உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம், வெட்டுவாகல் அ.த.க. பாடசாலை, முள்ளிவாய்க்கால் மேற்கு க.உ.வித்தியாலயம், முள்ளிவாய்க்கால் கிழக்கு அ.த.க. பாடசாலை என்பன பகுதியாகச் சேதமடைந்தன.

முற்றாகச் சேதமடைந்த பாடசாலைகளில் முல்லைத்தீவு றோ.கவும், கள்ளப்பாடு அ.த.க. பாடசலையும் தற்காலிக கொட்டகைகளில் வேறு இடத்தில் இயங்குகிறது. முல்லைத்தீவு மகாவித்தியாலயம் பழைய இடத்தில் இயங்குகிறது.

நாம் எதிர்பார்த்ததைவிட வேகமாகவும் விரைவாகவும் ஏனைய இடங்களைவிட மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர், வலயக் கல்விப் பணிமனையினர், மாணவர் அமைப்பு, யுனிசெவ் போன்ற நிறுவனங்களின் மிகையான உழைப்பினாலும் கல்விச் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டு, மீண்டும் பாடசாலைகள் புத்துயிர் பெற்றுள்ளன.

## அதற்கு ஒத்துழைப்பது அனைவரதும் கடமை; மாணவர் அமைப்புப் பொறுப்பாளர் செவ்வி

இயல்பு வாழ்க்கை நிலைஎன்பது இல்லாத போதும் மாணவர்களைக் கல்வியின்பால் திசை திருப்பி அவர்களை வழிப்படுத்த ஆசிரியர்களுக்கு விசேட உளவளப்பயிற்சி வழங்கப்பட்டு பாடசாலை நேரத்தில் மாணவர்கள் வகுப்பறைக் கற்பித்தல் நடவடிக்கைகளுக்கு உள்வாங்கப்படுகிறார்கள்.

★ *கே:* மாணவர் ஆசிரியர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள் பற்றிக் குறிப்பிட முடியுமா?

✪ *ப:* முற்றாக அழிந்த மூன்று பாடசாலைகளிலும் சுமார் 259 மாணவர்கள் பலியாகி உள்ளார்கள். இவர்களில் பலர் தாய் அல்லது தந்தை அல்லது சகோதர, சகோதரியை முற்றாகவோ அல்லது ஒரு சிலரையோ இழந்துள்ளனர். இந்த இடத்தினைப் பொறுத்தமட்டில் குடும்பத்தில் ஒருவரையேனும் பலிகொடுக்காத குடும்பங்கள் இல்லை என்றே சொல்லலாம்.

அத்துடன், முழுச் சொத்தினையும் இழந்துள்ளனர். குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், சிறுவர்கள் தம்மிடம் உள்ள பாடநூல்கள், கொப்பிகள், கற்றல் உபகரணங்களை முழுமையாக இழந்துள்ளனர்.

ஒரு நிரந்தர ஆசிரியரும் ஓர் ஆங்கில ஒப்பந்த ஆசிரியரும் ஒரு தொண்டர் ஆசிரியரும் இங்கு சுனாமியால் இறந்துள்ளனர். அவற்றினைவிட கல்விசார் செயற்பாட்டில் ஈடுபடும் ஆசிரியர்கள், கல்வி உத்தியோகத்தர்கள் 24 பேர தமது குடும்ப உறுப்பினர்களை இழந்துள்ளனர்.

★ *கே:* பாடசாலைகளை மீள இயக்க நீங்கள் எவ்வாறான நடவடிக்கை எடுத்துள்ளீர்கள்?

✪ *ப:* பாடசாலைகள் மீண்டும் ஆரம்பிக்க அவசரகால செயலணிக்குழுவினர் மூலம் உடனடித் தேவைகள் ஆராயப்பட்டு, தற்காலிகக் கொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணவர்களுக்கான கற்றல், கற்பித்தல் செயற்பாட்டிற்கான கொப்பி, பென்சில், பேனா, புத்தகப்பை என்பன வழங்கப்பட்டு நலன்புரி நிலையத்தில் ஓர் இடத்தில் ஏதிலியாக இருந்த மாணவர்களை பாடசாலைக்குத் தயார் செய்யும் பணியில் ஈடுபட்டோம். அதற்கு உறுதுணையாக யுனிசெவ், தமிழீழ நிர்வாக சேவை, தமிழீழப் போக்குவரத்துக் கழகம், தமிழீழ மாணவர் அமைப்பு, கல்விக்கழகம், வலயக் கல்விப் பரிமான தமிழர் புனர்வாழ்வுக்கழகம் என்பன செயற்பட்டன.

★ *கே:* முற்றாக அழிந்த பாடசாலைகளை மீளக்கட்டியெழுப்புவது தொடர்பான திட்டங்கள் இருக்கின்றனவா?

✪ *ப:* மாணவர்களின் வசதிகள் கருதி இடைத்தங்கல் முகாம்களுக்கு அண்மையில் கள்ளப்பாடு, முலைத்தீவு றோ.க. போன்ற பாடசாலைகள் தற்காலிக கொட்டகையில் ஆரம்பிக்கப்பட்டுவிட்டன.

இவற்றை மீண்டும் எங்கே கட்டுவது என்ற இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லை. குடியிருப்புகள் அமைத்து மக்களை நிரந்தரமாக குடியமர்த்தியபின்தான் அதைப்பற்றித் தீர்மானிக்கலாம்.

★ *கே:* குறிப்பாக உயர்தரப்பரீட்சையில் தோற்றவுள்ள மாணவர்களுக்கு எத்தகைய நடவடிக்கைகள் மேற்கொள்கிறீர்கள்?

✪ *ப:* ஆம். அவர்கள் இழந்த பாடப்புத்தகங்கள், பாடக்குறிப்புகள் என்பவற்றை மீளவும் பெற்றுக்கொடுத்து பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தப்படுகின்றன. எதிர்வரும் ஜூன் மாதத்தில் ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை நடக்கவுள்ளதால் எம்மால் முடிந்த வரை அதற்கு முன் பொது நடவடிக்கைகள் தீவிரமாக முன்னெடுக்கப்படும்.

★ *கே:* உங்கள் வயலத்துக்குட்பட்ட சில பாடசாலைகள் எந்தவிதமான அபிவிருத்திகளும் இன்றி இடம்பெறுகின்றன. அவை தொடர்பாக?

✪ *ப:* முறிப்பு பாடசாலைக்கு அரசினால் காணி வழங்கப்படவில்லை. அது உரிய முறைப்படி வழங்கப்படுமாயின் உடன் துரித நடவடிக்கை எடுக்கப்படும். கருநாட்டுக்கேணி அ.த.க. பாடசாலையும் அதற்கு காணி வழங்கப்படுமாயின் உடன் கட்டியெழுப்பப்படும். அந்தக் கிராமத்தில் புதிய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்.

★ கே: ஆசிரியர் பற்றாக்குறை குறித்து?

✪ ப: கணிசமான அளவே பட்டதாரி பயிலுநர்கள் வந்துள்ளனர். ஆசிரியர்கள் எண்ணிக்கை இப்போதும் போதுமானதாக இல்லை. அத்துடன், துறைசார் பாட ஆசிரியர்களுக்குத் தொடர்நதும் பற்றாக்குறையாகவே உள்ளது. சில பாடங்களுக்கு மேலதிகமாகவும் சிலதுறைகளில் பற்றாக்குறையாகவும் ஆசிரியர்கள் உள்ளனர்.

செவ்விகண்டவர்: ந.விக்கினேஸ்வரன்
புதுக்குடியிருப்புச் செய்தியாளர்.

---

# பொதுக்கட்டமைப்பு - இடைக்கால நிர்வாகம் எதற்கு இணங்கினாலும் அரசைக் கவிழ்ப்போம்!

## அரசுக்கு ஜே.வி.பி. தலைவர் கடும் எச்சரிக்கை

கொழும்பு,மார்ச் 4

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரணப் பணிகள் தொடர்பாக புலிகளுடன் சேர்ந்து செயற்படுவதற்காகப் பொதுக்கட்டமைப்பு ஒன்றை உருவாக்க அல்லது புலிகளுக்குத் தன்னாட்சி அதிகார சபையை வழங்க அரசு முன்வருமானால் அரசை விட்டு வெளியேறி அரசைக் கவிழ்த்துவிடுவோம்.

-இவ்வாறு எச்சரித்திருக்கிறார் அரச கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க

ரோய்டர் செய்திச் சேவைக்குத் தாம் வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கிறார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

புலிகள் பாஸிஸ்ட் அமைப்பினர். அதனால், அவர்கள் ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியையோ அல்லது தன்னாட்சி அதிகாரங்களையோ கையாளும் அருகதை அற்றவர்கள்.

புலிகள் தங்கள் துப்பாக்கிளை தங்களோடு வைத்துக்கொண்டே பிரதான அரசியல் நீரோட்டத்திற்கு வரலாம். ஆனால் ,தாங்கள் பிரதிநிதித்துவப்படுத்தும் தமது மக்கள் என்று கூறும் தமிழர்களை மனந்திறந்து தமது கருத்தை வெளிப்படுத்த அவர்கள் அனுமதிக்க வேண்டும்.

ஆழிப்பேரலை அனர்த்த நிவாரண நிதியைப் பயன்படுத்துவதற்குப் புலிகளோடு இணைந்து ஒரு பொதுக்கட்டமைப்பை உருவாக்க அல்லது இடைக்காலத் தன்னாட்சி முறையை ஏற்படுத்த அரசு முயலுமானால் நாம் அரசை விட்டு வெளியேறிவிடுவோம்.

அந்த முயற்சிகள் வெற்றிபெறா. எனவே, புலிகள் வடக்கு-கிழக்கில் மீண்டும் ஜனநாயகத்தை ஏற்படுத்தவதற்கான பேச்சுக்கு இணங்க வேண்டும்.

பாஸிஸ்ட் இயக்கமான விடுதலைப் புலிகள் அமைப்பு வடக்கு-கிழக்கில் ஒரு கட்சி ஆட்சி முறையை உருவாக்க முயல்கிறது. அதற்கு இடமளிக்கக்கூடாது.

இன அழிப்புக்காக பிரபாகரன் உடனடியாக ஹேக்குக்கு (சர்வதேச நீதிமன்றம் உள்ள இடம்) கொண்டு சென்று நிறுத்தப்படவேண்டும்.

வடக்கில் இப்போது முஸ்லிம்கள் இல்லை. அவர்கள் அங்கிருந்து விரட்டப்பட்டுவிட்டனர்.

புலிகளின் கட்டுப்பாட்டில் வரக்கூடிய இடைக்கால அதிகாரசபையின் கீழ் கிழக்கில் உள்ள சிங்களவர்களுக்கும் மற்றும் முஸ்லிம்களுக்கும் இதே கதி நேராது என்பதற்கு என்ன உத்தரவாதம் உண்டு?

புலிகள் கேட்கும் சுயாட்சி ஏற்பாட்டை அரசமைப்பில் சேர்ப்பது தனிநாடு பிரிவதற்கே வழி செய்யும் - என்றார் அமரசிங்க.

புலிகள் தாங்கள் கோரும் தன்னாட்சி அதிகாரமுறையை வற்புறுத்துவதற்காக மீண்டும் போருக்குப் போவார்கள் எனத் தாம் கருதவில்லை என்றும் அவர் சொன்னார். (எ-க)

## அமைச்சரவை மறுசீரமைப்பு:

## அதிருப்தி காரணமாக அமைச்சர் ரட்ணசிறி தெரிவுக்குழுப் பதவிகளை ராஜினாமா!

கொழும்பு,மார்ச் 4

அமைச்சரவை மறுசீரமைப்புத் தொடர்பான அதிருப்தி காரணமாக பொதுமக்கள் பாதுகாப்பு, சட்டம், ஒழுங்கு அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க நாடாளுமன்றத் தெரிவுக்குழுக்கள் இரண்டின் பதவிகளில் இருந்து திடீரென ராஜினாமாச் செய்துள்ளார் என்று அறியவருகிறது.

உயர் பதவிகள் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் தலைவர் பதவியிலிருந்தும், நாடாளுமன்ற சிறப்புரிமைகள் தொடர்பான தெரிவுக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்துமே அவர் ராஜினாமாச் செய்துள்ளார்.

தனது இராஜினாமாக் கடிதங்களை அவர் சபாநாயகருக்கு அனுப்பிவைத்துள்ளார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தின் அமைச்சரவையை மறுசீரமைப்புச் செய்வது தொடர்பில் எழுந்த பிரச்சினையினையடுத்தே, அமைச்சர் இந்த உறுப்பினர் பதவிகளை ராஜினாமாச் செய்தார் என உள்வீட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முன்னதாக கடந்தவார இறுதியில் ஜாதிக ஹெல உறுமயவின் நாடாளுமன்ற உறுப்பினர் வண.உடுவே தம்மாலோக்க தேரரை சந்தித்திருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, அமைச்சரவை மறுசீரமைப்பின்போது புத்தசாசன அமைச்சுப் பொறுப்பை ஜாதிக ஹெல உறுமயவிற்கு வழங்க ஆவலாக இருக்கின்றார் என தெரிவித்திருந்தாரென்றும் .

இந்த விடயங்கள் அமைச்சர் ரட்ணசிறியின் காதுக்கு எட்டியதையடுத்தே அவர் இவ்வாறு நாடாளுமன்றத் தெரிவுக்குழு பதவிகளில் இருந்து ராஜினாமாச் செய்திருக்கிறார் எனவும்-

ஜனாதிபதிக்கு நெருக்கமான வட்டாரங்கள் நேற்றுத் தெரிவித்தன. (எ-க)

## திருடன் சூட்டதில் இளைஞர் பலி!

காலி,மார்ச்4

திருடன் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் இளைஞர் ஒருவர் பலியாகினார்.

திருடனைப் பிடிக்கத் துரத்திச் சென்ற சமயம் இந்தக் கொடூரம் இடம்பெற்றுள்ளது.

மாத்தறை மாவட்டம் மாவளையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அநுர சந்திரதிலக்க (வயது 28) என்ற இளைஞரே கொல்லப்பட்டார்.

திருடனைப் பிடிக்க விரட்டிச் சென்ற சமயம இந்த இளைஞர் மீது சுட்டுவிட்டு திருடன் தப்பிவிட்டான் என்று பொலீஸார் கூறினர்.

சூடுபட்டவுடன் இளைஞர் அந்த இடத்திலேயே சுருண்டு மரணமானார் - என்று அப்பகுதி வாசிகள் தெரிவித்தனர். (த-க)

## குவேனியைச் சுட்ட சந்தேகநபர் விளக்கமறியலில்

கொழும்பு,மார்ச்4

புலிகளின் மட்டு. - அம்பாறை மாவட்ட மகளிர் பிரிவு அரசியல்துறைப் பொறுப்பாளர் குவேனி உட்படப் பெண் போராளிகள் மீதான தாக்குதல்களை நடத்தியவர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்ட ஜோன்சன் ஜெயக்காந்தனை எதிர்வரும் 16ஆம் திகதி நீதிமன்ற அடையாள அணிவகுப்பில் ஈடுபடுத்துமாறும் அதுவரை அவரை விளக்கமறியலில் வைக்குமாறும் அக்கரைப்பற்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பாதுகாப்புக் காரணங்களுக்காக அக்கரைப்பற்று நீதிமன்றில் அவர் ஆஜர்ப்படுத்தப்படவில்லை. கல்முனை மாவட்ட நீதிபதி கே.தட்சணாமூர்த்தி முன்னிலையில் ஆஜர்ப்படுத்தப்பட்டு, அக்கரைப்பற்று நீதிமன்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவரது பாதுகாப்புத் தொடர்பாகப் பொலீஸார் நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையொன்றை ஏற்றுக்கொண்ட நீதிபதி, அவரை மொனறாகலைச் சிறைச்சாலையில் விளக்கமறியலில் வைக்குமாறு பணித்தார். (த-க)

# இராணுவம், விசேட அதிரடிப்படை தளபதிகள் இஸ்ரேலுக்குப் பயணம்

## ஆயுதக் கொள்வனவு ஏற்பாட்டுக்காக

கொழும்பு,மார்ச்4

ஆயுதக் கொள்வனவு தொடர்பான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்காக இராணுவத் தளபதியும், விசேட அதிரடிப்படைத் தளபதியும் அடங்கிய உயர்மட்டக் குழு ஒன்று இஸ்ரேலுக்குப் பயணமாகியுள்ளது.

இராணுவத் தளபதி லெப்டினட் ஜெனரல் சாந்த கோட்டேகொட தலைமையில் படை உயரதிகாரிகள் பலரைக் கொண்ட இந்தக் குழு நேற்றுப் புதன்கிழமை இஸ்ரேலுக்குப் புறப்பட்டது.

இராணுவத்தின் கிழக்கு மாகாண கட்டளையிடும் அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஹெட்டியாராச்சி, பொலீஸ் விசேட அதிரடிப்படையின் தளபதி பிரதிப் பொலீஸ் மா அதிபர் நிமல் லிவ்கே ஆகியோரும் இந்தக் குழுவில் அடங்குகின்றனர்.

இராணுவம் மற்றும் விசேட பொலீஸ் அதிரடிப்படையினரக்குத் தேவையான ஆயுதங்களைக் கொள்வனவு செய்வதுகுறித்து இஸ்ரேல்பாதுகாப்புத்துறை முக்கியஸ்தர்களுடன் இந்தக் குழு பேச்சுக்களை நடத்தவுள்ளது.

இராணுவத் தளபதி தலைமையிலான உயர்மட்டக் குழு ஒன்று ஆயுதக் கொள்வனவு தொடர்பாக அண்மையில் ஈரான் சென்று வந்தமையும் குறிப்பிடத்தக்கது. (த-க)

# 1,600 தொலைபேசி இணைப்புக்கள் சுனாமியால் கல்முனையில் துண்டிப்பு

கல்முனை,மார்ச்4

ஆழிப்பேரலையால் கல்முனைப் பிராந்தியத்தில் ஆயிரத்து 600 தொலைபேசி இணைப்புக்கள் சேதமாக்கப்பட்டுள்ளதாக "ரெலிக்கொம்" பிராந்திய முகாமையாளர் ரி.குகேந்திரன் தெரிவித்தார்.

இப்பிராந்தியத்தில் அறுகம்பைப்பாலம், உல்லைப்பகுதி ஆகியன கூடுதலாகப் பாதிக்கப்பட்டிருப்பதால் அங்கு கூடுதலான தொலைபேசிகள் சேதமடைந்துள்ளன.


பொத்துவில் பகுதியில் 5கிலோமீற்றர் தூரமான வீதியும், அதனோடிணைந்த தொலைபேசிக் கம்பங்களும் பேரலையில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. ஒரு கம்பம் மீள நடுவதற்கு 5 ஆயிரம் ரூபா செலவாகும்.

கல்முனைப் பிராந்திய தொலைபேசிச் சேவையில் 70வீதம் மீள ஏற்படுத்தப்பட்டுள்ளது. ஆயிரத்து 12 தொலைபேசிகளை மீள இணைத்து வழங்கியுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட பகுதியிலிருந்து தற்போதுள்ள பகுதிக்கு தொலைபேசியை இடமாற்றக் கோரிய 50 பேருக்கு இலவசமாக மாற்றிக் கொடுத்துள்ளோம். மேலும் 50பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இப்பிரதேச சேதங்களை நிவர்த்திக்க 42 லட்சத்து 23ஆயிரம் ரூபா மதிப்பீடு செய்திருப்பதாக முகாமையாளர் ரி.குகேந்திரன் மேலும் கூறினார். (த-84)

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவில்லும்



### அமரர் கணபதி நாகலிங்கம்

கடந்த 20.01.2005 இல் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் கணபதி நாகலிங்கம் அவர்களின் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும் மற்றும் அனுதாபச் செய்தி அனுப்பிவைத்து எம் துன்பத்தில் பங்கு கொண்ட அனைத்து அன்பு உள்ளங்களுக்கும் எமது நன்றியினைத் தெரிவிப்பதோடு, நாளை (05.03.2005) சனிக்கிழமை மு.ப. 11.00 மணியளவில் அன்னாரில் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொண்டு சிறப்பிக்குமாறு உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*நீதிமன்ற வீதி,*
*மல்லாகம்.*

குடும்பத்தினர்.

(சி.41286)(33-11-45-42)

உ

சிவமயம்

*சித்திர வேலவர் துணை*

### வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில் கோப்பாய்.

### மகாசபை பொதுக்கூட்ட முன் அறிவித்தல்

மேற்படி ஆலயத்தின் பொதுக்கூட்டம் 19.02.2005 ஆம் திகதிய பரிபாலன சபைக் கூட்டத் தீர்மானப்படி 25.03.2005 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெற வுள்ளது. அக் கூட்டத்தை சிறப்புற நடத்துவதற்குப் பின்வரும் ஒழுங்குகளை மேற்கொள்ளுமாறு எம்பெருமானின் அடியார்கள் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

1. மகாசபையின் அங்கத்தவர்களாகச் சேர்ந்து கொள்பவர்கள் ரூபா நூற்றி இருபது (120/=) அலுவலகத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்று அதன் மூலம் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளலாம். (பற்றுச்சீட்டைப் பெற்றுக்கொள்ளவும்).
2. ஏற்கனவே அங்கத்துவப் பணம் செலுத்தி அங்கத்துவம் பெற்றவர்கள், இவ்வாண்டு அதைப் புதுப்பிப்பதற்காக ரூபா அறுபது (60/=) அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்று அங்கத்துவத்தைப் புதுப்பித்துக்கொள்ளவும்.
3. ஆயுட் கால அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்பவர்கள் ரூபா ஆயிரம் (1000/=) செலுத்திப் பற்றுச்சீட்டுப் பெற்று விண்ணப்பப்படிவமூலம் அங்கத்துவத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.
4. அங்கத்துவத்தை விண்ணப்பப்படிவ மூலம் இதுவரை மேற்கொள்ளாத புதிய உபயகாரர்கள் விண்ணப்பப் படிவத்தை அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி வழங்கி அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக்கொள்ளவும்.
5. மேற்படி அங்கத்துவம் தொடர்பான தங்கள் கடமைகளை 19.03.2005 இற்கு முன் மேற்கொண்டு மகாசபை அங்கத்துவத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.
6. பிரேரணைகள் சமர்ப்பிக்க விரும்பும் அங்கத்தவர்கள் தங்கள் பிரேரணைகளைச் செயலாளரிடம் 19.03.2005 இற்கு முன் சமர்ப்பிக்கவும்.

சோ.விஸ்வலிங்கம்,
செயலாளர்.

(42686)(42-11-45)

# அவசர கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மார்ச்4

உடற்கல்வி ஆசிரியர் நியமனம் கிடைத்த மற்றும் கிடைக்காத உடற்கல்வி டிப்ளோமா தாரிகளுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 11 மணிக்கு நீராவியடி பிறைறமன் கல்வி நிலையத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்டோரைத் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளது. (த)

# வீதி விபத்தில் இருவர் காயம்

தென்மராட்சி,மார்ச்4

வீதியில் படுத்திருந்த நாயின் மீது மோட்டார் சைக்கிள் சில்லு ஏறியதில் அதில் பயணம் செய்த இருவர் தூக்கி வீசப்பட்டுக் காயமடைந்தனர்.

கடந்த முதலாம் திகதி இரவு 9.30 மணியளவில் மீசாலையில் இச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் காயமடைந்த மீசாலை மேற்கைச் சேர்ந்த சுப்பிரமணியம் கிருபாகரன் (வயது 25) கந்தசாமி எழில்வேந்தன் (வயது 23) ஆகியோர் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை பாடசாலைக்குச் சென்ற 7 வயது மாணவி மோட்டார் சைக்கிளால் மோதுண்டு காயமடைந்த சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்றது.

சங்கத்தானையைச் சேர்ந்த ஏ.மதுஷா (வயது 7) என்பவரே காயமடைந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

(த-119)

# தென்மராட்சி வலயத்துக்கு மூன்று ஆசிரியர்கள்

தென்மராட்சி,மார்ச்4

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி அமைச்சினால் வழங்கப்பட்டிருக்கும் ஆசிரியர் நியமனத் தில் மூவர் தென்மராட்சி வலயப் பாடசாலை களுக்கு நியமிக்கப்பட்டுள்ளனர்.

உள்ளூர் நன்னீர்த் தேக்க உயிர்வளத் தொழில்நுட்பப் பாடத்துக்கு இவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

செல்வி மாலதி பரமலிங்கம் (கரணவாய் தெற்கு - வரணி மகா வித்தியாலயாலயத்திற்கும்), செல்வி பிரபாநந்தினி கிருஷ்ணபிள்ளை (குடத்தனை மேற்கு - சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கும்), செல்வி பிரபலோஜினி கந் தையா (கொடிகாமம் - நாவற்குழி மகா வித்தியாலயத்திற்கும்) நியமிக்கப்பட்டுள்ளனர்.

(த-117)

# பிரதி மாகாண சுகாதாரப் பணிப்பாளராக கேதீஸ்வரன்

யாழ்ப்பாணம்,மார்ச்4

சுகாதார சேவைகள் பிரதி மாகாணப் பணிப்பாளராக டாக்டர் எஸ்.கேதீஸ்வரன் தனது பதவியைப் பொறுப்பேற்றுள்ளார்.

அதற்கு முன்னர் இவர் வவுனியா சுகாதார சேவைகள் மாகாணப் பணிப்பாளராகக் கடமையாற்றினார். (த-173)

# செப்ரெம்பர் மாத நிவாரணம் அடுத்த வாரம் கிடைக்கும்

தென்மராட்சி,மார்ச்4

தென்மராட்சிப் பிரதேசத்தில் இடம்பெயர்ந்தோர் நிவாரணம் பெறும் குடும்பங்களுக்கான செப்ரெம்பர் மாதத்திற்குரிய உலர் உணவுப் பொருள்கள் அடுத்த வாரம் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரி, கைதடி, கொடிகாமம் ஆகிய பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் கடைகளின் உலர் உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளலாமென பிரதேச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(த-117)

# ஞானச்சுடர் சஞ்சிகையின் வாசகர் போட்டியில் வெற்றியீட்டியோர்

வடமராட்சி,மார்ச்4

சந்நிதியான் ஆச்சிரம மாதாந்த வெளியீடான ஞானச்சுடர் ஆத்மீக சஞ்சிகை நடத்திய வாசகர்களுக்கான போட்டியில், முதலாம் இடத்தை உரும்பிராய் தேவாலயப்பகுதியைச் சேர்ந்த செல்வி ச.கலையரசியும், இரண்டாம் இடத்தைக் கட்டைவேலியைச் சேர்ந்த திருமதி தேவராணி நவரத்தினமும், மூன்றாம் இடத்தை மீசாலை மேற்கைச் சேர்ந்த நவரத்தினம் கேதீசகுமரனும் பெற்றுக்கொண்டனர்.

(த-173)


## விற்பனைக்கு

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுடிதார் துணி வகைகள், கவுஸ் கோட துணி வகைகள், சுடிதார், புடைவை வகைகள், முகூர்த்த புடைவைகள், லேடீஸ ஸ்கேட் அன் பிளவுஸ், கவுண்கள் பரிசுப்பொருள்கள், பான்சிப் பொருள்கள் என்பன விற்பனைக்குண்டு.

**பபு கொமினிக்கேஷன்,**
30, வளாக வீதி, திருநெல்வேலி.



## விற்பனையாளர் தேவை

யாழ்.நகரில் இயங்கும் பிரபல வர்த்தக நிலையத்திற்கு விற்பனையாளர் தேவை. (Delivery Boy)

தகைமை: கல்விப் பொதுத் தராதர சாதாரண தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

முடிவு திகதி: 10.03.2005 கீழ்காணும் முகவரிக்கு உங்களது விண்ணப்பங்களை அனுப்பவும்.

**விளம்பர இல. 2514**

மே/பா.உதயன்.

(42691)(42-14)


## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி




மண்ணில் 21.08.1981 | விண்ணில் 15.02.2001

*தி: 04.03.2005*

கண்ணீரில் நான்காண்டுகள்
கரைந்து மறைந்தனவே!
மகனே! நீயில்லை எம்மோடு
உறவாட எண்ணாத
நாளில்லை இரங்காத
போதில்லை உன்னுடைய
நினைவுகளே எமை இங்கு
ஆளுதையா!

கைதடி தெற்கு, கைதடி.

குடும்பத்தினர்.


உ

## ஸ்ரீ துர்க்கா ஜோதிட நிலையம்



இந்தியாவிலிருந்து வந்துள்ள

**ராமகிருஸ்ண சாஸ்திரிகள்**



கல்வி, வியாபாரம், திருமணப் பொருத்தம், கணவன்-மனைவி உறவு, அரசியல் பிரச்சினைகள், வீடு - கடை வாஸ்து, வெளிநாட்டுப் பிரயாணம், பிள்ளைகள் பாக்கியம், ஆயுள் ரேகை, எண்கணிதம், கைரேகைமூலம் அறிந்துகொள்ள நீங்கள் தொடர்பு கொள்ள வேண்டியது

**அறை எண் 5, பிள்ளையார் இன்,**
31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
**Room No.5, Pillaiyar Inn**
31, Manipay Road, Jaffna
Phone: 021 222 2839
Mobile: 0776 923623

(42020)



புதிய பிரிவுகள் ஆரம்பம்

## External Degree

2005, 2006 பிரிவுகளுக்கானது
(Jaffna University)

G.A.Q. | 1st in Com. | B.A. | B.Com.

ஆரம்பம்: 05.03.2005 9.30 a.m.

## aat (SriLanka)

Stage II & StageIII
Medium: Tamil & English Exam: August
ஆரம்பம்: 05.03.2005 11.30 a.m. (Saturday)

Further Details
**Director**
***JAFFNA COLLEGE UNDERGRADUATE DEPT.***
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.

(C/41287)(42-11-45)


## இளங்கலைஞர் மன்றம்

## வருடாந்த இசைவிழா 2005

**இரண்டாம் நாள் வெள்ளிக்கிழமை (04.03.2005)**
**(லண்டன், 'ஆவர்த்தனா' இசைக் கல்லூரி ஆதரவில்)**

மாலை 4.30-5.30 *மங்கள இசை:* P.S.பாலமுருகன் குழுவினர்
5.30-5.45 *குழுப்பாடல்:* இளங்கலைஞர் மன்ற மாணவர்கள்
5.45-6.15 *வயலின் இசை:* மதுரா வரதராஜசர்மா
கிருஸ்ணஐயர் அசோகன்
துரைசிங்கம் ரமேஸ்
6.15-6.45 *புல்லாங்குழல்:* M.தர்மிலா
6.45-7.15 *மங்களவிளக்கேற்றல்:* கலாபூஷணம் V.பரமசாமி
தலைவர்: செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகன்.
7.15-7.45 *பாட்டு:* தாரணி ரஞ்சன்
7.45-8.15 *பாட்டு:* N.பரந்தாமன்
8.15-9.15 *வயலின் இசை:* R.இராதாகிருஸ்ணன்
S. கோபிதாஸ்
9.15-10.15 பொன்னாலை சந்திரபரத கலாலயம் வழங்கும்
*நாட்டியாஞ்சலி*
*நட்டுவாங்கம்* திருமதி ஸ்ரீதேவி கண்ணதாசன்

கலைஞர்கள், ரசிகர்கள் ஆர்வலர்கள்
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**இளங்கலைஞர் மன்றம்.**

(சி.41288)(42-11-45)

# அழிவுப் பாதையிலிருந்து விலகிச் செல்வோம்

## தவக்காலச் சிந்தனை

"கிறிஸ்துவுக்குள் நாம் நுழையும்போதுதான் நாம் மீட்பு அடைவோம்" நாம் வாழும் இவ்வுலம் ஆன்மீக வாழ்க்கைக்குப் பல முட்டுக்கட்டைகளை, தடைகளைப் போட்டுக்கொண்டே இருக்கின்றது. ஆன்மீக வாழ்க்கையின் உச்ச துணை ஆதாரங்களான அன்பு, பகிர்தல், விட்டுக் கொடுத்தல் போன்ற பண்புகளை ஆழக்குழி தோண்டிப் புதைத்துவிட்டு பொறாமை, எரிச்சல், கொலைசெய்தல் போன்ற பண்பற்ற செயல்களை விதைத்துக்கொண்டிருக்கின்றது. எனவே, இவ்வழிவுப் பாதையிலிருந்து விலகி மனம்மாறி கிறிஸ்துவுக்குள் நாம் ஆழ ஊடுருவிச் சென்றால்தான் உண்மையான ஆன்மீக மீட்புக் கிடைக்கும் என்பதை உணர்ந்து இத்தவக்காலத்தைப் பயன்படுத்துவோம்.

இருபத்திநான்காம் நாள்

குணா.

# வலி.தெற்கில் இவ்வருடம் 4 மயானங்கள் புனரமைப்பு

வலி.தெற்கு,மார்ச்4

வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் கீழ் இவ்வருடம் இப்பகுதியிலுள்ள நான்கு மயானங்கள் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

கந்தரோடை சங்கம்புலவு இந்துமயானம் (தம்மளை மயானம்), ஈவினை இந்துமயானம், புன்னாலைக்கட்டுவன் மத்தாளோடை இந்து மயானம், ஏழாலை உசத்தியோடை இந்துமயானம் ஆகிய மயானங்களே புனரமைப்புச் செய்யப்படவுள்ளன.

இவற்றுள் மூன்று மயானங்கள் உலக உணவுத் திட்டத்தின் கீழ் புனரமைப்புச் செய்யப்படவுள்ளன எனவும் இதன் முதற்கட்ட வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் பிரதேச சபைச் செயலாளர் திருமதி சரஸ்வதி சொக்கலிங்கம் தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே இந்த நான்கு மயானங்களுக்கும் எட்டு லட்சம் ரூபா செலவில் எரிகொட்டகைகள் அமைக்கப்பட்டுள்ளன எனவும் - சனசமூக நிலையங்களின் ஆதரவுடன் மேற்கொள்ளப்படவுள்ள இவ்வருட புனரமைப்புப் பணிகளுக்குப் பொதுமக்களும் பூரண ஆதரவு தர வேண்டுமெனவும் - திருமதி ச.சொக்கலிங்கம் கேட்டுள்ளார்.

(த-152)

# நெடுந்தீவுக் கோட்டப் போட்டிகளில் றோ.க. மகளிர் கல்லூரி முதலிடம்

நெடுந்தீவு,மார்ச் 4

நெடுந்தீவு கோட்டமட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்ற குழுநிலைப் போட்டிகளில் நெடுந்தீவு றோ.க.மகளிர் கல்லூரி பெண்கள் அணிகள் சம்பியனாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளன.

15, 17, 19 ஆகிய வயதுப் பிரிவினிடையே நெடுந்தீவு மகாவித்தியாலய மைதானத்தில் நடத்தப்பட்ட கரபந்தாட்டப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் முதலிடத்தைப் பெற்று வெற்றியீட்டியுள்ளது.

அத்துடன், றோ.க.மகளிர் கல்லூரி மைதானத்தில் நடத்தப்பட்ட மேற்படி வயதுப் பிரிவினருக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகளில் மூன்று பிரிவுகளிலும் இக்கல்லூரியே முதலிடத்தைப் பெற்று வெற்றியீட்டியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(த-112)

# சைவப்புலவர் கந்தசாமிக்கு பணிநலம் பாராட்டும் விழா

## நாளைமறுதினம் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில்

யாழ்ப்பாணம்,மார்ச்4

சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமியின் பணிநலம் பாராட்டுவிழா நாளைமறுதினம் காலை 9. மணிக்கு நீராவியடி நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவபரிபாலனசபை உபதலைவர் இ.குகதாசன் தலைமையில் நிகழ்வு நடைபெறும். நல்லை திருஞானசம்பந்தர் அதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீசோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் அருளுரை வழங்குவார்.

சர்வதேச இந்துமத குருபீடாதிபதி சிவஸ்ரீ ச.மகேஸ்வரக் குருக்கள், கரணவாய் ஆதீன சைவகுருமார் அர்ச்சகர் சபைப் போஷகர் சிவஸ்ரீ கை.திருஞானசம்பந்தக் குருக்கள் ஆகியோரின் ஆசியுரைகள் இடம்பெறும். தொடர்ந்தது விழா நாயகரான சைவப்புலவர் வல்லிபுரம் கந்தசாமியைக் கௌரவிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

பாராட்டுரைகளைச் சபையின் செயலாளர் த.சண்முகலிங்கம், முன்னாள் தலைவர் இ.மகேந்திரன், சமயப் பிரசாரகர் ஆசிரியமணி அ.பஞ்சாட்சரம், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் முன்னாள் அதிபர் திருமதி மங்கையர்க்கரசி திருச்சிற்றம்பலம், இந்துசமய விவகார திணைகள உதவிப்பணிப்பாளர் சிவ.மகாலிங்கம், ஓய்வுபெற்ற ஆசிரியை செல்வி புஷ்பா செல்வநாயகம், யாழ். இந்துக் கல்லூரி அதிபர் அ.சிறிக்குமாரன் ஆகியோரும் -

சமூகஜோதி கா.கணேசதாசன், முன்னாள் உதவிக்கல்விப் பணிப்பாளர் அ.தற்பரானந்தன், யாழ். பல்கலைக்கழக இந்துநாகரிகத் துறை தலைவர் திருமதி நாச்சியார் செல்வநாயகம், ஆசிரியர் இரா.செல்வவடிவேல், சைவப்புலவர், ஏ.அனுசாந்தன், தேவார இசைமணி கலாபூஷணம் இராசையா திருஞானசம்பந்தன், பெரியபுலம் மகா வித்தியாலய அதிபர் க.கனகசிங்கம் ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

இறுதியில் விழா நாயகரின் உரையும் இடம்பெறும்.

(த-203)

# பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள்

சுனாமியால் பாதிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கப் பருத்தித்துறைக் கிளையினர் பாடசாலை உபகரணங்களை அன்பளிப்பாக வழங்கவுள்ளனர்.

சுனாமியால் பாதிப்படைந்த பாடசாலைகளான வல்வெட்டித்துறை சிவகுரு வித்தியாசாலை, கலட்டி றோமன் கத்தோலிக்க பாடசாலை, முனை சென்.தோமஸ் பாடசாலை ஆகிய பாடசாலைகளிலுள்ள 500 மாணவர்களுக்குச் சீருடைகள், புத்தகப்பை, அப்பியாசக் கொப்பிகள், பென்சில், பேனா போன்ற பொருள்கள் வழங்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

சேந்தாங்குளம், பருத்தித்துறை, ஆதிகோவிலடி போன்ற முகாம்களிலுள்ளவர்களுக்கு உலர் உணவுகளும் வழங்கப்படவுள்ளதாகப் பருத்தித்துறைச் செஞ்சிலுவைச் சங்கக் கிளைத் தலைவர் எஸ்.தவராசா தெரிவித்தார்.(த-70)

# வடக்கு – கிழக்கு ஆளுநர் 9 ஆம் திகதி யாழ். விஜயம்

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் டிரோன் பெர்னாண்டோ எதிர்வரும் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளார்.

சுனாமி பேரனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் அரச உதவியுடன் இடம்பெற்று வரும் அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான நிலைமைகளைப் பார்வையிட இவர் வருகை தருகின்றார்.

கொழும்பிலிருந்து விமானம் மூலம் பலாலி விமான நிலையத்துக்கு வருகை தரும் ஆளுநர், அங்கிருந்து யாழ். செயலகத்துக்கு வருவார். அரச அதிபர் கே.கணேஷைச் செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடுவார்.

அத்துடன், அச்சுவேலி மத்திய கல்லூரிக்கும் ஆவரங்கால் நடராஜா ராமலிங்க வித்தியாலயத்திற்கும் விஜயஞ்செய்து அங்கு நடைபெறும் பாடசாலைகளுக்கான புதிய கட்டட வேலைகளைப் பார்வையிடுவர்.

இதேவேளை -

கடந்த ஜனவரி மாதம் 10 ஆம் திகதி சுனாமி பாதித்த பகுதிகளைப் பார்வையிட வருகைதந்த ஆளுநருக்கு எதிராக மக்கள் எதிர்ப்புணர்வுகள் வெளியிடப்பட்டிருந்தது தெரிந்ததே.

(த-13)

# பொது நிகழ்வுகளில்...




சாவகச்சேரி நகர் மற்றும் சாவகச்சேரி வடக்கு சமுர்த்திச் சங்கங்களால் சமுர்த்தியாளர்களுக்கு மரக்கன்றுகள் வழங்கும் நிகழ்வில் சாவகச்சேரி நகர் கிராம அலுவலர் வை.இராசரத்தினம் உரையாற்றுவதைக் காணலாம். (படம்: தென்டமராட்சிச் செய்தியாளர்)




இருதய நோயினால் பாதிக்கப்பட்ட மட்டுவில் வடக்கைச் சேர்ந்த பேரம்பலராசா கலைமகள் என்ற யுவதியின் மருத்துவ செலவுக்கென சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் சேகரிக்கப்பட்ட நிதியினைக் கழகத் தலைவர் லயன் செ.கா.நவரத்தினம் கையளிப்பதையும், அருகில் மாவட்ட இணைப்பாளர் லயன் டாக்டர் சு.சி.அருளானந்தம், வலயத் தலைவர் லயன் கா.சற்குணதேவன், லயன் வ.வ.மகாலிங்கம் ஆகியோர் நிற்பதையும் காணலாம். (படம்: தென்மராட்சிச் செய்தியாளர்)



மாதகல், சகாயபுரம் முன்பள்ளித் திறப்புவிழாவின்போது மாதகல் கல்வி அபிவிருத்திச் சங்கத் தலைவர் வி.சிற்றம்பலம் மாணவர்களுக்குரிய உபகரணங்களை முன்பள்ளித் தலைவர் எஸ்.மகேந்திரம், உபதலைவர் அ.நேசன் ஆகியோரிடம் கையளிப்பதைப் படத்தில் காணலாம்.
(படம்: மாதகல் செய்தியாளர்)



யாழ்நகர் கிழக்குச் சமுர்த்தி வங்கிக்கான புதிய கட்டடத் திறப்பு விழா அண்மையில் யாழ். பிரதேச வளாகத்தில் நடைபெற்றது.

புதிய வங்கிப் பணிமனையை யாழ். மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி நாடாவை வெட்டித் திறந்துவைப்பதையும் அருகில் யாழ். பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் நிற்பதையும் படத்தில் காணலாம்.
(படம்: கொழும்புத்துறைச் செய்தியாளர்)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாண கல்வி வலய முன்னாள் கல்விப்பணிப்பாளர்

**உயர்திரு.நாகலிங்கம் சுந்தரலிங்கம்**

அவர்களின் மறைவினை அறிந்து மிகவும் வருந்துகின்றோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்*
*யா/யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை*

(42700)

## கண்ணீர் அஞ்சலி

யாழ்.கல்வி வலய முன்னாள் கல்விப் பணிப்பாளர்

**உயர்திரு. நாகலிங்கம் சுந்தரலிங்கம்**

அவர்களின் மறைவினை அறிந்து மிகவும் வருந்துகிறோம். அன்னாரின் குடும்பத்தினருக்கு அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகிறோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்,
கல்விசாரா ஊழியர்கள்.
**யா/யாழ்.இந்துமகளிர் கல்லூரி.**

(42690)(26)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு 04 - 02 - 1925



உதிர்வு 02 - 02 - 2005

**திருமதி தம்பிஐயா அன்னலட்சுமி**

02-02-2005 புதன்கிழமை இறையடி சேர்ந்த திருமதி தம்பிஐயா அன்னலட்சுமி அவர்கள் எமைப் பிரிந்து 31நாள்கள் மறைந்தாலும் அன்னாரின் நினைவானது எம் எல்லோரினது மனதைவிட்டு அகலவில்லை.

இன்று (04-03-2005) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொண்டு எமை மகிழ்வித்து, அன்னாரின் ஆன்ம ஈடேற்றத்திற்குப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டிக்கொள்கிறோம்.

துர்க்காபுரம்.
மல்லாகம்.(42699)(26)

**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

**மண்ணில்** 20 - 01 - 1938



**விண்ணில்** 04 - 03 - 2004

**அமரர் மரியான் வின்சன் (நசரேத்)**

"உயிர்த்தெழச் செய்பவனும் வாழ்வு தருபவனும் நானே என்னிடம் நம்பிக்கை கொள்பவர் இறப்பினும் வாழ்வார்..."

*இல.09, கலைமகள் வீதி,*
*அரியாலை.*
(42694)
**குடும்பத்தினர்.**

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு 19 - 01 - 1929



உதிர்வு 02 - 02 - 2005

**பாலு சின்னத்தங்கம்**

அன்போடும் பண்போடும் எம்மை எல்லாம் வாழ வைத்த எங்கள் அன்புத் தாயின் 31ஆம் நாள் வீட்டுக்கிருத்தியக்கிரியைகள் இன்று (04-03-2005) வெள்ளிக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் வருகைதந்து இந்த ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்துவரும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

23.5ஆம் ஒழுங்கை,
அரசடி வீதி. நல்லூர். (42693)(26)
**-பிள்ளைகள்.**

# ஆட்சிக்கு வந்ததுமே கட்சியை மறக்கிறார்கள்; சு.கவினர் குறித்து ஜனாதிபதி சந்திரிகா விசனம்

கொழும்பு,மார்ச்4

சுதந்திரக்கட்சியினர் அரசமைக்கும் போதெல்லாம் கட்சியை மறந்து விடுகிறார்கள். அரச செயற்பாடுகளில் மட்டும் மூழ்கி விடுகிறார்கள்.

- இவ்வாறு விசனத்துடன் கூறுகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் குழுக்கூட்டம் மஹரகமவில் இடம்பெற்றது. அக்கூட்டத்தில் பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

சுதந்திரக்கட்சியினர் தேர்தலின் பின்னர் தூங்க ஆரம்பித்துவிடுகின்றனர். அரசுக் காரியங்களில் மூழ்கிவிடுகின்றனர்.

சுதந்திரக்கட்சி காத்திரமானது. மிகவும் பலமானது. எனினும் அது தற்போது தூங்கிக் கொண்டிருக்கிறது. பலசாலி தூங்கிக்கொண்டிருக்கின்றான். இவ்வாறு தூங்குபவனின் தொப்பியை முதலில் சிலர் கழற்றுகின்றனர். பின்னர் சேட்டைக் கழற்றுகின்றனர். தொடர்ந்தது காற்சட்டையைக் கழற்றுகின்றனர். இவ்வாறு கழற்றிச் செல்கின்றனர். பின்னர் கால்கள், கைகள் என்பவற்றைக் கழற்றிய பின் சுதந்திரக் கட்சியைச் சாகடிக்கலாம் என சில நபர்கள் எண்ணுகின்றனர். அவர்கள் அவ்வாறு எண்ணினால் அது எமது தவறே. நாம் பலமாகச் செயற்பட வேண்டும்.

ஒரு பகுதியினர் தூங்குகின்றனர். இன்னொரு பகுதியினர் களவெடுக்கின்றனர். எமது இளைஞர்களுக்கு எதிராக அவர்கள் (ஐ.தே.கவும், ஜே.வி.பியும்) ஆயுதங்களைப் பயன்படுத்தினர்.

ஆயுதம் தாங்கிய ஜே.வி.பியினரைக் கொல்கிறார்கள் எனக் கூறிக்கொண்டு சுதந்திரக் கட்சியினரையும் ஐ.தே.கவினர் கொன்றொழித்தனர்.

ஆனால் நாம் பொறுமை காத்தோம். இதனால் அழிக்கமுடியாத சக்தியாக இன்று உயர்ந்து நிற்கின்றோம். ஆயுதமேந்திய ஜே.வி.பியினர் இன்று இவற்றைக் கைவிட்ட ஜனநாயக வழிக்கு வந்து எமது அமைச்சரவையில் இடம்பெற்றுள்ளனர். இது எமது கட்சிக்குக் கிடைத்த வெற்றி.

- இவ்வாறு கூறினார் ஜனாதிபதி. (த-க)

## விறகு கொத்தியவர் கட்டை தாக்கிக் காயம்!

யாழ்ப்பாணம்,மார்ச்4

வீட்டில் விறகு கொத்திக்கொண்டிருந்த வேளை மரக்கட்டை ஒன்று சடுதியாக் தெறித்து கொத்திக்கொண்டிருந்தவரின் முகத்தில் தாக்கியதில் அவர் காயமடைந்தர்.

கல்வியங்காடு செங்குந்த வீதியைச் சேர்ந்த சுந்தரம் வரப்பிரசாதம்(வயது 26) என்பவரே இவ்வாறு காயமடைந்தார்.

அவருடைய வாய்ப்பகுதியில் கட்டை தாக்கியதில் பற்கள் சேதமடைந்தன. உதட்டுப் பகுதியிலும் வெடிப்பு ஏற்பட்டது. அவர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றார். (த)

## கடும் வெப்பத்தினால் கால்நடைகள் பாதிப்பு

தற்போது நிலவும் கடுமையான வெப்பம் காரணமாக கால்நடைகள் பெருமளவில் பாதிப்புறுவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

கோப்பாய், நீர்வேலி, உரும்பிராய் பகுதிகளில் கோழிகள், ஆடுகள், மாடுகள் என்பன பெருமளவில் பாதிப்படைந்து நோய்வாய்ப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

கோழிகள் தூக்கநோயினாலும் ஆடு, மாடுகள் தொண்டை வீக்கம், வலிப்பு ஆகிய நோய்களிற்கு உட்பட்டு இறந்போகின்றன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த வருடங்களோடு ஒப்பிடுகையில் இவ்வருடம் வெப்பத்தினால் கால்நடைகள் பெருமளவில் பாதிப்புற்றுள்ளதாக விவசாயி ஒருவர் கருத்துத் தெரிவித்தார். (த-72)

### படிவம்

வடக்கு - கிழக்கு மாகாண பொதுச்சேவையின் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பிப்பதற்கான படிவங்கள் உண்டு.
முடிவுதிகதி: 28.03.2005
**BHARATHY PATHIPPAKAM**
430, K.K.S. Road,
Jaffna. (சீ-41291)

### படிவம்

தேசிய பாடசாலைகளில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிப்பதற்கான போட்டிப் பரீட்சை விண்ணப்பப் படிவம் உண்டு.
முடிவுதிகதி: 18.03.2005
**BHARATHY PATHIPPAKAM**
430, K.K.S. Road,
Jaffna. (சீ-41290)

### ஆங்கிலம் - பிரத்தியேக வகுப்பு

**O/L, A/L பொது**
English Medium Social Studies
திணைக்களப் பயிற்சிபெற்ற ஆசிரியர்

தொடர்பு:

1) யாழ்ப்பாணம்
**சு.மகேஸ்வரன்**
680, கே.கே.எஸ். வீதி,
பூநாறி மரத்தடி, யாழ்ப்பாணம்.
(கமலா சிகிச்சை நிலையம் முன்பாக)

2) **கணேஸ் வாணிவிலாஸ்,**
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

3) சாவகச்சேரி:-
**ஸ்ரீ கோணேஸ்வரா புத்தக நிலையம்**
கண்டி வீதி, சாவகச்சேரி.

(42968)

## கண்ணீர்க் காணிக்கை

மலர்வு 1941 – 10 – 29



உதிர்வு 2005 – 03 – 02

**செல்வி அமிர்தரட்ணதேவி இராஜரட்ணம்** (சின்னா ரீச்சர்)

*(ஓய்வுபெற்ற ஆசிரியை, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி)*

அன்பின் திருவுருவாய்
பாசத்தின் பிறப்பிடமாய் - நம்
சிந்தையிலே கலந்திட்ட
சின்னா ரீச்சர்
சிந்திய சிரிப்பும்
காட்டிய செல்நெறியும் - நம்
சொந்தங்களை விட்டு
என்றும் பிரிந்திடாது.

யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள்.

(42702 (24)


## 2.03.2005 ஆம் திகதிய உத்தியோகபூர்வ முடிவுகள்

செல்லுபடியாகும் டிக்கட்
தொடர் இல. 200115059 இலிருந்து
200134075 வரை

சீட்டிழுப்பு இல. 1586

**03 34 63 70** சுப்பர் எண் **04**

சுப்பர் ஜக்பொட் பரிசு ரூபா.**81,53,600/-** வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 4 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | - | 81,53,600/- | - |
| 4 வெற்றி எண்கள் மட்டும் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| 3 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 29 | 5,000/- | 1,45,000/- |
| 3 வெற்றி எண்கள் மட்டும் | 515 | 1,000/- | 5,15,000/- |
| 2 வெற்றி எண்களுடன் சுப்பர் இல. | 1,649 | 500/- | 8,24,500/- |
| 2 வெற்றி எண்கள் மட்டும் | 24,830 | 40/- | 9,93,200/- |
| 1 வெற்றி எண்ணுடன் சுப்பர் இல. | 23,579 | 20/- | 4,71,580/- |
| 1 வெற்றி எண் மட்டும் | 3,52,612 | 10/- | 35,26,120/- |

வெல்லப்பட்ட மொத்த தொகை ரூ.89,75,400/-

இந்த சனிக்கிழமை சுப்பர் ஜக்பொட் ரூபா: **90,95,700/-**

தொடர் இல. 300109046 க்கு மேற்பட்ட பச்சை நிற டிக்கட்டுடைய 2005 மார்ச் 05 ஆம் திகதி சனிக்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்

200115063-8-65
200129356-9-08
200116475-1-74
200128151-6-94
200117366-9-37

அபிவிருத்தி லொத்தர் சபை

இல. 33,சென்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.


## மரண அறிவித்தல்

**திருமதி லோகேஸ்வரி விஜயரத்தினம்**



இல.66, பழம் வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் கண்டி - கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லோகேஸ்வரி நேற்று (03-03-2005) வியாழன் அதிகாலை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம்பிள்ளை (கல்லூரி அதிபர்) - பவளநாயகியின் பாசமிகு புத்திரியும், விஜயரத்தினம் (சமாதான நீதிவான், முன்னாள் இயக்குநர் - யாழ். ஐக்கிய வியாபாரச் சங்கம்) அவர்களின் அன்பு மனைவியும் டாக்டர் விஜயகுமாரன் (பேராதனைப் பல்கலைக்கழக பல்வைத்திய சாலையின் சிறுவர் பல் வைத்தியப் பிரிவின் தலைவர்), சிவகுமாரி (பட்டதாரி ஆசிரியை), விஜயகுமாரி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும் DR.புஸ்பராஜன், சுந்தரலிங்கம் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் லோகேஸ்வரன் (ஆஸ்திரேலியா), கேதீஸ்வரன், சிவநாதன், குகநாதன் ஆகியோரின் சகோதரியும் மிதுஜன், குங்குமி, சங்கவி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை(5-3-2005) சனிக்கிழமை பி.ப 3மணிக்கு **A.F RAYMOND Funeral Hall, 115, D.S Senanayake, Mawatha, Borella** இல் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக மாலை 4மணிக்கு கனத்தை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், அயலவர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளும்படி வேண்டுகின்றோம்.

60-1/2 Ruthamawatha,
Colombo - 6
T.P: 011-2361664
077- 6926879 (42697)

தகவல்:
கு.விஜயரத்தினம்

# பாண் விலையை 2 ரூபாவால் அதிகரிக்க பேக்கரி உரிமையாளர் சங்கம் முடிவு

கொழும்பு, மார்ச்4

பிறிமா நிறுவனம் கோதுமை மாவின் விலையை அதிகரித்திருப்பதை யடுத்து, பாணின் விலையை இம்மாத இறுதியில் அதிகரிப்பதற்கு அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் தீர்மானித்துள்ளது.

கோதுமை மா விலை அதிகரிக்கப்பட்டதையடுத்து, கோதுமை மாவை அடிப்படையாகக்கொண்ட பொருள்களின் விலைகளை அதிகரிப்பது குறித்து ஆராய்வதற்காக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர் சங்கம் நேற்றுமுன்தினம் கொழும்பில் கூட்டமொன்றை நடத்தியது.

தற்போதைய சூழ்நிலையில் பின்தங்கிய பிரதேசங்கள் பலவற்றில் பிறிமா, மா விற்பனை யிலிருப்பதால் அவ்வாறான பிரதேசங்களில் மாத்திரம் பாண் விலையை இரண்டு ரூபாவால் அதிகரிப்பதற்கு இந்தக் கூட்டத்தில் தீர்மானிக் கப்பட்டுள்ளது என மேற்படி சங்கத்தின் தலை வர் பராக்கிரம தஸநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் பாண் விலையை மூன்று ரூபா வால் அதிகரிக்கவேண்டிய தேவை எழுந்துள்ள போதிலும் இது தொடர்பான இறுதித் தீர்மா னம் இந்தமாத இறுதியிலேயே எடுக்கப்படு மென்று அவர் மேலும் தெரிவித்தார்.

(எ-க)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம், மார்ச்4

வைத்தீஸ்வராக் கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் கல்லூரி மைதா னத்தில் அதிபர் நா.வன்னியசிங்கம் தலை மையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு விசேட விருந்தினர்க ளாக அயல் பாடசாலை அதிபர்களான ந.சிவ ராஜா, எஸ்.நடராஜலிங்கம், ஜீ.செபஸ்ரியாம் பிள்ளை, சி.மாணிக்கராசா, எம்.எஸ்.ஏ.எம். முபாறக் ஆகியோர் கலந்துகொள்ளவுள் ளனர்.

(எ-190)

A/L 2007, '06
Com. Mr. பசில்
ACC. Mr. தவா
Eco. Mr. கஜீதரன்
Eng. Mr.ஜெயக்குமார்
(42678)
'06 CHE - ORGANIC
ஆரம்பம்: Mon. 5.30, Fri. 4.30 p.m.
Mr. A.Y.மகிழ்னன
SHAMROCK

## துயர் பகிர்வு



எமது முன்னாள் கல்விப்பணிப்பாளர்

### திரு. நா. சுந்தரலிங்கம்

நேற்று (03.03.2005) வியாழக்கிழமை கொழும்பில் இயற்கை எய்தினார் என்பதனைக் கவலையுடன் அறிவிப்பதோடு, அவரது இழப்பினால் வருந்தும் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்குகொண்டு ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கின்றோம்.

*கல்வி வலயம்,*
*யாழ்ப்பாணம.* (ச-41299)

கல்விப்பணிப்பாளரும், பணியாளரும்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்
### இரத்தினம் செந்தில்வர்ணன்
(கோப்பாய் மத்தி, கோப்பாய்)

பிறப்பு 20~09~ 1981 இறப்பு 14~02~2004

இனிமைகள் சேர்ந்த இளையவனே!
மினிவானில் உந்தன் கதை போச்சோ!
கனிவான இதயம்
கடமை தவறாத நல்லுள்ளம்
கடமைக்கு என்று நீ வரும் நேரம்
கைதடிக்கும் நுணாவிலுக்கும் இடையில் - விபத்தில்
எமைப் பிரிந்து போனாயோ?
கண்மணியே!
மறைந்தது உந்தன் உடல் தான்
மறையாது எம் நெஞ்சில் உன் நினைவு
உன் ஆத்மசாந்திக்காய்
அந்த ஆண்டவன் பாதங்களை
அழுதழுது - நாம் அஞ்சலிக்கின்றோம்.

(42722)

சாரதா வீதி,
சங்கத்தானை, சாவகச்சேரி.

தனபாலசிங்கம்
மரத்தொழிலகம்,
உரிமையாளரும் ஊழியர்களும்.

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



தோற்றம் 10 ~ 01 ~ 1941
மறைவு 21 ~ 02 ~ 2002

### அமரர் முத்தன் கந்தையா

திதி: 04.03.2005

ஆண்டு மூன்று ஆனதோ உங்களைப் பிரிந்து
உங்கள் நிழலில் வாழ்ந்த வாழ்வு போல் இனிவருமா?
எமை வாழ வைத்த தெய்வமே! உங்கள்
திருமுகத்தை இனி எப்போது காண்போம்?

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*நிரந்தர முகவரி:*
*வீமன்காமம்,*
*தெல்லிப்பழை.*

(42711)

*வதிவிட முகவரி:*
*பலாலி வீதி,*
*திருநெல்வேலி.*

## G.A.Q. (பேராதனை)

* மேற்குறிப்பிட்ட பட்டப் பாடநெறிக்கு பேராதனைப் பல் கலைக்கழகத்தினால் விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.
* இதற்குரிய பல்கலைக்கழகப் பதிவுகள் 20.03.2005 வரை நீடிக்கப்பட்டுள்ளமையினால் பதிவுகளை மேற்கொள்ள விரும்புபவர்கள் இத்திகதி வரை எமது நிறுவனத்தில் பதிவுசெய்து கொள்ளலாம்.
* இதற்குரிய விரிவுரைகள் ஆரம்பமாகிவிட்டன.
* யாழ்.பல்கலைக்கழகத்திற்குரிய புதிய பிரிவு G.A.Q., 1st in Com.விரிவுரைகளும் ஆரம்பமாகியுள்ளன.

விவரங்களுக்கு:
S.அருள்நங்கை
புதிய உயர் கல்லூரி
ஆரியகுளம் சந்தி, யாழ்.
(42706)

D.C.C.A.
மக்கள் வங்கி அருகில்
ஸ்ரான்லி றோட், யாழ்நகர்.
யாழ்.,பேராதனை வெளிவாரிப் பட்டப்படிப்புகள்
G.A.Q., 1st in Com., B.A. Final
வினா-விடை மீட்டல்
விரிவுரைகள் நடைபெறுகின்றன.
வைப்புப்பணம் எவையும்
அறவிடப்படமாட்டாது.
சனி, ஞாயிறு 8. a.m. (ச-41241)

NEW STOCK
அவுஸ்திரேலியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட IBM, DELL கணனிகள் உத்தரவாதத்துடன் மிகக்குறைந்த விலையில்

PENTIUM II, 266MHz, 64MB 4.2 GB
PENTIUM II, 300MHz, 64MB 6.4 GB
PENTIUM II, 350MHz, 64MB 6.4 GB
PENTIUM II, 400MHz, 64MB 6.4 GB
PENTIUM III, 500MHz,128MB 10 GB
WITH 15", 17" DELL, SIEMENS MONITORS
ரூபா 22000.00 லிருந்து

மேலதிக விபரங்களிற்கு
STP Your Partner in IT Solution
Kantharmadam, Jaffna. T.P:0212222674
web:www.stpjaf.com

லக்ஷ்மி சினிமா இணுவில்
சரத்குமார், சார்ஷி, வடிவேல் நடித்த
மானஸ்தன் (ரீல்ஸ்)
தினசரி: 11.00, 3.00, 7.00 (பு.நே.) (42667)

மனோகரா யாழ்ப்பாணம்
சக்ரன்
காட்சி நேரம்: 10.30, 2.30, 6.30, 9.30
அடுத்த வெளியீடு: 11.03.2005 முதல் சூர்யா, ஜோதிகா (மாறுபட்ட வேடங்களில்) நடிப்பில்
மாயாவி

நிரஞ்சனாஸ் சங்கானை
ஜெயம்ரவி, அஸ்வினி, நதியா, பிரகாஷ்ராஜ் நடித்த
M.குமரன் Son Of மகாலட்சுமி
காட்சி நேரம்: 11.00. 2.45. 6.00. (பு.நே.)

சாமி
விக்ரம் - திரிஷா - விவேக் - விஜயகுமார் நடிக்க
எமது அடுத்த வெளியீடு தாவடி மைந்தன் ஜெய்ஆகாஷ் நடிக்கும்
குருதேவா
தினசரி: 10.30. 2.30. 6.30.9.30. (பு.நே.)

நாகம்ஸ் சினிமா சுன்னாகம்



விஜய், திரிஷா, சாயாசிங் மற்றும் பலர் நடித்த
திருப்பாச்சி (ரீல்ஸ்)
தினசரி 11.00. 3.00. 7.00. (பு.நே.) (C/39654)

ராஜா யாழ்ப்பாணம்
சிம்பு (இருவேடம்), ஜோதிகா, கவுண்டமணி நடித்த
மன்மதன் (ரீல்ஸ்)
காட்சிநேரம்:10.30,2.30,6.30,9.30 (பு.நே.)

## மனமார்ந்த நன்றிகள்

எமது பேரன்புக்கும் மதிப்பிற்குமுரிய தந்தையார் உயர்திரு வே.க.ஏரம்பு அவர்கள் 23.02.2005 புதன்கிழமை இறை பதமடைந்த செய்திகேட்டு உடன் விரைந்துவந்து எமக்கு ஆறுதலும் ஒத்தாசையும் நல்கிய போராளிகள், பொறுப்பாளர் களுக்கும் மற்றும் இறுதிக்கிரியைகளில் பங்குபற்றி தம் உணர்வு களை வெளிப்படுத்திய உற்றார், உறவினர், நண்பர்கள், மத குருமார் மற்றும் நேரிலும் தொலைபேசி மூலமும் எமக்கு ஆறு தலையும் அனுதாபங்களையும் தெரிவித்த வெளிநாட்டில் வாழும் உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றி களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:
மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(சி-41298)

## நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மண்ணின் அழைப்பு 18 ~ 02 ~ 1927



விண்ணவர் அரவணைப்பு 31 ~ 01 ~ 2005

### அமரர் செல்லையா குணபாலசிங்கம்
(ஓய்வுபெற்ற அதிபர்)

ஆசிரியர் உலகிற்கு எடுத்துக்காட்டாய் மாணவர்க்கு வழிகாட்டியாய் புகழ் ஒளிர வாழ்ந்து, இறையடி எய்திய எம் குடும்ப விளக்கின் நினைவு கள் என்றும் எல்லோர் மனதிலும் நிலைத்து நிற்கும். அந்நினைவுகள் அன்னாரின் உயிர் அமைதியடைய வழிவகுக்கும்.

அன்னாரின் அந்தியேட்டி இன்று (04.03.2005) வெள்ளிக்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்வில் கலந்து இறைவனை இறஞ்சுவதுடன், மதிய உணவிலும் கலந்து சிறப் பிக்கும் வண்ணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தலையாளி, யாழ்ப்பாணம். (42712) -குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பொன்னுத்துரை புஸ்பராணி



இல.39, சோமசுந்தரம் அவனியூவை பிறப்பிடமாகவும் வசிப்பிட மாகவும் கொண்ட பொன்னுத்துரை புஸ்பராணி அவர்கள் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா பொன் னுத்துரையின் அன்பு மனைவியும் புஸ்பமலர், புஸ்பவதி, திலகவதி, கமலவதி, பஞ்சாட்சரம் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் மகாலிங்கம் (பிரதேச சபை, நீர்வேலி), மைக்கல் (கட்டடத் திணைக்களம்), காலஞ்சென்ற Dr.சண் முகநாதன் அருள்நேசதுரை (கொழும்பு துறை முகம்), ஜெயமாலினி (லண்டன்), ஆகியோரின் அன்பு மாமியாரும் உசாநந்தினி, மேனகா, செந்தூரன், மயூரன், மைதிலி (லண்டன்), ஜெய ரீகன் (லண்டன்), மிருணா, சர்மி, புவி, அகிலன், குவேன், ஜனார்த் தனன், ரஜீவன், யுவர்ணா (லண்டன்) ஆகியோரின் பேர்த்தியும் பிரியந் தனியினது பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.03.2005) சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக் கிரியைக்காக பூதவுடல் செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல் லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*39, சோமசுந்தரம் அவனியூ,*
*யாழ்ப்பாணம்.*
*T.P. No.: 222 3858.* (42718)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி சவரிமுத்து மரியப்பிள்ளை

இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சவரிமுத்து மரியப்பிள்ளை 28.02.2005 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் அவுறாம்பிள்ளை சவரிமுத்து அவர்களின் அன்பு மனைவியும் திருச்செல்வம், காலஞ்சென்ற யோசவ் (ராசா), மனுவேற் பிள்ளை (ரட்ணம்), றீற்றா, யோச் ஆகியோரின் அன்புத் தாயாரும் காமினி, சிட்னிறொசான், மெலானி ஆகியோரின் அன்பு மாமியாரும் சர்மிளா, யோசவ், ஸ்ரெவினி, கெலானி, பிறாங், யொய்ஸ், யஸ்மின் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு நாளை (05.03.2005) சனிக்கிழமை பிற்பகல் 4 மணியளவில் புனித அன்னாள் ஆலயத்தில் ஆன்ம இளைப் பாற்றித் திருப்பலியைத் தொடர்ந்து புனித அன்னாள் சேமக்காலை யில் நல்லடக்கம் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இளவாலை.* (42704)

தகவல்:
அ.சவரிமுத்து (கணவர்).


'சுனாமி 81' அபிலாஷ் தனது பெற்றோருடன் நியூயோர்க்கில் உள்ள ஜோன் கென்னடி விமான நிலையத்தைச் சென்றடைந்தபோது...

# இடைக்காலத் தன்னாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

படுத்த அரசு விரும்புகிறது.

உடனடியாகப் பேச்சை ஆரம்பிக்க அரசு இருக்கும் விருப்பத்தை தனக்கு எப்போதும் வெளிப்படுத்தியே வருகிறது. நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் மோதல் தவிர்ப்பைக் கடைப்பிடிப்பதற்கும். இனப்பிரச்சினைக்கு நிலையான தீர்வை எட்டுவதற்கான சூழலை மேம்படுத்துவதற்கும் ஒருவழியாக அமையும் என்ற வகையில் நேரடிப் பேச்சின் முக்கியத்துவம் வலியுறுத்தப்பட்டு வருகிறது.

பேச்சுக்கான ஒரு நிகழ்ச்சி நிரலை ஏற்படுத்தும் முயற்சியில் - இனப்பிரச்சினைக்குப் பேச்சின் அடிப்படையிலான நிரந்தரத் தீர்வை எட்டுதல் எனும் சூழ்நிலையில் - இடைக்கால அதிகாரசபையைத் தோற்றுவிப்பதற்கு அரசு இணங்கியிருந்தது.

பிணக்கு நிலையில் இருந்த ஜனநாயகச் சூழ்நிலைக்கு மாறுகின்ற இடைப்பட்ட ஒரு காலப்பகுதியில் இடைக்கால அதிகாரசபை பயனுடையதாக அமையும் என்ற அடிப்படையிலேயே அரசு அதற்கு உடன்பட்டிருந்தது.

இது விடுதலைப் புலிகள் கோரும் இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபை அடிப்படையில் மாத்திரம் பேச்சை ஆரம்பிப்பதில் இருந்து முற்றாக வேறுபட்டது. இடைக்கால அதிகார சபை அடிப்படையில் பேச்சைக் கொண்டுசெல்வது. நேரடிப்பேச்சை ஆரம்பிக்காது தடுத்து விடக்கூடியது - என்று உள்ளது. (எ-க)

## தலைவரின் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கல்வி மேம்பாட்டுப் பேரவைத் தலைவர் வண. பிரான்ஸிஸ் ஜோசப் அடிகள் மங்கள விளக்கேற்றி வைத்ததுடன் நிகழ்வு ஆரம்பமானது.

தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே. இளங்குமரன் தேசியக் கொடி ஏற்றிவைத்தார். அதன்பின் பொன்னம்மான் நினைவு மண்டபத்தின் நினைவுக்கல்லை முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அரியரத்தினம் திறந்துவைத்தார்.

அதன் பின் கட்டடத்தை உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் பத்திரங்களில் செ.தமிழேந்தியும் அதிபரும் கையொப்பம் இட்டனர். கட்டடத்தின் திறப்புகளை உத்தியோகபூர்வமாக தமிழேந்தி அதிபரிடம் கையளித்தார்.

அதைத் தொடர்ந்து கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.குருகுலராசா, முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் எஸ்.அரியரத்தினம், ஜி.ரி.இசற் அமைப்பின் கிளிநொச்சி மாவட்டப் பணிப்பாளர் க.கந்தசாமி ஆகியோர் நாடாவை வெட்டி வகுப்பறைகளைத் திறந்து வைத்தனர். அதன்பின் கூட்டம் நடைபெற்றது.

அங்கு சிறப்புரையாற்றிய செ.தமிழேந்தி, ஆரம்பத்தில் விடுதலை போராட்டத்தில் முக்கிய பங்குவகித்த பொன்னம்மானின் பெயர் இக்கட்டடத்துக்கு சூட்டப்பட்டுள்ளது. அவரது நினைவு நாளான பெப்ரவரி 14ஆம் திகதி கட்டடத்தைத் திறந்துவைக்க முயற்சித்தோம். ஆனால், இன்று திறக்க முடிந்தது. - என்றார் அவர். (3)

You Are Not Late
D.C.M.
பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.
A/L 2006 சனி, ஞாயிறு வகுப்புக்கள்
பகுதி 02 ஆரம்பமாகின்றது

| பாடம் | ஆசிரியர் | அலகு - பகுதி 02 | நேரம் |
|---|---|---|---|
| கணக்கீடு | திரு.பாலவாசன் | கம்பனி | 11.00 |
| வணிகக்கல்வி | திரு. உமாகாந் | முயற்சியாண்மை | 12.00 |
| பொருளியல் | திரு.வரதராஜன் | பணம், வங்கி, விலை மட்டம் | 12.30 |

குறிப்பு:
1.இப் பிரிவிற்கு தனிப்பாட அனுமதியுண்டு.
உமூன்று பாடங்களுக்கும் பகுதி 2 உம் மேலதிக வகுப்புக்களில் கற்பிக்கப்படும்.
ஆரம்பம் :05-03-05 சனி காலை 11.00 மணிக்கு.
D.C.M. இயக்குநர் S. சிறீதரன்

## தமிழர் - சிங்களவர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஞர் ஒருவர் தாக்கப்பட அவர் பொதுச் சந்தைக்குள் தப்பி ஓடியுள்ளார். இதைக் கண்ணுற்ற சிங்கள இளைஞர்கள் குழு, பஸ் நிலையத்தில் நின்ற தமிழ் இளைஞர்களைத் துரத்திச்சென்றுள்ளது.

கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு முன்பாக வீதியை வழிமறித்திருந்த தமிழ் இளைஞர் குழுவினரை, அங்கு வந்த திருகோணமலை பொலீஸ் அத்தியட்சகர் குழு பாதையைத் திறக்குமாறு கோரியது. ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் சட்டவிரோத செயலில் ஈடுபடவேண்டாம் என்றும் அக்குழு அறிவுறுத்தியது.

சிங்களக் குடியேற்றத்தை கைவிடும்வரை தாங்கள் விலகப்போவதில்லை என்ற தமிழ் இளைஞர் குழுவினரின் பிடிவாதத்தைக் கண்ட பொலீஸ் அத்தியட்சகர் சிங்கள குடியேற்றத்தைத் தடுத்து நிறுத்துவார் என வாக்களித்தார். அப்படி இருந்தும் பதற்றம் தணிந்ததாக இல்லை.

இதேவேளை. திருகோணமலை தபால் நிலையச் சந்திப் பகுதியில் வைத்து இரு தமிழ் இளைஞர்கள் கடற்படையினரால் நையப்புடைக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. டொக்யார்ட் வீதியில் தடைகளை ஏற்படுத்தியிருந்த பொதுமக்கள் மீது இராணுவத்தினர் தாக்குதல் நடத்தினர் என்றும் தெரிவிக்கப்பட்டது. ஆனால், இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் தயா ரத்னாயக்க அதனை மறுத்தார். "இராணுவத்தினர் பொதுமக்கள் எவரையும் தாக்கவில்லை" - என்றார் அவர்.

திருகோணமலை நகரத்திலுள்ள பத்தாம் நம்பர், என்.சி. வீதி, காளி கோயில் வீதி, கடற்காட்சி வீதி, கடல்முனை வீதி, உவர் மலை ஆகிய பகுதிகளில் அவ்வப்பகுதி இளைஞர்கள் கட்டைகள், ரயர்கள் போட்டு வீதியை மறித்துப் போக்குவரத்தைத் தடுத்தனர்.

திருகோணமலை, ஏகாம்பரம் வீதியில் 300 இற்கும் மேற்பட்ட மக்கள் நேற்று வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

எனினும், நேற்று மாலை பதற்றம் ஓரளவு தணிந்து நிலைமை வழமைக்குத் திரும்பியது. பொலீஸார் பொதுமக்களுடன் பேசியதன் பின்னர் பிற்பகல் 3 மணியளவில் வீதித் தடைகள் அகற்றப்பட்டன. பஸ் தரிப்பிடத்தில் நின்ற பஸ்கள் பொலீஸ் பாதுகாப்புடன் அங்கிருந்து வெளியேறிச் சென்றன. வாகனப் போக்குவரத்தும் சிறியளவில் ஆரம்பமானது.

இந்தச் சம்பவம் குறித்துப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கும் முறைப்பாடு செய்யப்பட்டது. விடுதலைப் புலிகள் இதுகுறித்துத் தம்மிடம் முறையிட்டனர் என்று கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் தெரிவித்தார். தாங்கள் சம்பவ இடத்திற்குச் சென்று நேரில் பார்வையிட்டார்கள் என்றும் நிலைமை குறித்து உடனடியாக அரசுக்கு அறிவித்தல் கொடுத்துள்ளார்கள் என்றும் - அவர் ஊடகங்களுக்குக் கூறினார்.

இவற்றையடுத்து. நேற்றுப் பின்னதாக நகரில் இயல்புநிலை ஓரளவுக்குத் திரும்பியது. "காலையில் சற்றுப் பதற்றம் காணப்பட்ட போதும் நிலைமை தற்போது அமைதியாக இருக்கின்றது" - என்று திருமலைப் பிரதேச செயலர் சுந்தரம் அருமைநாயகம் நேற்றுமாலை தெரிவித்தார்.

பதற்றத்தைத் தணிப்பதற்கு மேற்கொள்ளப்பட்ட துரித நடவடிக்கைகளை அடுத்து நிலைமை சுமுகமாகியுள்ளது என்றும் அவர் கூறினார்.

இதேவேளை, இன்று முதல் திருகோணமலையில் பூரண கதவடைப்பு நடத்தக் கோரி மாவட்டத் தமிழ் மக்கள் பேரவை அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. (எ-க-13-151)

## 'கொரியா'வில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்தக் குடியேற்ற நடவடிக்கைகளுக்காக கொண்டுவரப்பட்டிருந்த பொருள்கள் அனைத்தும் உடனடியாகப் பறிமுதல் செய்து நீதிமன்றத்தின் பாதுகாப்பில் வைக்குமாறும் அவர் உத்தரவிட்டார்.

இதனையடுத்து. நேற்று மாலை, அப்பொருள்களை அகற்றும் நடவடிக்கையைப் பொலீஸார் ஆரம்பித்தனர். லொறிகளில் ஏற்றப்பட்ட பொருள்கள் நீதிமன்ற வளாகத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

எனினும், அங்கு இத்தேவைக்காக இறக்கப்பட்ட முழுப் பொருள்களும் மீள எடுத்துச் செல்லப்படுமா? அங்கு சிங்களக் குடியேற்றங்களை அமைக்கும் சதித்திட்டம் கைவிடப்பட்டுவிட்டதா? என்பவை உடன் தெரியவரவில்லை. (எ-க)

## இனி ஒருபோதும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதிக்கும் - ஜே.வி.பியினருக்கும் இடையிலான மோதல்கள் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டன. ஒருவர் மீது ஒருவர் பந்தை மாறிமாறி எறிவதுபோல் ஜே.வி.பியினரும் ஜனாதிபதியும் மாறிமாறி குற்றப்பத்திரிகைகளை வாசித்துக் கொண்டிருக்கின்றனர். ஆனால், அரசிலிருந்து ஜே.வி.பியினர் வெளியேறமாட்டார்கள். அம்மாவும் அவர்களை விரட்டியடிக்க மாட்டார். இதுதான் உண்மையான நிலை.

அரசைக் கொண்டுசெல்லமுடியாமல் ஜனாதிபதி தத்தளிக்கின்றார். ஜே.வி.பியினர் அரசைக் கவிழ்த்து விட்டாலும் நாம் அரசுக்கு ஆதரவு வழங்கமாட்டோம் அதற்கான அவசியமும் இல்லை.

ஜனாதிபதியையோ அவரது வாக்குறுதிகளையோ நம்பமுடியாது. அவருடன் சேர்ந்து நாமும் மக்களை ஏமாற்ற விரும்பவில்லை. அரசுடன் ஒட்டிக்கொள்ளவோ அல்லது அதற்கு முட்டுக்கொடுக்கவோ மாட்டோம் - என்றார் திஸ்ஸ அத்தநாயக்க. (எ-க-13)

## திருமலையில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களை அள்ளிச்சென்றதையும் கடற்கரையோரத்தில் நூறு மீற்றர் தூரம்வரை வீடுகள் அமைக்க அனுமதிப்பதில்லை என அரசு முடிவெடுத்ததையும் அடுத்து இப்பகுதியில் சட்டவிரோத சிங்களக் குடியேற்றத்தொல்லை நீங்கியது எனத் தமிழர்கள் கருதினர்.

ஆனால், ஜே.வி.பி.துணையுடனும், ஆதரவுடனும் இப்பகுதியில் சட்டவிரோத சிங்களக் குடியேற்றத்துக்கு நேற்றுமுன்தினம் இரவோடு இரவாகத் திடீரென நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கின்றது.

இரவிரவாக இப்பகுதிக்கு லொறிகளில் மரங்கள், கற்கள் போன்றவை கொண்டுவந்து இறக்கப்பட்டு வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மும்முரமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றன.

தடுத்து நிறுத்தவேண்டிய பொலீஸார் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தனர் என்று மக்கள் குற்றஞ்சாட்டினர்.

சமாதானத்திற்கு குந்தகம் விளைவிக்கும் ஜே.வி.பியினரின் அத்துமீறிய செயலைக் கண்டித்து திருகோணமலை நகரத் தமிழ் மக்கள் உடனடியாகத் தீவிர எதிர்ப்பு நடவடிக்கைகளில் குதித்தனர்.

இதனால், நகரத்தில் கடைகள் இழுத்து மூடப்பட்டன, பாடசாலைகளும் பகிஷ்கரிக்கப்பட்டன. வீதிமறியற்போராட்டங்களால் போக்குவரத்தும் தடைப்பட்டது. வழமைநிலை ஸ்தம்பிதம் அடைந்தது.

ஆனால், சிங்களப் பேரினவாதிகள் நேற்றுமுன்தினம் இரவு முதல் சமாதானச் சூழலை குலைக்கும் வகையில் அத்துமீறிய குடியேற்றங்களை மேற்கொள்ளப் பார்க்கின்றனர் என்று திருமலை பொது அமைப்புகள் தெரிவித்தன. (எ-க-13-151)

## முன்னாள் கல்விப் பணிப்பாளர் என்.சுந்தரலிங்கம் கொழும்பில் காலமானார்

யாழ்ப்பாணம், மார்ச் 4



யாழ். கல்வி வலயத்தின் முன்னாள் கல்விப்பணிப்பாளர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் புதன் பின்னிரவு கொழும்பில் மாரடைப்பால் காலமானார். இறக்கும் போது அவருக்கு வயது 64.

கடந்த ஒருவாரகாலமாக நோய்வாய்ப்பட்டிருந்த இவர். புதன்கிழமை முற்பகல் மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரியிலிருந்து அம்புலன்ஸ் மூலம் கொழும்புக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்தார்.

நீண்டகாலம் கொழும்பில் ஆசிரியராகக் கடமையாற்றிய இவர். பின்னர் கொழும்பு பாடநூல் சபையில் பணியாற்றியிருந்தார். தொடர்ந்து இலங்கை கல்வி நிர்வாக சேவையினுள் உள்வாங்கப்பட்டார்.

யாழ்.கல்வி வலயப் பணிப்பாளராகக் கடமையாற்றிய இரட்ணராஜாவின் மறைவினைத் தொடர்ந்து யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளராகப் பொறுப்பேற்ற இவர், குடாநாட்டின் கல்விச் செயற்பாடுகளில் தீவிர ஆர்வம் காட்டியிருந்தார். சிறந்த நாடக நடிகரான இவரின் இறுதிக் கிரியைகள் கொழும்பில் நடைபெறும். (எ)

## இலங்கை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், வெளிநாட்டு உதவிகள் அனைத்தும் தென்னிலங்கையில் இலங்கை அரசினால் முடக்கப்பட்டுள்ளன.

நிவாரணப் பணிகளைப் பொறுத்தவரை அனைத்து வெளிநாடுகளுமே சிறப்பாக உதவின. இந்திய இராணுவம் சில குறிப்பிட்ட பகுதிகளில் மட்டுப்படுத்தி செயற்பட்டதாக நாம் கேள்விப்பட்டோம். ஆனால், அவற்றை நேரடியாகப் பார்க்கவோ அல்லது அவற்றை அப்பகுதி மக்களிடம் இருந்து அறிந்துகொள்ளவோ எமக்கு முடியவில்லை.

தமிழர் தாயகப் பகுதிகளில் உதவிப் பணிகளில் ஈடுபடுவதற்கு இந்திய இராணுவம் கேட்டிருந்தால் நாம் அதனை சாதகமாவே பரிசீலித்திருப்போம். சர்வதேச உதவிகள் எமது பகுதிகளுக்குத் திருப்பப்பட வேண்டும் என்று கேட்டிருந்தோம். இந்திய இராணுவம் கோரி இருந்தால் அதனை நாம் சாதகமாகப் பரிசீலித்திருப்போம்.

இலங்கை விவகாரத்தில் இந்தியா அதிக அக்கறை செலுத்தி அதற்கான ஒரு தீர்வை பகிரங்கமாக முன்வைக்க வேண்டும் என்று அமைச்சர் கதிர்காமர் கூறுவது குறித்து கேட்கப்பட்டதற்கு பதிலளித்த தமிழ்ச்செல்வன், விடுதலைப் புலிகளுக்கும், இலங்கை அரசுக்கும் இடையில் தீர்வு ஏற்படக்கூடிய சூழ்நிலை இருக்கையில் அதனைப் புறந்தள்ளிவிட்டு சிங்கள அரசு இப்படிப் பேசிவருவது இந்தியாவை ஒரு இக்கட்டில் மாட்டும் முயற்சி என்றும், இது ஒரு காலந்தாழ்த்தும் போக்குமாகும்.

- இவ்வாறு மக்கள் பிரச்சினை தொடர்பாக எப்போதுமே பொறிவைத்து நடப்பது இலங்கை அரசின் வழமை. இங்கு தீர்வை முன்வைக்க வேண்டியவர்கள் சிங்களத் தலைவர்கள் தான். (எ-13)

## மரண அறிவித்தல்கள்

### கிறிஸ்டி கருணைரூபன் பொன்னுத்துரை

பண்டத்தரிப்பைப் பிறப்படமாகவும் நாயன்மார்கட்டை வசிப்பிடமாகவும் கொண்ட கிறிஸ்டி கருணைரூபன் பொன்னுத்துரை நேற்று (03.03.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வைத்தியகலாநிதி ஜெயராணி மனோகரி பொன்னுத்துரையின் அன்புக் கணவரும் பிறின்ஸ் டேவிட் கிருபாகரன் (கொழும்பு), சாம்சன் ஞானகரன் (யாழ்.செலான் வங்கி), ஜேக்கப் யோனத்தன் ஜீவாகரன் (கொழும்பு), ஷிராணி கிறிஸ்டீன்(ஆண்டு 11 மாணவி, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையுமாவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை குறித்து பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (4723)

*276,கனகரட்ணம் வீதி,*
*நல்லூர்.*

வைத்தியகலாநிதி
ஜெயராணி பொன்னுத்துரை (மனைவி).

### வல்லிபுரம் நடராசா

உயரப்புலம், ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சுதுமலை வடக்கு, ஈஞ்சலடியை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நடராசா நேற்று (03.03.2005) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் பொற்குணதேவியின் அன்புக் கணவரும் நாகலஷ்சுமி (கனடா), காலஞ்சென்ற இதயசூரியன், வாகீசன் (ஆசிரியர், சென். ஜோன்ஸ் கல்லூரி), வாசுதன் ஆகியோரின் தந்தையும் சர்வேஸ்வரன் (கனடா), காயத்திரி (ஆசிரியர், வேலணை கிழக்கு மகா வித்தியாலயம்) ஆகியோரின் மாமனாரும் ஆவார். அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.03.2005) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் பிற்பகல் 1.30 மணியளவில் இடம்பெற்று, தகனக்கிரியைகளுக்காக தாவடி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

வாகீசன் (மகன் - ஆசிரியர், சென். ஜோன்ஸ் கல்லூரி).

EXPOAIR எக்ஸ்போ எயார்
your friend in the skies... வானத்தில் உங்கள் நண்பன்...


தினசரி யாழ் - கொழும்பு விமான சேவை
ஒதுக்கீடுகளுக்கும் விமான பயணச்சீட்டுக்களுக்கும்
கொள்ளுப்பிட்டியில் - 011 2372 952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360 290 / 1
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891 / 6297, 0772 348888, 0772 349999
E-Mail : reservations@expoavi.com, jaffna@expoavi.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.03.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.